Not for sale

மார்ச் - ஏப்ரல் 2016

தமிழாக்கம்

# The Herald

## of Christ's Kingdom



## நினைவுகூறுதல்

நம்முடைய ஆண்டவரின் கடைசி ஏழு நாட்கள் • எருசலேமுக்குள் பவனி வருதல்

நினைவுகூறுதல் • விருந்தை ஆசரிக்கக்கடவோம்

நம்முடைய ஆண்டவரின் உயிர்த்தெழுந்த காட்சிகள் • அவர் எழுந்தார்

நினைவுகூருதல்

# ஆதியிலே



"என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள்" (1 கொரிந்தியர் 11:24). அப்போஸ்தலனாகிய பவுலின் வழியாகச் சொல்லப்பட்ட நம்முடைய ஆண்டவருடைய இந்த வார்த்தைகள், இயேசுவின் மரணம் மற்றும் உயிர்த்தெழுதலின் முக்கியத்துவங்களைக்குறித்தும், ஆண்டவரின் நினைவுகூருதலை அனுசரிப்பதற்காக நாம் பெற்றுள்ள சிறப்புரிமை மற்றும் பொறுப்புகளின் முக்கியத்துவத்தைக்குறித்தும் நமக்கு நினைப்பூட்டுகிறது. பரிபூரண மனுஷனாகிய அவருடைய மரணத்தினால், விசுவாசமுள்ள சபைக்கு மட்டுமல்ல, முழு மனுக்குலத்திற்கும் இரட்சிப்பை இயேசு உறுதிபடுத்தினார். தேவன் அவருடைய பலியை அங்கீகரித்ததும் மற்றும் தேவன் தன் வல்லமையைப் பயன்படுத்தி அவர் சபைக்கும் இஸ்ரயேலுக்கும் முழு மனுக்குலத்திற்கும் அவர் கொடுத்த வாக்குத்தத்தங்களை நிறைவேற்றுவதுமாகிய இந்த இரண்டு செயல்களையும், கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் மெய்ப்பித்துக் காட்டியது. நினைவுகூருதலின் ஆசரிப்பில் இவற்றையெல்லாம் நினைவுகூருவது, நமக்குக் கிடைத்திருக்கும் பாக்கியமாகும். மேலும் இது நம்முடைய பரிசுத்தமான கடமையுமாகி நமக்கு மிகுந்த மகிழ்ச்சியையும் தரும்.

இந்த ஹெரால்டு பிரதி இயேசுவின் ஊழியத்தின் கடைசி வாரம், நினைவுகூருதலின் ஏற்பாடு, அவருடைய மரணம் மற்றும் உயிர்த்தெழுதல் மேலும் அந்த மரணம் மற்றும் உயிர்த்தெழுதலின் வழியாக நாம் பெறும் நலன்களை மையப்படுத்துகிறது.

"நம்முடைய ஆண்டவரின் கடைசி ஏழு நாட்கள்" என்ற முதல் கட்டுரை, இயேசுவின் பூமிக்குரிய ஊழியத்தின் கடைசி வாரத்தின் சிறப்புகளை மறு ஆய்வு செய்கிறது. அவர் எருசலேமுக்குச் செல்ல வேண்டுமென்ற உறுதியான தீர்மானம், மரியாளின் அபிஷேகம், அவருடைய இறுதியான பொது உபதேசங்கள், வேதபாரகர் பரிசேயர்களோடு நடந்த மோதல், அவருடைய சீஷர்களோடு அமைதியான சில நொடிகள் போன்ற அனுபவங்களைக் கூறும் இந்தக் கட்டுரை நம் கிறிஸ்தவ வாழ்க்கைக்குப் பயன்படக்கூடிய பாடங்களைத் தருகிறது.

இயேசு எருசலேமுக்குள் பெரும் வெற்றியுடன் நுழைவதை, "எருசலேமுக்குள் பவனி வருதல்" என்ற தலைப்பு விவரிக்கிறது. இயேசு பவனி வந்த மிருகம் மற்றும், "இருவழி சந்தியில்" (மாற்கு 11:4) கண்டுபிடிக்கப்பட்ட மிருகங்கள் கொடுக்கும் ஆவிக்குரிய பாடங்களை இது ஆய்வு செய்கிறது. காசுக்காரர்களை இயேசு நேருக்கு நேர் சந்தித்ததையும் இதில் குறிப்பிடப் பட்டுள்ளது.

"நினைவுகூருதல்" என்ற மூன்றாம் கட்டுரை, இயேசு நினைவு கூருதலின் பண்டிகையை ஏற்படுத்திய தையும், நமக்கு அவைகள் எதைப் பொருள்படுத்துகிறது என்பதையும் மையப்படுத்துகிறது. அப்பம் மற்றும் பாத்திரத்தின் பொருளையும் இயேசுவின் பலியில் நாம் பங்கெடுப்பதினால் பெறும் நன்மைகளையும், சிறப்புரிமைகளையும் குறித்து இது எண்ணிப்பார்க்கிறது.

1 கொரிந்தியர் 5:8-ஆம் வசனத்தில் அப்போஸ்தலனாகிய பவுலின் வார்த்தைகளை, "விருந்தை ஆசரிக்கக்கடவோம்" என்ற தலைப்பில் காணலாம். பஸ்காவுக்கும், யோவான் 6-ஆம் அதிகாரத்தில் நினைவுகூருதலின் அனுசரிப்பில் மாம்சத்தைப் புசித்து இரத்தத்தைப் பானம்பண்ண வேண்டுமென்ற இயேசுவின் வார்த்தைகளுக்கும் இடையிலுள்ள ஒற்றுமைகளை ஆராய்கிறது.

"நம்முடைய ஆண்டவர் உயிர்த்தெழுந்தப் பின்" தம்முடைய சீஷர்களுக்கு பத்துமுறை காட்சியளித்தார். இவைகளுக்குள் காணப்படும் ஒப்புமைகளையும், வேறுபாடுகளையும் மற்றும் அவைகளிலிருந்து நாம் பெறக்கூடிய ஆவிக்குரிய பாடங்களை, "நம்முடைய ஆண்டவரின் உயிர்த்தெழுந்த காட்சிகள்" என்ற அடுத்த கட்டுரை மறு ஆய்வு செய்கிறது.

இயேசுவின் உயிர்த்தெழுதல் மற்றும் அவருடைய ஈடுபலிக்கும் உள்ள தொடர்பைக்குறித்து, "அவர் எழுந்தார்" என்ற இறுதி கட்டுரை விவரிக்கிறது. ஈடுபலியின் செயல் நான்கு படிகளில் நம்முடைய ஆண்டவரினால் எவ்வாறு நிறைவேற்றப் படுகிறது என்பதை இந்தக் கட்டுரை கூர்ந்து ஆராய்கிறது.

இந்தப் பிரதியில் கொடுக்கப்பட்டுள்ள ஒவ்வொரு கட்டுரையும் மிகுந்த பரிசுத்தமான விருந்தை அனுசரிப்பதற்கு நம்முடைய இருதயங்களையும், வாழ்க்கைகளையும் ஆயத்தப்படுத்துவதற்கு உதவியாக இருக்கக்கடவது.

## மார்ச் / ஏப்ரல் 2016


| | |
|---|---|
| **நம்முடைய ஆண்டவரின் கடைசி ஏழு நாட்கள்** | 37 |
| இயேசுவின் முன்மாதிரி | |
| **எருசலேமுக்குள் பவனிவருதல்** | 43 |
| மேசியாவின் அறிமுகம் | |
| **நினைவுகூருதல்** | 47 |
| நம்முடைய ஆண்டவரை நினைவுகூருதல் | |
| **விருந்தை ஆசரிக்கக்கடவோம்** | 51 |
| நினைவுகூருதலை அனுசரித்தல் | |
| **நம்முடைய ஆண்டவரின் உயிர்த்தெழுந்த காட்சிகள்** | 57 |
| பத்து என்ற எண், ஏழு மற்றும் மூன்றின் மொத்தத் தொகையாகும் | |
| **அவர் எழுந்தார்** | 62 |
| இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலும் ஈடுபலியும் | |
| **தீர்க்கதரிசனத்தில் இன்று** | 66 |
| நகரமயமாக்கப்பட்ட உலகம் | |

இயேசுவின் முன்மாதிரி

# நம்முடைய ஆண்டவரின் இறுதி ஏழு நாட்கள்



Joe Megacz

"இளைப்புள்ளவர்களாய்... தமக்கு விரோதமாய்ப் பாவிகளால் செய்யப்பட்ட இவ்விதமான விபரீதங்களைச் சகித்த அவரையே நினைத்துக்கொள்ளுங்கள்" - எபிரெயர் 12:3

ஏப்ரல் 21-ஆம் தேதி, வியாழன் அன்று இயேசுவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றும் சீஷர்கள் ஆண்டவரின் ஞாபகார்த்த நாளை நினைவுகூரும்படி ஒருமித்துக் கூடுவார்கள். அந்த இரவு நம் ஆண்டவரோடு பெரும் ஆவிக்குரிய ஆழம் மற்றும் நெருக்கத்தின் உணர்வுகள், அந்த வருடத்தில் நாம் பெற்ற மற்ற அனுபவங்களுக்கு ஈடு இணை அற்றதாக இருக்க வேண்டும். ஏப்ரல் 21-ஆம் தேதி அன்று இந்தப் பூமியின்மேல் நம்முடைய ஆண்டவரின் கடைசி ஏழு நாட்களில் நடந்த சம்பவங்களை ஆழ்ந்து யோசிப்பது நம்முடைய தியானத்திற்கு மிகச் சிறந்த ஒன்றாகும். ஒவ்வொரு நாளும் நம்முடைய ஆண்டவருக்கு நிகழ்ந்த அனுபவங்களை மனதில் நிறுத்தி, நம் ஓட்டத்தில் இவை நமக்கு ஒரு முன் மாதிரியாக உதவி செய்து வரக்கூடிய வாரங்களுக்கு மட்டுமல்ல ஒவ்வொரு நாளும் பயன்பட வேண்டும். அந்த வாரத்தின் நாளில் ஏற்பட்ட சம்பவங்களைக்குறித்து சில புலமைமிக்க விவாதங்களும் உண்டு. அந்தச் சம்பவங்களின் காலத்தைக்குறித்து விவாதிப்பதற்கல்ல, மாறாக நம் ஒவ்வொருவருக்கும் நடைமுறைக்குரிய மேம்பட்ட பாடங்களைப் பெறுவதே நம்முடைய நோக்கமாய் உள்ளது,

### பஸ்காவுக்கு முன் - ஏழாம் நாள்

இந்தப் பூமியின்மேல் கடைசி ஏழு நாட்களில் நடந்த இயேசுவின் சம்பவங்கள், வடக்கிலிருந்து எரிகோவின் வழியாக எருசலேமுக்குப் பயணித்தது முதல் துவங்கியது. இதைப் பற்றிய குறிப்பு மாற்கு 10:32-34 வசனங்களில் காணலாம். இயேசு ஏளனம் செய்யப்பட்டு, கசையடி கொடுக்கப்பட்டு, துப்பப்பட்டு, கொலை செய்யப்படுவார் என்று இயேசு தம்முடைய சீஷர்களிடம் நடந்தவாரே கூறினார். ஆயினும் இயேசு அவர்களுக்கு **முன்** சென்றதாகக் கூறப்படுகிறது - அவர் செய்த காரியங்களை அவருக்குப் பின் செய்யவும், அவர் உபத்திரவப்பட்டதுபோல இவர்களும் உபத்திரவப்பட வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டதை இது காட்டுகிறது. நம்முடைய ஆண்டவர் அவருடைய பயணத்தைத் தாமதிக்கவுமில்லை, வீணாக்கவு மில்லை. அவர் சரியான நோக்கத்தோடு மனப்பூர்வமாக தயக்கமின்றி பயணித்தார். அவரிடமிருந்த தைரியத்திற்கான இந்த எடுத்துக்காட்டை நாம் புகழ்ந்து அவர் குணங்களில் இருந்த வலிமையை நாம் பின்பற்ற வேண்டும். நம்முடைய ஆண்டவரைப்போல நாமும் பின்னிட்டுப்பார்க்கக்கூடிய சிந்தையைப் பெறாமல், இந்த இடுக்கமான வழியில், நாம் பயணிக்கும்போது, நம்முடைய பலியிலும்கூட பிதாவின் சித்தத்தை நிறைவேற்றக்கூடிய சிந்தையைப் பெற்றவர்களாக இருக்க வேண்டும்.

யாக்கோபும், யோவானும் இராஜ்யத்தில் இயேசுவின் இரு பக்கங்களில் அமர்ந்துகொள்வதற்கு அனுமதி கேட்டு விண்ணப்பித்தார்கள் மாற்கு 10:35-40. மத்தேயு சுவிசேஷத்தில் அவர்களின் தாய் இப்படியாக இயேசுவினிடம் விண்ணப்பித்ததாகக் கூறப்படுகிறது. இந்த இரண்டு சந்தர்ப்பங்களிலும், சுயநலமான பதவிக்காகவும், வல்லமைக்காகவும் அல்ல, நித்தியமாக இயேசுவோடு நெருங்கி இருப்பதற்கான ஒரு விருப்பத்திற்காகவும், அன்புக்காகவும் அந்த விண்ணப்பங்கள் ஏறெடுக்கப் பட்டதென்று இயேசு நன்கு அறிந்திருந்தார். "நான் குடிக்கும் பாத்திரத்தில் நீங்கள் குடிக்கவும், நான் பெறும் ஸ்நானத்தை நீங்கள் பெறவும் உங்களால் கூடுமா?" (மத்தேயு 20:22) என்று இயேசு ஒரு கேள்வியோடு பதிலளித்தார். "எங்களால் கூடும்" என்று அவர்கள் பதிலளித்தார்கள். அங்கிருந்த மற்ற பத்துப்பேரும் இதைக் கேட்டபோது, அந்த இருவர் மீதும் கடும் சீற்றமடைந்தார்கள். அவர்களுக்குப் பதிலளிக்கும் வகையில், இயேசு மனத்தாழ்மை மற்றும் ஒருவருக்காக ஒருவர் பணி செய்யும் முக்கியத்துவத்தைக் கற்றுக்கொடுத்தார், "அப்பொழுது, இயேசு அவர்களைக்கிட்டவரச் செய்து: புறஜாதியாருக்கு அதிகாரிகளாக எண்ணப்பட்டவர்கள் அவர்களை இறுமாப்பாய் ஆளுகிறார்கள் என்றும், அவர்களில் பெரியவன் அவர்கள்மேல் கடினமாய் அதிகாரம் செலுத்து கிறார்கள் என்றும் நீங்கள் அறிந்திருக்கிறீர்கள். உங்களுக்குள்ளே அப்படி இருக்கலாகாது; உங்களில் எவனாகிலும் பெரியவனாயிருக்க விரும்பினால், அவன் உங்களுக்குப் பணிவிடைக் காரனாயிருக்கக்கடவன். உங்களில் எவனாகிலும்

முதன்மையானவனாயிருக்க விரும்பினால், அவன் எல்லாருக்கும் ஊழியக்காரனாயிருக்கக்கடவன்" (மாற்கு 10:42-44).

தேவனுடைய ஜனங்கள் மற்ற எந்தப் பாடங்களைக் காட்டிலும், மனத்தாழ்மை என்ற பாடத்தைக் கவனமாகக் கற்றுக்கொள்ள வேண்டும். சிறுமந்தையிலுள்ள சிறிய நபரிலிருந்து போதகர் மற்றும் மூப்பர்வரை, இந்த மனத்தாழ்மை என்ற பாடத்தையே கவனமாகக் கற்றுக்கொள்ள வேண்டும்.

அந்தநாளில் நடந்த மற்ற சம்பவங்களில் பார்வையற்ற பர்திமேயு குணமாக்கப்படுவதும், அந்தக் குள்ளமனுஷனாகிய சகேயுவோடு உணவு புசித்ததும் உள்ளடக்கப்பட்டுள்ளது. சகேயுவின் உயரம் குறைவாக இருந்தபடியினால் அவன் இயேசுவைக் காணும்படி ஒரு மரத்தில் ஏறினான். இந்த இரண்டு சம்பவங்களிலும், இயேசுவினிடத்தில் விசுவாசத்தோடு வரும் **அனைவரையும்** நம்முடைய ஆண்டவர் மனப்பூர்வமாக ஆசீர்வதிப்பார் என்பதை மாதிரியாகக் காட்டப்படுகிறது. நாமுங்கூட, நம்முடைய புரிந்துகொள்ளுதலின் கண்கள் திறக்கப்படாதபோது, பார்வையற்றவர்களாக இருந்தோம். நாமுங்கூட பரிபூரண மனுஷனாக இராமல் வளர்ச்சிக் குன்றினவர்களாக இருந்தோம். ஆனால் நம்முடைய விசுவாசம் பர்திமேயுவைப்போல் உறுதியாக இருந்தது. இயேசுவைப்பற்றி அவர் கேட்டவுடன், அவரை விசுவாசித்து இரக்கத்திற்காக அவரை நோக்கிச் சத்தமிட்டான். அவன் பார்வையடையும் வரையில் அமைதியாக இருக்கவில்லை. அதுபோல அவருடைய சத்தியத்தை நம்முடைய இருதயங்கள் காணவேண்டுமென்ற விருப்பத்தை ஆண்டவர் கண்டு, யுகங்களைப்பற்றிய தெய்வீக ஏற்பாட்டின் சத்தியத்திற்கு நம்முடைய ஆவிக்குரிய கண்களைத் திறந்தார். சகேயுவைப்போல், நாமும் இயேசுவைக் காணும்படி உயர்வான நிலைக்கு உயர்த்தப்பட்டோம். அதாவது, அவருடைய ஈடுபலியின் பொருளை அறிந்து, விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படும் உரிமையைப்பெற்று, அவரோடு இணைந்து, பலி செலுத்துவதற்கு வாய்ப்புப்பெற்றதை அறிந்துகொண்டோம். அர்ப்பணிக்கப்பட்ட இருதயங்களாகிய நம் வீட்டிற்குள் இயேசு பிரவேசித்து அங்கு நம்மோடு அவர் வாசம் செய்கிறார். இப்படியாக நாம் சகேயுவைப்போல் நம்முடைய பாதி சொத்துக்களையல்ல, நம்முடைய முழு அர்ப்பணிப்பில் சிறிதளவும் மீதியில்லாமல் கொடுப்பதற்கு நாம் உணர்த்தப்படுகிறோம்.

**பஸ்காவுக்கு முன் - ஆறாம் நாள்**

பஸ்காவுக்கு ஆறு நாட்களுக்கு முன் நடந்தச் சம்பவங்கள் யோவான் 12:1-8 வசனங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இதில் மார்த்தாள், மரியாள் மற்றும் முன்னதாக மரணத்திலிருந்து உயிர்த்தெழுப்பப்பட்ட லாசருவின் வீட்டில் இயேசுவும் அவருடைய சீஷர்களும் விருந்துண்டார்கள். மரியாள் இயேசுவின் பாதங்களை விலையேறப்பெற்ற தைலத்தினால் அபிஷேகித்து அவளுடைய தலை முடியினால் அதைத் துடைத்தாள். அந்தச் சுகந்த வாசனை வீடு முழுவதும் நிரம்பியது, மரியாள் ஆண்டவருக்குச் செய்த மிகப்பெரிய பணியை, அவளுடைய தலை மயிர் பிரதிபலித்தது.

பஸ்காவுக்கு ஆறு நாட்களுக்கு முன்பாக நடந்த இந்தச் சம்பவங்களில் அன்பே முக்கியப் பாடமாக மையப்படுத்தப்படுகிறது. அப்போஸ்தலர்களைக் காட்டிலும் ஓர் ஆழமான அன்பையும், பக்தியையும் ஆண்டவர் மரியாளிடம் கண்டார். ஆண்டவர்மேல் வைத்திருந்த அன்பையும், பயபக்தியையும் அவள் வார்த்தைகளினால் அல்ல, அவள் கிரியைகளினால் வெளிப்படுத்தினாள். ஸ்தரீகளுக்குரிய விலையேறப்பெற்ற அலங்காரமான தன்னுடைய தலை மயிரை எடுத்துப் பயணத்தில் சோர்ந்துபோன அவளுடைய ஆண்டவரின் கால்களைத் துடைப்பதற்கு ஒப்புக்கொடுத்தாள். அவளிடமிருந்த சிறப்பானதை, மிகுந்த தாழ்மையுடன் குறைந்த மதிப்புள்ள அவருடைய பணிக்காக அர்ப்பணித்தாள். அவள் அபிஷேகித்த தைலத்தின் மதிப்பு மிக விலையுயர்ந்ததாக இருந்தபோதிலும் - (ஒரு கூலிக்காரனுடைய ஒரு வருட சம்பளம், இந்நாளில் 10,000 டாலர் மதிப்புள்ள பணம்), மரியாள் அதை மகிழ்ச்சியோடு அர்ப்பணித்தாள். அதின் நறுமணம் வீடு முழுவதும் நிரம்பியது.

இதில் நமக்குள்ள தனிப்பட்ட பயன்பாடு என்ன? மரியாள் செய்ததுபோல, இயேசுவின் பாதங்களை நாம் துடைத்து ஆறுதலளிக்க முடியாது. ஆனால் அவருடைய பாத அங்கத்தினர்களை நாம் அபிஷேகித்து ஆறுதலளிக்க முடியும் - நம் மத்தியில் இருக்கும் நம்முடைய சகோதரர்கள் - நம்முடைய அன்பு, கனிவு, இரக்கம், ஆறுதல், உற்சாகம், சாந்தம், பொறுமை, புரிந்துகொள்ளுதல் மற்றும் பணி செய்யக்கூடிய நறுமணத்தினால் அவர்களை அபிஷேகிக்கலாம். இயேசுவுக்காக மரியாள் கொண்டிருந்த அன்பைப்போல, நாம் நம்முடைய சகோதரர்களிடம் அன்பு கொண்டிருந்தால், நம்முடைய ஐக்கியத்தின் முழு வீடும் நம்முடைய பக்தியின் நறுமணத்தினால் நிரப்பப்படும். நம்மை நாமே வெறுத்து, இந்தப் பலியை மிகுந்த மனத்தாழ்மையோடு ஏறெடுக்கும்பொழுது அது மிகவும் விலையேறப்பெற்றதாகவும், நம் ஆண்டவரின்

மதிப்பில் அது மிகவும் விசேஷமானதாகவும் இருக்கிறது.

**பஸ்காகவுக்கு முன் - ஐந்தாம் நாள்**

பஸ்காவுக்கு ஐந்து நாட்களுக்கு முன் நடந்த சம்பவங்கள் மத்தேயு 21:1-11 வசனங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளது. அந்த நாளில் இயேசு, இஸ்ரயேலின் இராஜாக்கள் வழக்கமாக வந்தபடி கழுதையின்மேல் எருசலேமுக்குள் பவனிவந்தார். அவர் வந்தபோது, அங்குள்ளவர்கள் தங்களுடைய வஸ்திரங்களையும், மரக்கிளைகளையும் பாதையில் பரப்பினார்கள். "தாவீதின் குமாரனுக்கு ஓசன்னா! கர்த்தரின் நாமத்தினாலே வருகிறவர் ஸ்தோத்திரிக்கப்பட்டவர்" (மத்தேயு 21:9) என்று அவர்கள் ஆரவாரித்தார்கள்.

இந்தச் சம்பவங்களிலிருந்து நாம் அநேகப் பாடங்களை எடுத்துக்கொள்ளலாம். ஆனால் ஒரு நுட்பமான பாடம் மத்தேயு 21:5-ஆம் வசனத்திலுள்ள வார்த்தைகளில் காணப்படுகிறது. "தீர்க்கதரிசியினால் உரைக்கப்பட்டது நிறைவேறும்படி இதெல்லாம் நடந்தது." நம்முடைய ஆண்டவர் பழைய ஏற்பாட்டை முழுமையாகக் கற்றறிந்தவராக, தம்மைக்குறித்துச் சொல்லப்பட்ட தீர்க்கதரிசனங்களையும் நன்கு அறிந்திருந்தார். ஒரு மேசியாவாக - அவர் என்ன செய்ய வேண்டும், அவர் எப்பொழுது, எப்படி இருக்க வேண்டும் மற்றும் அவர் எப்படி மரிக்க வேண்டும் என்பதை அறிந்திருந்தார். இப்படியாக இயேசு, தம்மைக்குறித்து தீர்க்கதரிசனமாகப் பேசப்பட்ட காரியங்களைச் சரியான நேரத்திலும், சரியான விதத்திலும் நிறைவேற்றுவதற்கு அவர் கவனமுள்ளவராக இருந்தார். கழுதையின்மேல் பவனி வரும்போது நம்முடைய ஆண்டவர் சகரியா 9:9-ஆம் வசனத்தில் சொல்லப்பட்டதை நிறைவேற்றினார். ஜனங்கள் ஆரவாரிப்பதையும் இந்த வசனம் முன் அறிவித்தது. ஏசாயா 62:11-ஆம் வசனத்தில் கூறப்பட்ட தீர்க்கதரிசனம், நம் ஆண்டவர் மக்களிடம் கூறின வார்த்தைகளின் மூலம் நிறைவேறியது. அந்த நாளின் நிகழ்ச்சிகள் மற்றும் அதனால் நிறைவேறப் போகும் தீர்க்கதரிசனங்களின் விளைவுகளைப்பற்றியும் நம் ஆண்டவர் சிந்தித்துக்கொண்டிருந்த வேளையில், சில பரிசேயர் அவரிடம் வந்து தம் சீஷரை அதட்ட வேண்டுமென்று கூறியபோது, "இவர்கள் பேசாமலிருந்தால் **கல்லுகளே** கூப்பிடும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்" (லூக்கா 19:40). மற்றொரு வார்த்தைகளில் சொல்லப்போனால், இந்தத் தீர்க்கதரிசனம் கட்டாயமாக நிறைவேற வேண்டியதாய் இருந்தது.

இயேசு மரிப்பதற்கு முன்பதாகச் செய்ய வேண்டிய காரியங்களின் வரிசையே, பழைய ஏற்பாட்டின் வசனங்களின் நிறைவேற்றமாகும். எவராயினும் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட சந்ததியைக்குறித்த தீர்க்கதரிசனங்களை வாசித்து, இயேசுவின் வாழ்க்கையைத் திரும்பிப்பார்க்கும்போது, இவரே தேவனுடைய குமாரனாகிய மேசியா என்று உறுதிப்படுத்தும்படிக்கு இக்காரியங்களை அவர் செய்ய வேண்டியதாய் இருந்தது.

இதில் நமக்கு உண்டான பாடம் என்ன? இயேசுவின் பிறந்த நேரம் மற்றும் அவர் மரிக்க வேண்டிய விதத்தைக்குறித்து வசனங்களில் காணப்படுவதுபோல, நம்மைக்குறித்து எந்த வசனமும் சொல்லப்படவில்லையே! ஆயினும் நம்மைக்குறித்து தீர்க்கதரிசனமாக சில வசனங்கள் உண்டு - நம் வாழ்க்கையைக்குறித்து வேதாகமம் கூறும் சில காரியங்களில் நாம் கவனமாய் இருந்து அதைக் கடைபிடிக்கவும் வேண்டும். நம்மைக்குறித்த சில வேதபகுதிகளையும், நம்முடைய ஆண்டவரோடு உண்மையான கிறிஸ்தவர்கள் கொண்டிருக்கும் ஐக்கியத்தை விவரிக்கக்கூடிய சில வேதப்பகுதி களை இப்பொழுது காணலாம்.

- "தேவன் எவர்களை முன்னறிந்தாரோ அவர்களைத் தமது குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாயிருப்பதற்கு முன்குறித்திருக்கிறார்" (ரோமர் 8:29).

- "கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாமலிருக்கிறீர்களா?" (ரோமர் 6:3).

- "எதிர்க்கிறவர்களால் ஒன்றிலும் மருளாதிருக்கிறீர்களென்று உங்களைக்குறித்து நான் கேள்விப்படும்படி, எவ்விதத்திலும் நீங்கள் கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குப் பாத்திரராக மாத்திரம் நடந்துகொள்ளுங்கள்" (பிலிப்பியர் 1:27).

- "கிறிஸ்துவுடனேகூட நாம் மகிமைப்படும்படிக்கு அவருடனேகூடப் பாடுபட்டால் அப்படியாகும்" (ரோமர் 8:17).

வசனங்கள் நிறைவேறும்படியாக நாம் செய்யக்கூடிய காரியங்கள் அனைத்தும் நமக்காக மட்டுமல்ல, இயேசுவுக்கும் அது தேவனுடைய சித்தமாய் இருந்தது. இயேசுவுக்கு நடந்ததுபோல, நமக்கும் இது ஒரு சாட்சியாக இருக்கும். ஒருவர் இராஜ்யத்தில் கிறிஸ்துவின் மணவாட்டியாகிய சபை

வகுப்பாரைக்குறித்த வசனங்களைப் படித்து நம்முடைய வாழ்க்கைகளை அறிந்து கொள்ளும்போது, அவர்களுடைய குருட்டாட்டம் நீக்கப்பட்டு அவர்கள் திரும்பிப்பார்க்கும்பொழுது, நாம் நிச்சயமாகப் பரலோக தந்தையின் பிள்ளைகளும், நம்முடைய ஆண்டவரின் சகோதரர்களும் என்று நிச்சயித்துக்கொள்வார்கள்.

**பஸ்காவுக்கு முன் - நான்காம் நாள்**

பஸ்காவுக்கு நான்கு நாட்களுக்கு முன் நடந்த சம்பவங்கள் மாற்கு 11:12-17 மற்றும் 20-24 வசனங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளது. நம்முடைய ஆண்டவரைப் பொறுத்தவரையில், மற்ற நாட்களைப்போல இந்த நாளும் அவருடைய தந்தையின் வேலைகளைச் செய்துவந்தார். ஆலயத்திலிருந்து மிருகங்களையும், காசுக்காரர்களையும் இயேசு விரட்டியடித்ததே அந்த நாளின் குறிப்பிடத்தக்க சம்பவமாக இருந்தது (மாற்கு 11:15-17).

எருசலேமிலுள்ள ஆலயம் மூன்று நீதிமன்றங்களினால் சூழப்பட்டிருந்தது; மனுஷருடைய நீதிமன்றம், அதற்கு வெளியே ஸ்திரீகளுடைய நீதிமன்றம் மற்றும் அதற்கு வெளியே புறஜாதிகளுடைய நீதிமன்றம். அங்குக் காசுக்காரர்கள் தொழில் நடத்தி வந்தனர். ஆடுகளையும் புறாக்களையும் கொண்டுவருவதற்குச் சாதகமற்ற சூழ்நிலையில் அங்குவந்த பயணிகளுக்கு மிருகங்களை விற்கக்கூடிய வேலைகளையும் இந்தக் காசுக்காரர்கள் வியாபாரம் செய்து வந்தார்கள். ஆலயத்திற்குச் செலுத்தக்கூடிய வரி ஆசரிப்புக்கூடாரத்தின் சேக்கல் என்ற அளவின்படி செலுத்த வேண்டியதாக இருந்ததினால், அங்குள்ள பொது ஜனங்கள் ரோம நாணயங்களைப் பயன்படுத்தினதினால் பணத்தை மாற்றக்கூடிய வேலைகளையும் இவர்கள் செய்தார்கள். ஆலயத்தில் பயன்படுத்தப்பட்ட இந்த நாணயம் பல நூற்றாண்டுகளாகச் செய்யப்படவில்லை. ஆகவே அவைகள் காண்பதற்கு அரிதாக இருந்தது. எருசலேமின் எல்லைக்குள்ளும் காணப்படுவது அரிதாக இருந்தது. இந்த நாளில் நம்முடைய ஆண்டவர் காசுக்காரர்களை ஆயலத்திலிருந்து விரட்டி மிருகங்களைத் துரத்தியடித்து, அவைகளின் உரிமையாளர்களைக் கடுஞ்சீற்றத்தோடு வெளியேற்றினார். அவருடைய தந்தையின் ஜெப வீட்டை கள்ளர் குகையாக்கினார்கள் என்று அவர் அறிவித்தார்.

எருசலேமிலுள்ள ஆலயத்தைச் சுத்திகரிக்கக்கூடிய வேலையானது, சபை வகுப்பார் முழுவதற்கும் பொருந்தக்கூடியதாய் இருக்கிறது. இன்னும் முக்கியமாக வருடத்தின் இந்தக் காலத்திற்குப் பொருந்தக்கூடியதாக உள்ளது. இயேசு ஆலயத்திலிருந்து அசுத்தங்களை வெளியேற்றினது போல, நமக்குள்ளிருக்கும் அனைத்து உலகத்தின் உந்துதல்களையும், அசுத்தங் களையும் வெளியேற்றி யேகோவா தேவன் வசிப்பதற்கு ஏற்ற வாசஸ்தலமாக இருக்க வேண்டும். நமக்குள் ஏற்படும் இந்தப் போராட்டத்தில் அரைமனதோடு அல்ல, இயேசுவைப்போல் நாமும் தைரியத்தோடு தீர்மானிக்கப்பட்ட கிரியைகளை நடப்பிக்க வேண்டும். அப்படிச் செய்தால் மட்டுமே நாம் வெற்றியடைய முடியும்.

காலையில் ஆண்டவர் தம்முடைய சீஷர்களோடு பெத்தானியாவிலிருந்து நடந்து செல்கையில், கனிகொடாத ஒரு அத்திமரத்தைச் சபித்ததே அந்த நாளில் நடந்த மற்றொரு குறிப்பிடத்தகுந்த சம்பவமாகும். மற்ற மரங்களைப்போல் அல்லாமல், அத்தி மரமானது இலைகளுடன் இருக்கும்போது, டாக்ஷ் (taqsh) என்று அரேபியர்களால் அழைக்கப்படும். ஆரம்ப கால பயிரின் கனியை விளைவிக்கும் நிஜமான அத்திப்பழத்தின் முன்னோடியே இந்த டாக்ஷ் என்ற கனியாகும். இந்த டாக்ஷ் ஆரம்ப காலத்தில் விளையவில்லை என்றால், அந்த ஆண்டு அந்த மரம் எவ்வித அத்திப்பழத்தையும் விளையச்செய்யாது. டாக்ஷின் விளைச்சல் இல்லாத, இந்த இலை அடர்ந்த அத்திமரம் யூத தேசத்தையே குறிக்கிறது. தேவனுடைய ஜனமென்று இஸ்ரயேல் தங்களை ஏற்றுக்கொண்டபோதிலும் நடைமுறையில் பலன்கொடுக்காத இஸ்ரயேலராக இருந்தார்கள். இஸ்ரயேல் தேசத்தை முழுமையாக ஆண்டவர் புறக்கணித்ததை இந்த அத்திமரம் சபிக்கப்பட்டதில் சித்தரிக்கப்படுகிறது.

மறுநாள் காலை அவர்கள் அந்த அத்திமரத்தைக் கடந்து செல்லும்போது, மிக விரைவாகப் பட்டுப்போன அந்த அத்திமரத்தை சீஷர்கள் கண்டு ஆச்சரியப்பட்டார்கள். "தேவனிடத்தில் விசுவாச முள்ளவர்களாயிருங்கள்" (மாற்கு 11:22) என்று பதிலளித்து இந்த அற்புதத்திலுள்ள ஆழமானப் பொருளை அவர்களின் சிந்தனைக்குக் கொண்டுவந்தார். தேவனுடைய வல்லமையே அந்த வேலையைச் செய்தது. மேலும் அந்தச் சர்வவல்லமை அவர்களின் சார்பாக அவர்களின் விசுவாசத்திற்கு ஏற்றபடி செயல்படுத்தப்படும். நாம் நம்பிக்கையுள்ள விசுவாசத்தில் இளைப்பாறிக் கொண்டிருக்கிறோமா? நாம் விசுவாசத்தின் கனி மற்றும் ஆவிக்குரிய மற்ற கனிகளை

உடையவர்களாக இருக்கின்றோமா? ஆண்டவர் நம்மை கடந்துச்சென்றால், நம்முடைய கிளைகளில் அவர் எதைக் காண்பார்?

**பஸ்காவுக்கு முன் - மூன்றாம் நாள்**

பஸ்காவுக்கு மூன்று நாட்களுக்கு முன் இயேசு ஆலயத்தில் இறுதியாகப் பிரசங்கித்தார். இயேசுவின் இந்தப் பொதுவான ஊழியத்தைப்பற்றி மத்தேயு 22, 23 மற்றும் 25-ஆம் அதிகாரங்களிலும் அதற்கு இணையாக மாற்கு 11-13 அதிகாரங்களில் காணப்படுகிறது. பரிசேயர் மற்றும் சதுசேயர்களின் தந்திரமான கேள்விகளுக்கு இயேசு திறமையாகப் பதிலளித்தார். சத்தியத்தைப் புரிந்துகொள்ள வேண்டுமென்ற உண்மையான ஆர்வத்தோடு அங்குக் கேள்விகள் கேட்கப்படவில்லை. ஆண்டவரைக் காட்டிலும் தாங்கள் நியாயப்பிரமாணத்தை மிகச் சிறப்பாகப் புரிந்து கொண்டவர்கள் என்று காண்பிக்கும்படி, பதிலளிக்க முடியாத கேள்விகளை இயேசுவிடம் கேட்டார்கள். நாம் வேதம் வாசிப்பதிலும் சத்தியத்தைப் பகிர்ந்துக்கொள்ளும்பொழுதும் பரிசேயர்களின் புளித்த மாவைக்குறித்து எச்சரிக்கையாய் இருக்க வேண்டும். தேவனுடைய வார்த்தை மற்றும் அவருடைய சித்தத்தை நாம் தெளிவாகப் புரிந்துகொள்ளுதலினால்வரும் பெருமைகளுக்கும் நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். மேலும் நாம் சத்தியத்தை அறிவிக்கும்போது, வாக்குவாதங்களுக்கும், நடுநிலையற்ற சூழ்நிலைகளுக்கும் வலுகட்டாயப்படுத்தாதபடிக்கு எச்சரிக்கையாயிருக்க வேண்டும். சத்தியம் ஒரு கருக்கான அரிவாள். அதனுடைய வேலையை அது செய்யட்டும்.

அந்த நாளில் இயேசு ஜனங்களுக்குப் பல உவமைகள் மூலமாகவும் கற்றுக்கொடுத்தார். ஜனங்களுக்கு இறுதியான செய்தியை அறிவிப்பதற்கு அவர் இந்த எடுத்துக்காட்டுகளைப் பயன்படுத்தினார் - உற்சாக மூட்டும் மற்றும் வழிநடத்தக்கூடிய செய்திகள் - அக்காலத்தில் வாழ்ந்த சீஷர்களுக்கும் மட்டுமல்ல, யுகம் முழுவதும் வாழக்கூடிய அவருடைய சீஷர்களுக்கும் கொடுக்கப்பட்டது.

பத்து கன்னிகைகளின் உவமையில், பரிசுத்தம், விசுவாசம் மற்றும் ஆயத்த நிலையின் முக்கியத்துவத்தைக்குறித்து இயேசு நமக்குக் கற்பித்தார். தாலந்துகளின் உவமையில் தந்தையின் பணியை நம்முடைய இயல்பான ஆற்றலைக்கொண்டு முழுமையாகப் பயன்படுத்துவதின் மதிப்பை நம்முடைய ஆண்டவர் கற்றுக்கொடுத்தார். பூமியின்மேல் இராஜ்யம் வெகு சீக்கிரத்தில் ஸ்தாபிக்கப் படுவதற்கு அத்திமரத்தின் உவமை, விசுவாசத்தை உறுதிப்படுத்தும் ஒரு அடையாளமாக உள்ளது. ஒரு மனுஷன் பிரயாணமாகச்சென்று அறியாத நேரத்தில் திரும்பிவருவார் என்று சொல்லப்பட்ட உவமையில், நாம் விழிப்போடு இருக்க வேண்டுமென்ற பாடத்தைக் கற்றுக்கொள்கிறோம் (மாற்கு 13:34-37).

**பஸ்காவுக்கு முன் - இரண்டாம் நாள்**

பஸ்காவுக்கு முன் இரண்டாம் நாளில் நம்முடைய ஆண்டவரின் கிரியைகளைக்குறித்து எந்தப் பதிவுகளும் காணப்படவில்லை. அந்த நாளில் இயேசு பெத்தானியாவில் ஓய்வெடுத்திருக்க வேண்டும். இந்தப் பூமியின்மேல் அவருடைய வாழ்க்கையில் நடக்கக்கூடிய இறுதிச் சம்பவங்களை முன்னறிந்த அவர், அதற்காக ஆயத்தப்பட்டிருக்க வேண்டும். மூன்றரை வருடங்கள் அவர் பிதாவின் சித்தத்தைச் செய்ததையும், பலமுறைகள் அவர் பரிசுத்த ஆவியால் வழிநடத்திச் செல்லப்பட்ட முன் நிகழ்வுகளையும், ஒருவேளை மீண்டும் நினைத்துப்பார்த்திருக்க வேண்டும்.

அவர் அமைதியாக சிந்திக்க அமர்ந்திருந்தபோது மகிழ்ச்சிகளும், துக்கங்களும், நட்புகளும், கடுமையான துன்பங்களும் அவருடைய மனதிற்குள் கடந்துச் சென்றிருக்க வேண்டும். அதுபோல நாமுங்கூட நம்முடைய ஆண்டவரின் நினைவூட்டும் நாளன்று அதை நினைவுகூரும்படி ஒருமித்துவந்து, கடந்த வருடத்தின் பாடங்களையும் ஆசீர்வாதங்களையும், வெற்றிகளையும், தோல்விகளையும் சிந்திப்பதற்கு நேரத்தை எடுத்துக்கொள்ளலாம். இந்தக் காலத்தில் இவைகளை நாம் பிரதிப்பலிப்பதற்கு மறுபதிப்பின் 3000 பக்கத்தில், "வருடத்தின் கணக்கிடுதல் - ஆவிக்குரிய அற்புதமானக் கட்டுரை" நமக்குப் பிரயோஜனமுள்ளதாய் இருக்கும்.

**பஸ்காவுக்கு முன் - முதலாம் நாள்**

மேல்வீட்டறையில் பஸ்காவை ஆயத்தம் செய்வதற்கு, இயேசு தம்முடைய சீஷர்களிடம் கூறினபோது, இந்தப் பூமியின்மேல் நம்முடைய ஆண்டவருடைய வாழ்க்கையின் இறுதி சம்பவங்கள் துவங்கியது. அந்தச் சாயங்காலத்தில் அவர்கள் அனைவரும் கூடிவந்தபோது, அந்த அப்போஸ்தலர்களின் சம்பாஷணையில், போட்டியிடுகிற ஆவி காணப்பட்டு, அவர்களில் யார் பெரியவர் என்ற கேள்வி எழும்பியது. நம்முடைய ஆண்டவர் சொல்லினாலும், வார்த்தைகளினாலும் அவர்களைக் கடிந்துகொள்ளவுமில்லை, ஆறு நாட்களுக்கு முன், "உங்களால் கூடுமா?" என்று ஒரு

கேள்வியைக் கேட்டதுபோல, அவர்களின் சச்சரவுகளை அவர் அமைதிப்படுத்தவுமில்லை. அதற்குப்பதிலாக, அவர் அமைதியாக இருந்து, அவர் அரையைக் கட்டிக்கொண்டு சீஷர்களுடைய பாதங்களைக் கழுவத் தொடங்கினார்.

உங்களில் முதன்மையாக இருக்க விரும்புவோர், உங்கள் அனைவருக்கும் ஊழியக்காரனாக இருக்கக்கடவன் என்று அமைதியாகக் கடிந்துகொண்டார். தம்மைத் தாழ்த்திய தமது போதகருக்கு எதிராக தயக்கம் காட்டிய பேதுருவை தவிர மற்ற எல்லோரும் வெட்கத்தினால் அமைதியானார்கள். இயேசு, பேதுருவின் பாதங்களைக் கழுவாவிட்டால் அவரிடத்தில் பங்கில்லை என்பதை பேதுருவுக்கு வலியுறுத்தினார். இது பேதுருவின் உணர்வுகளைப் பொங்கியெழச் செய்தது - "ஆண்டவரே, என் கால்களைமாத்திரமல்ல, என்கைகளையும் என் தலையையும்கூடக் கழுவவேண்டும் என்றான்" (யோவான் 13:9).

நம்முடைய ஆண்டவரின் பதில் முழு அர்த்தத்தைக்கொண்டிருந்தது. "முழுகினவன் தன் கால்களைமாத்திரம் கழுவவேண்டியதாயிருக்கும், மற்றப்படி அவன் முழுவதும் சுத்தமாயிருக்கிறான்" (யோவான் 13:10). இந்தப் பூமியோடு நேரடியாகத் தொடர்புகொள்ளக்கூடிய சரீரத்தின் அங்கம் கால்கள் என்பதையே இயேசு அங்குச் சுட்டிக்காட்ட விரும்பினார். கழுவப்பட்ட நாம், விசுவாசத்தினால் நீதிமான்களாக்கப்பட்ட நிலமையிலிருந்து நீதியைப்பெற்று, நெருக்கமானப் பாதையில் நடக்கும்போது, இந்த உலகத்தோடு நாம் வைக்கக்கூடிய தொடர்புகளினால் கறைபடாமல், நம்மை நாம் பரிசுத்தமாகக் காத்துக்கொள்ள வேண்டும்.

இராபோஜனத்தின் இரவில் அந்தக்குறிப்பான கறை, பெருமை என்று வெளிப்படுத்தப்பட்டது. அதுபோல, இந்நாளிலும், நம்முடைய சகோதரர்களுக்குச் செய்யப்படும் தாழ்மையான பணிகளில் தவிர்க்கப்பட வேண்டிய பெருமை ஒரு கண்ணியாக முன் வைக்கப்படுகிறது. இதுவே உண்மையான மேன்மையைக் குறிப்பிடும்.

அதற்குப் பின் பஸ்கா உணவும் நம்முடைய ஆண்டவரின் நினைவுகூருதலின் ஏற்பாடுகளும் தொடர்ந்தது. நாம் ஏப்ரல் 21-ஆம் தேதி வியாழன் அன்று, உலகமெங்கும் காணப்படும் நம்முடைய சகோதரர்களோடு ஒருமித்து இந்த நினைவுகூருதலை அனுசரிப்போம். வரக்கூடிய நாட்களிலும், வாரங்களிலும் நம்முடைய ஆண்டவரின் இறுதி அனுபவங்களையும், அவருடைய கடைசி ஏழு நாட்களில் காணப்படும் பாடங்களில், நம்முடைய இருதயங்களிலும், சிந்தனைகளிலும் தங்கியிருக்கக்கடவது.

**மேசியாவின் அறிமுகம்**

# எருசலேமுக்குள் பவனி வருதல்



Douglas Rawson

"சீயோன் குமாரத்தியே, மிகவும் களிகூரு; எருசலேம் குமாரத்தியே, கெம்பீரி; இதோ, உன் ராஜா உன்னிடத்தில் வருகிறார்; அவர் நீதியுள்ளவரும் இரட்சிக்கிறவரும் தாழ்மையுள்ளவரும், கழுதையின்மேலும் கழுதைக்குட்டியாகிய மறியின்மேலும் ஏறி வருகிறவருமாயிருக்கிறார்." (சகரியா 9:9).

நம்முடைய இரட்சிப்பும், மனுக்குலத்தின் இரட்சிப்பும் நம்முடைய ஆண்டவர் கடைசி வாரத்தை வெற்றிகரமாக நிறைவு செய்வதையே சார்ந்திருந்ததினால், அந்த வாரம் நம்முடைய ஆண்டவரின் ஊழியத்தில் மிக முக்கியமான வாரமாக இருந்தது. நம்முடைய ஆண்டவர் இதை நன்கு அறிந்திருந்தார். சுவிசேஷ யுக முழுவதிலும் அவருடைய சீஷர்கள் அனைவரும் பிரயோஜனப்படும்படியாக ஒவ்வொரு சிறிய சம்பவத்தையும் கணக்கிட்டு மிக முக்கியமான விவரங்களோடு அவர் சீஷர்களை ஆயத்தப்படுத்தினார்.

நம்முடைய ஆண்டவர் எருசலேமுக்குள் கழுதைக்குட்டியின்மேல் பவனி வருவதைக்குறித்த இரண்டு ஆழமான அர்த்தங்களை இந்தக் கட்டுரை ஆராய்கிறது. இந்தச் சூழ்நிலையில் - ஜனங்களின் ஆரவாரங்கள் ஆலயத்திலிருந்து காசுக்காரர்கள் வெளியேற்றப்படுதல் போன்ற பல சம்பவங்கள் சம்பந்தப்பட்டுள்ளது. இந்த அறிக்கை நிழல் மற்றும் பொருளான பாடங்களுக்கு மிக முக்கியமானதாய் உள்ளது.

ஏதோ சில முரண்பாடுகள் காணப்பட்டாலும் நான்கு சுவிசேஷகர்களும் இதைப் பதிவு செய்திருக்கிறார்கள். ஒரே நேரத்தில் நடந்த சம்பவங்களைச் சிறிய முரண்பாடுகளோடு அவர்கள் பதிவு செய்திருப்பதாக தோன்றுகிறபடியினால், உண்மையான முழு விவரங்களை அறிந்துகொள்வதற்கு நாம் அனைத்து சுவிசேஷங்களையும் வாசிக்க வேண்டும். ஜெபத்தோடு கூடிய வேதப்படிப்புகளின் தேவனுடைய வார்த்தை மற்றும் சத்தியத்தை அதிகமாகப் புரிந்துகொள்வதற்காகவே, தேவன் இவைகளை அனுமதித்திருக்கிறார்.

#### எருசலேமுக்குள் பவனி வருதல்

இயேசு எருசலேமுக்குள் கழுதையின்மேலும் மற்றும் கழுதைக்குட்டியாகிய மறியின்மேலும் பவனி வந்தார் என்ற விவரத்தில் ஒரு குழப்பம் காணப்படுகிறது. மத்தேயு, இரண்டு மிருகங்களைக் குறித்து விவரிக்கிறார். அதே நேரத்தில், மாற்கு மற்றும் லூக்கா ஒரு மிருகத்தைப்பற்றிக் குறிப்பிடுகிறார்கள். ஒருவேளை அது இரண்டு மிருகங்களாக இருந்திருந்தால், இயேசு எந்த மிருகத்தின்மேல் பவனி வந்திருக்க வேண்டும்?

(1) "அவர்கள் எருசலேமுக்குச் சமீபமாய்ச் சேர்ந்து, ஒலிவமலைக்கு அருகான பெத்பகேயுக்கு வந்தபோது, இயேசுவானவர் சீஷரில் இரண்டுபேரை நோக்கி: (2) உங்களுக்கு எதிரே இருக்கிற கிராமத்துக்குப் போங்கள்; போனவுடனே, அங்கே ஒரு கழுதையையும் அதனோடே ஒரு குட்டியையும் கட்டியிருக்கக் காண்பீர்கள்; அவைகளை அவிழ்த்து என்னிடத்தில் கொண்டுவாருங்கள். (3) ஒருவன் உங்களுக்கு ஏதாகிலும் சொன்னால்: இவைகள் ஆண்டவருக்கு வேண்டுமென்று சொல்லுங்கள்; உடனே அவைகளை அனுப்பிவிடுவான் என்று சொல்லி, அவர்களை அனுப்பினார். (4) இதோ, உன் ராஜா சாந்தகுணமுள்ளவராய், கழுதையின்மேலும் கழுதைக்குட்டியாகிய மறியின்மேலும் ஏறிக்கொண்டு, உன்னிடத்தில் வருகிறார் என்று சீயோன் குமாரத்திக்குச் சொல்லுங்கள் என்று, (5) தீர்க்கதரிசியினால் உரைக்கப்பட்டது நிறைவேறும்படி இதெல்லாம் நடந்தது. (6) சீஷர்கள் போய், இயேசு தங்களுக்குக் கட்டளையிட்டபடியே செய்தார்கள். (7) கழுதையையும் குட்டியையும் கொண்டுவந்து, அவைகள்மேல் தங்கள் வஸ்திரங்களைப் போட்டு, அவரை ஏற்றினார்கள்." (மத்தேயு 21:1-7).

மத்தேயு தன்னுடைய சுவிசேஷத்தில் கழுதை மற்றும் ஒரு கழுதைக்குட்டியைப் பற்றிக்குறிப்பிட்டுள்ளார். மாற்கு மற்றும் லூக்கா, கழுதைக்குட்டியை மட்டும் குறிப்பிடுகிறார்கள். "உங்களுக்கு எதிரேயிருக்கிற கிராமத்துக்குப் போங்கள்; அதில் பிரவேசித்தவுடனே, மனுஷர் ஒருவரும் ஒருக்காலும் ஏறியிராத ஒரு கழுதைக்குட்டி கட்டியிருக்கக் காண்பீர்கள், அதை அவிழ்த்துக்கொண்டு வாருங்கள்" (மாற்கு 11:2) என்று மாற்கு எழுதுகிறார்.

இது சகரியாவினால் தீர்க்கதரிசனமாக உரைக்கப்பட்டது. "சீயோன் குமாரத்தியே, மிகவும் களிகூரு; எருசலேம் குமாரத்தியே, கெம்பீரி; இதோ, உன் ராஜா உன்னிடத்தில் வருகிறார்; அவர் நீதியுள்ளவரும் இரட்சிக்கிறவரும் தாழ்மையுள்ளவரும், கழுதையின்மேலும்

கழுதைக்குட்டியாகிய மறியின்மேலும் ஏறி வருகிறவருமாயிருக்கிறார்" (சகரியா 9:9).

இங்கு இரண்டு மிருகங்கள் குறிப்பிடப்பட்டிருந்தாலும், இயேசு அந்த இரண்டு மிருகங்களின்மேல் பவனி வந்திருக்கக்கூடுமென்று நினைப்பது பொருத்தமற்றதாய் காணப்படும். இயேசு கழுதைக்குட்டியின்மேல் பவனி வந்தார் என்று சகரியா, மாற்கு, லூக்கா மற்றும் யோவானும் கூறுகிறார்கள். இது விசேஷித்த கழுதைக்குட்டியாக இருந்தது. "உங்களுக்கு எதிரே இருக்கிற கிராமத்துக்குப் போங்கள், அதிலே பிரவேசிக்கும்போது மனுஷரிலொருவனும் ஒருக்காலும் ஏறியிராத கழுதைக்குட்டியைக் கட்டியிருக்கக் காண்பீர்கள்; அதை அவிழ்த்துக்கொண்டு வாருங்கள்" (19:30) என்று லூக்காவிலும், மற்றும் "மனுஷர் ஒருவரும் ஒருக்காலும் ஏறியிராத ஒரு கழுதைக்குட்டி கட்டியிருக்கக் காண்பீர்கள், அதை அவிழ்த்துக்கொண்டு வாருங்கள்" (11:2) என்று மாற்கிலும் குறிப்பிடுகிறார்.

இதில் குறிப்பிடப்படும் காரியம் என்ன? இங்கு ஒரு கழுதையும், ஒருவரும் ஏறியிராத கழுதைக்குட்டியும் இருந்தது. அந்தக் கழுதை யூத யுகத்தின் நிறைவைக் காட்டுகிறதாக நாம் கருதலாம். நியாயப்பிரமாணம் உருவழிந்துபோகக் காலம் சமீபித்திருக்கிறது (எபிரெயர் 8:13). அது சிலுவையில் அறையப்பட வேண்டியதாய் இருந்தது. ஆசாரியர்களினால் செலுத்தப்பட்ட சகல பலிகளும் நிறைவடையக்கூடியதாய் இருந்தது. இந்தப் பலிகள் வரக்கூடிய நன்மையான காரியங்களின் நிழலாக இருக்கிறது என்று பவுல் எழுதுகிறார் (எபிரெயர் 10:1).

இவைகளுக்குப்பதிலாக, சுவிசேஷத்தோடு சம்பந்தப்பட்ட கிருபை மற்றும் தனிப்பட்ட பலிகளை இந்தக் கழுதைக்குட்டி அடையாளப்படுத்துகிறது. கிறிஸ்துவைபோல அர்ப்பணித்து, அவரை ஏற்றுக்கொண்டவர்களுக்கு ஒரு நெருக்கமானப் பாதை திறக்க வேண்டியதாய் இருந்தது. யூதர்களும், புறஜாதிகளும் பரலோகம் செல்வதற்குப் புதிதும் ஜீவனுமானப் பாதை திறக்கப்படும்படிக்கு ஆலயத்தின் திரைச்சீலை மேல் துவங்கிக் கீழ்வரைக்கும் கிழிய வேண்டியதாய் இருந்தது.

இவ்வாறாக, சீஷர்கள் கழுதையையும், கழுதைக்குட்டியையும் கொண்டுவந்தபோது, இயேசு கழுதைக்குட்டியை தெரிந்தெடுத்தது பொருத்தமாய் உள்ளது.

இயேசு கழுதைக்குட்டியின்மேல் அமர்வதற்கு முன் சீஷர்கள் தங்களுடைய வஸ்திரங்களை இரண்டு மிருகங்கள் மேலும் போட்டார்கள். இயேசுவின்மேல் அவருடைய சீஷர்கள் கொண்டிருந்த மதிப்பையும் மரியாதையையும் இது காட்டுகிறது. இயேசு கடந்துச் செல்கையில் ஜனங்கள் அவர்களுடைய வஸ்திரங்களை வீதிகளில் விரித்தார்கள். ஆனால் தாங்கள் பெற்றிருந்த சிறப்புரிமையை வெளிப்படுத்தும்படியாக சீஷர்கள் தங்களுடைய வஸ்திரங்களை அந்த மிருகங்கள்மேல் விரித்தார்கள். சீஷர்கள் இயேசுவோடு ஒரு விசேஷித்த ஐக்கியத்தைப் பெற்றிருந்ததினால் இக்காரியம் மிகவும் பொருத்தமாய் உள்ளது.

"அவர்கள் போய், வெளியே இருவழிச்சந்தியில் ஒரு வாசலருகே கட்டியிருந்த அந்தக் குட்டியைக் கண்டு, அதை அவிழ்த்தார்கள்" (மாற்கு 11:4) என்று இச்சம்பவத்திற்குக் கூடுதலான விவரங்களை அறிவிக்கிறார். இரு வழி சந்தில் இந்தக் கழுதைக்குட்டி காணப்பட்டதாக மாற்கு கூறுகிறார் - இரண்டு சாலைகளின் சந்திப்பு.

உறுதியாக அன்றைய வரலாற்றில் இஸ்ரயேல் ஜனங்கள் இருமனமுள்ளவர்களாக திகழ்ந்தனர். இராஜாவை ஏற்றுக்கொள்ள அவர்களுக்கு நேரம் வந்துவிட்டது. வெகு சிலர் அவரை ஏற்றுக்கொண்டு பெந்தெகொஸ்தே நாளில் பரிசைப் பெற்றனர். ஆனால் அவர் சிலுவையில் தொங்கும்போது அநேகர் அவரைப் புறக்கணித்தார்கள். அவர் சிலுவையில் தொங்கும்போது, ஒரு இராஜாவைப்போல அவர் அவர்களுக்குக் காட்சியளிக்கவில்லை. நாம் ஜீவனைப் பெறுவதற்காக அந்த இராஜா தம்முடைய ஜீவனைக்கொடுக்க வேண்டும் என்பதை அவர்கள் சிறிதளவும் புரிந்துகொள்ளவில்லை.

குறுக்குச் சாலைகள், (cross roads) கழுதை மற்றும் கழுதைக்குட்டியின் அடையாளத்திற்கு ஒப்பாக உள்ளது. கிபி. 33-ஆம் வருடம் துவங்கி அந்தச் சாலை நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலல்ல, விசுவாசத்தினாலும் கிருபையினாலும் பயணிக்கத் துவங்கியது.

மாற்கு, லூக்கா மற்றும் யோவான் கழுதைக்குட்டியை மட்டுமே ஏன் குறிப்பிடப்பட வேண்டும்? பரிசுத்த வார்த்தை தெய்வீக தூண்டுதலினால் எழுதப்பட்டதினிமித்தம் முதலில், மத்தேயு சரியாகப் பதிவு செய்திருக்கிறார் என்பதை நாம் நம்ப வேண்டும். மத்தேயு அதிகமான விவரங்களைத் தந்திருக்கிறார். மற்றவர்கள் கூடுதலான முக்கியமான விவரங்களைக் கொடுத்திருந்தபோதிலும் அவைகள் முழுமையாக காணப்படவில்லை.

**காசுக்காரர்களை எதிர்த்தல்**

அடுத்ததாக ஆலயத்தை கள்ளர் குகையாகப் பயன்படுத்தினவர்களுக்கும்,

இயேசுவுக்கும் இடையில் நடந்த பிரச்சனையை ஆராயலாம் (மத்தேயு 21). காசுக்காரர்களின் மேஜைகள் கவிழ்க்கப்பட்டு அவர்கள் இயேசுவினால் விரட்டப்பட்டனர். தேவனுடைய வீட்டைக் கள்ளர் குகையாக மாற்றினதற்காக இயேசு அவர்களைக் கடிந்துகொண்டார்.

நம்முடைய ஆண்டவரின் ஊழியத்தின் துவக்கத்தில் காசுக்காரர்களை ஆலயத்திலிருந்து விரட்டப்பட்ட இதுபோன்ற ஒரு காட்சியை யோவான் பதிவு செய்திருக்கிறார் (யோவான் 2). இயேசு தண்ணீரை ரசமாக மாற்றின அற்புதத்தைத் தொடர்ந்து இது நடைபெற்றது.

இதினிமித்தமாக, இயேசுவின் ஊழியத்தில் இரண்டு சுத்திகரிப்பின் வேலைகள் - முதலாவது அவருடைய ஊழியத்தின் துவக்கத்திலும் மற்றொன்று அவருடைய ஊழியத்தின் முடிவிலும் நடந்ததாக - சில விமர்சகர்கள் கூறுகிறார்கள். ஆனால் பாஸ்டர் ரசல் மற்றும் சில விமர்சகர்கள் இது முடிவில் நடந்த ஒரே சம்பவம் என்று கூறுகிறார்கள். இதற்கு நாம் எவ்வாறு விளக்கம் அளிப்பது?

மத்தேயு, மாற்கு மற்றும் லூக்கா நம்முடைய ஆண்டவரின் ஊழியத்தின் முடிவில் நடந்த ஒரே சுத்திகரிப்பைப்பற்றி எழுதினார்கள். யோவான் சுவிசேஷம் மற்ற மூன்று சுவிசேஷம் எழுதப்பட்டதற்கு வெகுகாலத்திற்குப் பின் எழுதப்பட்டது. மற்ற சுவிசேஷகர்கள் எழுதாமல்விட்ட முக்கியமான விட்டுப்போன மற்ற விவரங்களைச் சேர்த்து எழுதுவதே யோவானின் முக்கிய நோக்கமாக இருந்தது.

கயிறுகளினால் ஒரு சவுக்கை உண்டு பண்ணி காசுக்காரர்களை ஆண்டவர் வெளியே விரட்டினார் என்று யோவான் நமக்குக் கூறுகிறார். அந்தக் காசுகளையும் அவர் வெளியே எறிந்ததாக அவர் கூறுகிறார். நீங்கள் இந்த ஆலயத்தை இடித்துப் போட்டால் அதை மூன்று நாட்களுக்குள் எழுப்புவேன் என்று இயேசு சொன்ன மிக முக்கியமான வார்த்தைகளையும் யோவான் குறிப்பிடுகிறார்.

நம்முடைய ஆண்டவரின் ஊழியத்தின் முடிவில் இந்தச் சுத்ததிகரிப்பு நடைபெற்றதற்கு ஒரு முக்கியமான காரணம் உண்டு. நம்முடைய ஆண்டவர் இராஜாவாகப் பொறுப்பெடுத்துக்கொண்ட பின் இது நடைபெற வேண்டியதாய் இருந்தது. அவருடைய ஊழியத்தின் கடைசி வருடத்தில், நீசான் மாதம் 10-ஆம் தேதி அன்று அவர் இந்தக் காரியத்தைச் செய்தார். இதைத் தொடர்ந்து ஆலயம் சுத்திகரிக்கப்பட்டது. அவர்களுடைய இராஜாவாக, அவர் எதை வேண்டுமானாலும் செய்யக்கூடிய, கேள்வி எழுப்ப முடியாத முழு உரிமையை அவர் பெற்றிருந்தார்.

ஆலய சுத்திகரிப்பைப் பொறுத்தவரையில், இயேசு செய்த காரியத்தை மற்ற எந்த யூதராலும் செய்திருக்கக்கூடும் என்று சிலர் வினவுகிறார்கள். ஆயினும் வழக்கத்தில் இது என்றும் நடைபெறவில்லை. ஆகையால் இயேசு, இராஜாவாக முழு உரிமைப் பெறும்வரையில் காத்திருந்தார்.

லாசரு உயிரோடு எழுப்பியது, எருசலேமுக்குள் பவனி மற்றும் ஆலயத்தின் சுத்திகரிப்பு ஆகிய அனைத்து சம்பவங்களையும் நம்முடைய ஆண்டவர், தேவனுடைய குமாரன் என்றும் யூதர்களின் மேசியா மற்றும் அவர்களின் இராஜா என்றும் காண்பிப்பதற்காகவே செய்தார். இந்தச் சம்பவங்கள் அனைத்தும் ஒன்றோடொன்று நெருங்கிய தொடர்புடையதாக இருந்தது,

**நிஜமான காசுக்காரர்கள்**

நம்முடைய ஆண்டவரின் இரண்டாம் பிரசன்னமான 1874-க்குப் பின் உள்ள மூன்றரை வருடங்களைக் கணக்கிட்டு கிபி 33-ஆம் வருஷத்தின் நிஜம் 1878-ஆம் ஆண்டு என்று பொதுவாக வேத மாணவர்கள் கூறுகிறார்கள். அதுபோல இதுவும் ஒரு வருடமாகும். திரும்பி வந்த நம்முடைய ஆண்டவர் பல இடங்களில் அவருடைய இராஜ்யத்தின் வேலையைத் துவங்கினார். இஸ்ரயேலைப் பொறுத்தவரையில் பெட்டாட்டிக்குவா என்று அழைக்கப்பட்ட முதல் யூத வேளாண்மை குடியமைப்பை ஸ்தாபித்ததோடு மெதுவாக சீயோன் இயக்கம் துவங்கப்பட்டது. ஆவிக்குரிய இஸ்ரயேலரைப் பொறுத்தவரையில், நித்திரையிலிருந்த பரிசுத்தவான்கள் எழுப்பப்பட்டார்கள் 1 கொரிந்தியர் 15:52; 1 தெசலோனிக்கேயர் 4:16. 1878-ஆம் வருடத்தில் அவருடைய ஜனங்களை பாபிலோனைவிட்டு வெளியே அழைத்து ஆவிக்குரிய சுத்திகரிப்பையும் துவங்கினார். "பின்பு, வேறொரு சத்தம் வானத்திலிருந்து உண்டாகக் கேட்டேன். அது: என் ஜனங்களே, நீங்கள் அவளுடைய பாவங்களுக்கு உடன்படாமலும், அவளுக்கு நேரிடும் வாதைகளில் அகப்படாமலும் இருக்கும்படிக்கு அவளைவிட்டு வெளியே வாருங்கள்" (வெளிப்படுத்தல் 18:4). கிபி 33-ஆம் வருடம் ஏரோதின் ஆலயத்தைக் கண்ட இயேசு ஏமாற்றம் அடைந்ததுபோல, 1878-ஆம் வருடமும் பெயர் கிறிஸ்தவ மண்டலத்தைக் கண்ட இயேசு ஏமாற்றமடைந்தார். ஆகவே அவருடைய ஜனங்களை வெளியே வரும்படி அழைப்புக்கொடுத்தார்.

அவருடைய முதல் வருகையில், ஆடு மாடுகளை வெளியே விரட்ட ஒரு சிறு சவுக்கை இயேசு உண்டுபண்ணினார். இந்தச் சவுக்கு உண்மையில்

அவருடைய அதிகாரத்தின் அடையாளத்தின் சின்னமாய் இருந்தது. அவர் இந்தச் சவுக்கை **ஜனங்களின்** மேலல்ல, **மிருகங்களின்**மேல் பயன்படுத்தினார். மேலும் அங்கிருந்த புறாக்களை அவர் திறந்துவிட்டு, அவைகளின் உரிமையாளர்களை ஏமாற்றியதாக எந்தக் குறிப்பும் காணப்படவில்லை. நம்முடைய ஆண்டவரின் நீதியான கோபத்திலும் நாம் அவருடைய ஞானத்தையும், இரக்கத்தையும் காணலாம். இது விழுந்துபோன மனிதரிடம் காணப்படும் குருட்டுத்தனமான கோபமல்ல.

மொத்தத்தில் நம்முடைய ஆண்டவர் காசுக்கரர்களை வெளியே விரட்டி, நிஜமான ஆலயத்தைச் சுத்திகரித்துக் கொண்டிருக்கிறார். சத்தியத்தைக்கொண்டு அவர் இதை நடத்துகிறார். இந்தச் சவுக்கு, சத்தியத்தையும் அவர் பெற்றிருக்கும் அதிகாரத்தையும் அடையாளப்படுத்துகிறது. சத்தியத்தின் அறிவிப்பைப் பயன்படுத்தி, காசுக்காரர்களை வெளியேற்றுவதே அவருடைய நோக்கமாய் இருக்கிறது. அவர்கள் சத்தியத்தைப் புறக்கணிப்பதனால் அவர்களுடைய தவறான தத்துவ ஞானம் அவர்களைக் கட்டி காலப்போக்கில் அறுவடையின் முடிவில் அழிவுக்குள் அவர்களை வழி நடத்தும். விசுவாசியாதவர்களுக்கு எரிநரகம் போன்ற போதனையல்லாமல், இந்த நயவஞ்சகர்களுக்கு அடுத்த யுகத்தில் மனம் வருந்தி சத்தியத்தை ஏற்றுக்கொள்ளும் வாய்ப்பு கிடைக்கும்.

நம்முடைய அடுத்த குறிப்பு, ஆலயத்தை இயேசு மறுபடியும் கட்டி எழுப்புவதைக்குறித்தது . "இந்த ஆலயத்தை இடித்துப் போடுங்கள், மூன்று நாளைக்குள்ளே இதை எழுப்புவேன் என்றார். அப்பொழுது யூதர்கள்: இந்த ஆலயத்தைக் கட்ட நாற்பத்தாறு வருஷம் சென்றதே, நீர் இதை மூன்று நாளைக்குள்ளே எழுப்புவீரோ என்றார்கள். அவரோ தம்முடைய சரீரமாகிய ஆலயத்தைக்குறித்துப் பேசினார்" (யோவான் 2:19-21).

அந்த ஆலயம் கட்டப்படுவதற்கு 46 வருடங்கள் எடுத்துக் கொள்ளப்பட்டப்படியினால், மூன்று நாட்களுக்குள் அதைக்கட்டி எழுப்புவேன் என்ற இயேசுவின் வார்த்தைகளை யூதர்களால் புரிந்துகொள்ள முடியவில்லை. இயேசு தன்னைக்குறித்தும் அவருடைய சபையைக்குறித்தும் பேசிக்கொண்டிருப்பதை அவர்களால் உணர முடியவில்லை. அவர்கள் அவரைச் சிலுவையில் அறைந்தாலும் மூன்று நாட்களுக்குப்பின் அவர் மகிமையுள்ள தெய்வீக ஆவிக்குரிய ஜீவியாக உயிர்த்தெழுவார். இயேசுவின் சீஷர்கள் மரித்தாலும் தேவனுடைய ஆவிக்குரிய ஆலயமாக ஜீவனுள்ள கற்களாக எழுப்பப்படுவார்கள் (1 பேதுரு 2:5; எபேசியர் 2:10-22). இந்த ஆலயம் செங்கலினாலும், மரத்தினாலும், சாந்தினாலும் கட்டப்படாமல், ஆவியில் ஜெநிப்பிக்கப்பட்ட கிறிஸ்துவின் சீஷர்களினால் கட்டப்பட்டுவருகிறது.

ஆலயம் அல்லது சபை முழுமைப்பெற்று மகிமையடைவதற்கு நாம் காத்திருக்கிறோம். இது எப்பொழுது நிகழும்? மூன்றாம் நாளில் எழுப்புவேன் என்று இயேசு கூறினார். இதுவே அந்த நாள் அல்லது சுவிசேஷ யுகத்தில் சபை வளர்ச்சியடைந்த இரண்டாயிரம் வருடங்களுக்குப் பின் அல்லது இரண்டாம் நாளுக்குப் பின்வரும் 1000 வருடமாகும்.

இயேசுவின் உயிர்த்தெழுதலைப்பற்றி பரிசேயர்கள் புரிந்துகொள்ளவில்லை. அதுபோல நம்முடைய காலத்திலுள்ள மதகுருக்கள் சபையின் உயிர்த்தெழுதலைப்பற்றி புரிந்துகொள்ள முடியாது.

காசுக்காரர்களை இயேசு வெளியே விரட்டின பின் என்ன நடந்தது? "குருடரும் சப்பாணிகளும் தேவாலயத்திலே அவரிடத்திற்கு வந்தார்கள், அவர்களைச் சொஸ்தமாக்கினார்" (மத்தேயு 21:14). கிறிஸ்துவின் பூமிக்குரிய இராஜ்யத்தில் அதனுடைய மிகப்பெரிய நிறைவேற்றம் காணப்படும். சபை மகிமையடைந்த பின், சரீர ரீதியிலும், ஆவிக்குரிய உணர்வுகளிலும் முழு மனுக்குலமும் சொஸ்தமாக்கப்படும். மனுக்குலம் முழுவதும் குணமாக்கப்படும் அந்த நாளை எதிர்நோக்கிக்கொண்டிருக்கிறோம்.

இது ஒரு முற்றிலும் முழுமையான நாள், கடைசி வாரத்தின் ஒரு முக்கிய பகுதியாகும். கழுதையின்மேலும் கழுதைக்குட்டியின்மேலும் தங்களுடைய வஸ்திரங்களை விரிப்பதற்கான சிறப்புரிமையை சீஷர்கள் பெற்றிருந்தார்கள். அதுபோல, நம்முடைய விசுவாசத்தைப் பயன்படுத்தி சகோதரர்களுக்கு உதவி செய்யக்கூடிய மிகப்பெரிய சிறப்புரிமையை நாம் இப்பொழுது பெற்றிருக்கிறோம். பெயர் சபை அமைப்புகளின் சீரழிக்கக்கூடிய பாதிப்புகளிலிருந்து நம்முடைய ஐக்கியத்தை விடுவித்ததற்காக நாம் பெரும் மகிழ்ச்சியடைகிறோம். உண்மையில் நம் மத்தியிலிருந்து காசுக்காரர்களை அவர் வெளியேற்றிவிட்டார். இப்பொழுது நாம் ஆவியிலும் சத்தியத்திலும் அவரோடுகூட போஜனம் பண்ணுகிறோம். எல்லோரும் ஆவிக்குரிய குருட்டாட்டத் திலிருந்து சொஸ்தமாக்கக்கூடிய அந்த நாளை நாம் எதிர்நோக்கிக் கொண்டிருக் கிறோம்.

### நம்முடைய ஆண்டவரை நினைவுகூருதல்

# நினைவுகூருதல்



Chris Kuenzli

"என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள்" (லூக்கா 22:19).

ஒவ்வொரு வருடமும், நாம் நினைவுகூருதலில் பங்கெடுக்கும்போது, இந்த எளிய அடையாளமான விருந்துக்கு இரண்டு பார்வைகள் உள்ளது. முதலாவது, ஒவ்வொரு வருஷமும் நாம் பங்கெடுக்கும்போது, மீண்டுமாக நாம் இயேசு கிறிஸ்துவின் மரணத்தை நினைவுகூருகிறோம். இந்தச் சிந்தை 1 கொரிந்தியர் 11:26-ஆம் வசனத்தில் காணப்படுகிறது, "ஆகையால் நீங்கள் இந்த அப்பத்தைப் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம்பண்ணும்போதெல்லாம் கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தைத் தெரிவிக்கிறீர்கள்." இரண்டாவதாக, இந்த நினைவுகூருதலில் நாம் பங்கெடுத்து, இயேசு கிறிஸ்துவின் பலியில் நம்முடைய பங்கை நாம் அடையாளப்படுத்துகிறோம். இதைக்குறித்து அப்போஸ்தலனாகிய பவுல், 1 கொரிந்தியர் 10:16-17 வசனங்களில் கோடிட்டுக் காட்டுகிறார். இந்த எளிமையான விருந்துக்கு நம்முடைய மனதை ஆயத்தப்படுத்தும்போது, நினைவுகூருதலில் பங்கெடுப்பதற்கான இந்த இரண்டு பார்வைகளையும் நாம் மீண்டும் ஒருமுறை ஆராயலாம்.

#### ஆண்டவரின் மரணத்தை நினைவுகூருதல்

இறுதி இராபோஜனத்தை ஒருமித்துப் புசிப்பதற்காக ஆயத்தம் செய்யும்படி இயேசு எல்லோருக்கும் முன்பாக பேதுருவையும் யோவானையும் அனுப்பினார். தேவையான ஒழுங்குகளை ஏற்பாடு செய்வதற்கும், எங்கு, யாரிடம் செல்ல வேண்டும் என்ற கட்டளைகளையும் கொடுத்து, இயேசு அவர்களை அனுப்பினார். அந்தச் சாயங்காலத்தில் இயேசுவும், அப்போஸ்தலர்களும் மேல்வீட்டறையில் ஒருமித்துக் கூடினார்கள். நம்முடைய ஆண்டவர் அவருடைய இருதயத்தின் விருப்பங்களை அவருடைய சிநேகிதரிடம் வெளிப்படுத்திக்கொண்டு போஜனத்தைத் துவங்கினார். "அப்பொழுது அவர் அவர்களை நோக்கி: நான் பாடுபடுகிறதற்கு முன்னே உங்களுடனேகூட இந்தப் பஸ்காவைப் புசிக்க மிகவும் ஆசையாயிருந்தேன். தேவனுடைய ராஜ்யத்திலே இது நிறைவேறுமளவும் நான் இனி இதைப் புசிப்பதில்லை" (லூக்கா 22:15-16). அவருடைய ஊழியம் நிறைவு பெற்றுக்கொண்டிருந்ததை அவர் அறிந்ததினால் அவருடைய நெருங்கிய சீஷர்களிடம் இறுதியாக தொடர்புகொள்ள விரும்பினார். இன்னும் பல காரியங்களை அவர்களிடம் அவர் கூற வேண்டியதாய் இருந்தது. ஒருவரின் கால்களை ஒருவர் கழுவுதல், மெய்யான திராட்சச்செடி மற்றும் கொடிகளைப்பற்றிய உவமை போன்ற சில பாடங்களை, அவருடைய அப்போஸ்தலர்களுக்கு அவர் கொடுக்க வேண்டியதாய் இருந்தது. மேலும் அவருடைய பிரிவைக்குறித்தும், அவருக்குப்பின் அவர்களைத் தேற்றி வழி நடத்துவதற்கு அவரால் அனுப்பப்படும் பரிசுத்த ஆவியைக்குறித்தும் கூறுவதற்கு இயேசு விருப்பமுள்ளவராய் இருந்தார். அவருடைய நெருங்கிய சீஷர்களோடு இறுதி போஜனத்தைப் புசிக்க அமர்ந்தபோது, இவ்வனைத்துக் காரியங்களும் நம்முடைய ஆண்டவரின் சிந்தையில் நிறைந்திருந்தது. அந்நேரத்தில்தான் இயேசு நினைவுகூருதலை ஏற்படுத்தினார்.

#### அப்பம்

"அவர்கள் போஜனம்பண்ணுகையில், இயேசு அப்பத்தை எடுத்து, ஆசீர்வதித்து, அதைப் பிட்டு, சீஷர்களுக்குக் கொடுத்து: நீங்கள் வாங்கிப் புசியுங்கள், இது என்னுடைய சரீரமாயிருக்கிறது என்றார்" (மத்தேயு 26:6). அப்பம் அவருடைய மாம்சத்தை அடையாளப்படுத்தும் என்று இயேசு கூறி அதை அப்போஸ்தலர்களுக்கு உண்ணும்படி கொடுத்தார்.

இயேசு தம்முடைய முதலாம் வருகையில் இந்தப் பூமிக்கு வரும்போது, மாம்சமானார். "அந்த வார்த்தை மாம்சமாகி, கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய், நமக்குள்ளே வாசம்பண்ணினார்" (யோவான் 1:14). மனுக்குலத்தில் ஒரு மனுஷனாக நம்மில் ஒருவரானார். ஆனால் அவரிடம் பாவம் இல்லை. அவர், "பரிசுத்தரும், குற்றமற்றவரும், மாசில்லாதவரும், பாவிகளுக்கு விலகினவரும், வானங்களிலும் உயர்ந்தவருமாயிருக்கிறார்" (எபிரெயர் 7:26). நாம் நம் வாழ்க்கையில் பல சோதனைகளைச் சகித்துகொள்வதுபோல், அவரும் இந்தப் பூமிக்குரிய வாழ்க்கையிலும், ஊழியத்திலும் பல சோதனைகளைச் சகித்து வந்தார். ஆயினும் இவைகளுக்கு மத்தியில் பரிசுத்தமாகவும்,

பாவமற்றவராகவும் தம்மைக் காத்துகொண்டார். "நம்முடைய பலவீனங்களைக்குறித்துப் பரிதபிக்கக்கூடாத பிரதான ஆசாரியர் நமக்கிராமல், எல்லாவிதத்திலும் நம்மைப்போல் சோதிக்கப்பட்டும், பாவமில்லாதவராயிருக்கிற பிரதான ஆசாரியரே நமக்கிருக்கிறார்" (எபிரெயர் 4:15). சகல காரியங்களிலும் அவர் விசுவாசமுள்ளவராய் இருந்து, அவருடைய கீழ்ப்படிதலை நிரூபித்தார். அவர் நம்முடைய இரட்சகராக இருப்பதற்கு தம்முடைய பரிபூரண ஜீவனை ஆதாமுக்கு ஈடுகிரயமாகச் செலுத்தவும், இது அவசியமாய் இருந்தது (ரோமர் 5:18-19).

இயேசு இந்தப் பூமிக்குரிய ஊழியம் முழுவதிலும் விடாமுயற்சியுடன் உழைத்தார். அவர் ஒரு போதும் சோம்பலாக இருக்கவில்லை. தேவனைக்குறித்தும், அவருடைய திட்டத்தைக்குறித்தும் அவருடைய சீஷர்களுக்கும் கேட்கக்கூடிய செவிகளையுடைய அனைவருக்கும் இயேசு கற்பித்தார். அவருடைய விளக்கமான உபதேசங்களில் இயேசு எப்பொழுதும் பரலோக தந்தைக்கு மதிப்பையும், கனத்தையும், மகத்துவத்தையும் கொடுத்தார். "நான் சுயமாய்ப் பேசவில்லை, நான் பேசவேண்டியது இன்னதென்றும் உபதேசிக்கவேண்டியது இன்னதென்றும் என்னை அனுப்பின பிதாவே எனக்குக் கட்டளையிட்டார்" என்று யோவான் 12:49-இல் அவர் கூறினார். இங்கு இயேசு தம்முடைய வார்த்தைகளையல்ல, பிதாவின் வார்த்தைகளையே பேசுவதாக விளக்கமளித்தார். நியாயப்பிரமாணத்தைப் போதிப்பவர்போல், அக்காலத்தில் இன்னும் பல போதகர்கள் இருந்தனர். ஆனால் அவர்களோ தங்களுக்குப் பெருமையான நிலையை ஏற்படுத்தி, மற்றவர்களைக் காட்டிலும் தங்களை உயர்வாகக்கருதினார்கள் (லூக்கா 18:9-14). இதற்கு எதிரிடையாக நம்முடைய ஆண்டவர் பரலோகப் பிதாவின் சித்தத்தை பக்தியோடும் தாழ்மையோடும் நிறைவேற்றினார். அவருடைய இந்தப் போதனைகள் நம்மிடம் வழிவழியாகக் கடந்துவந்துள்ளது.

இயேசு தம்முடைய முழு வாழ்க்கையையும், பிதாவின் சித்தம் செய்வதற்கு செலவழித்தார். அவருடைய முழு சக்தியையும், எல்லா தாலந்துகளையும், முழு நேரத்தையும் அவருக்குக் கொடுக்கப்பட்ட வேலையை நிறைவேற்றுவதற்குப் பயன்படுத்தினார். இறுதியாக நம்முடைய இரட்சிப்புக்காக அவருடைய வாழ்க்கையை மனப்பூர்வமாக ஒப்புக்கொடுத்தார். மரணபரியந்தம் பாவமில்லாமல் தாழ்மையோடு தம்மையே பலியாக ஒப்புக்கொடுத்த அப்பம் அவரே.

**பாத்திரம்**

"பின்பு, பாத்திரத்தையும் எடுத்து, ஸ்தோத்திரம்பண்ணி, அவர்களுக்குக் கொடுத்து: நீங்கள் எல்லாரும் இதிலே பானம்பண்ணுங்கள்; இது பாவமன்னிப்புண்டாகும்படி அநேகருக்காகச் சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தமாயிருக்கிறது" (மத்தேயு 26:27-28). இயேசு அந்தப் பாத்திரத்தை பாவமன்னிப்புக்காக சிந்தப்படுகிற தம்முடைய இரத்தம் என்று அடையாளம் காட்டினார். அப்பத்தைப்போல பாத்திரத்தையும் எடுத்து அப்போஸ்தலர்கள் பானம் பண்ணும்படி கொடுத்தார்.

இஸ்ரயேல் தேசத்தின் காலத்தை நாம் திரும்பிப்பார்க்கும்போது, "மாம்சத்தின் உயிர் இரத்தத்தில் இருக்கிறது; நான் அதை உங்களுக்குப் பலிபீடத்தின்மேல் உங்கள் ஆத்துமாக்களுக்காகப் பாவநிவிர்த்தி செய்யும்படிக்குக் கட்டளையிட்டேன்; ஆத்துமாவிற்காகப் பாவநிவிர்த்தி செய்கிறது இரத்தமே" என்று லேவியராகமம் 17:11-இல் நாம் வாசிக்கிறோம்.

இங்கு, எந்த ஜீவனுக்குள் இருக்கும் உயிரையும் இரத்தம் அடையாளப்படுத்தும் என்று தேவன் குறிப்பிடுகிறார். சரீரத்திற்குள் சகல உறுப்புகளுக்கும் இரத்தம் பாயும்போது, அவைகளுக்குப் பிராண வாயுவையும் சரீரத்தின் ஒவ்வொரு அணுக்களுக்கும் தேவையான போஷாக்கைத் தரக்கூடியதாயும் இருக்கிறது. அப்பொழுது அந்தச் சரீரம் ஜீவனோடு காணப்படும். இரத்தத்தை எடுத்துவிட்டால் ஜீவன் போய்விடும்.

ஆகவே சகல ஜீவன்களின் இரத்தத்தையும் ஒரு விசேஷ விதத்தில் பாவிக்க வேண்டுமென்று தேவன் கட்டளையிட்டார். அவர்கள் அதைப் புசிக்கக்கூடாது, ஒப்புரவாகுதலின் நாளின் பாவங்களை அடையாளப்படுத்தும் மிருக பலிகளில், இரத்தத்தைப் பயன்படுத்துவதற்கு விசேஷித்தக் கட்டளைகளை அவர்கள் பெற்றிருந்தார்கள். மிருகங்களின் பலி உண்மையான ஒப்புரவாகுதலை நிறைவேற்றவில்லை. ஆனால் வருங்காலத்தில் நம்முடைய ஆண்டவராம் இயேசுவின் உண்மையான பலியைக்குறிக்கக்கூடியதாய் இருந்தது. "வெள்ளாட்டுக்கடா, இளங்காளை இவைகளுடைய இரத்தத்தினாலே அல்ல, தம்முடைய சொந்த இரத்தத்தினாலும் ஒரேதரம் மகா பரிசுத்த ஸ்தலத்திலே பிரவேசித்து, நித்திய மீட்பை உண்டுபண்ணினார்" (எபிரெயர் 9:12). இயேசு தம்முடைய சொந்த இரத்தத்தையும், சொந்த

ஜீவனையும் ஒப்புரவாகுதலின் பலியாக ஒப்புக்கொடுத்தார்.

அவருடைய இரத்தம், புது உடன்படிக்கையின் இரத்தமாக உள்ளது என்று இயேசு குறிப்பிட்டார். நம்முடைய ஆண்டவரின் பலியே புது உடன்படிக்கையின் நிறைவேற்றத்தைச் சாத்தியமாக்கியது. சரியான நேரத்தில் புதிய உடன்படிக்கை ஸ்தாபிக்கப்படும் என்று இயேசுவின் ஈடுபலி உறுதியளிக்கிறது. தந்தையாகிய ஆதாமுக்கு ஈடுபலி கிரயத்தைச் செலுத்தினதினிமித்தமாக முழு மனுக்குலத்தின் உயிர்த்தெழுலையும் அவர் சாத்தியமாக்கினார். இஸ்ரயேல் தேசத்தோடு துவங்கக்கூடிய புதிய உடன்படிக்கையின் ஒழுங்குமுறைகளின் கீழ் மனுஷன் வருவதற்கான ஒரு வாய்ப்பை இயேசு ஏற்படுத்தினார். கிறிஸ்துவே இந்தப் புதிய உடன்படிக்கையின் மத்தியஸ்தராக நியமிக்கப்படுவார் என்று பவுல் எபிரெயர் 8:6-12 மற்றும் 12:24 வசனங்களில் கூறுகிறார். இப்படியாக ஆண்டவரினால் ஆசீர்வதிக்கப்பட்ட அந்தப் பாத்திரம், அவருடைய பலியின் மரணத்தை, அதாவது மனுஷ ஜீவனை விட்டுக்கொடுப்பதை எவ்வாறு அடையாளப்படுத்தும் என்று குறிப்பிடுகிறது.

**நம்முடைய பங்கேற்றல்**

இரண்டாவது பார்வையாக நினைவுகூருதலில் அனுசரிப்பது, அவருடைய பலியில் பங்கு பெறுவதாகும். இயேசு அப்பத்தையும் பாத்திரத்தையும் அவரோடு வைத்துக் கொள்ளவில்லை. அதற்குப் பதிலாக அவைகளைத் தம்முடைய சீஷர்களிடம் கொடுத்து அதில் பங்குபெறும்படிக் கூறினார். நம்முடைய ஆண்டவரின் பலியை நாம் ஏற்றுக்கொள்வதையும், அவரைப் பின்பற்றி அதில் பங்கெடுப்பதையும் நினைவில் கொண்டவர்களாக அப்பத்தைப் புசித்து பாத்திரத்தில் பானம்பண்ண வேண்டும். அப்பத்தில் பங்கெடுக்கும்போது, கீழ்க்காணும் சிந்தனைகளை நாம் பெற்றிருக்க வேண்டும் - நம் ஆண்டவரின் பாவமில்லா பலியை உணர்ந்து பாவத்திலிருந்து இரட்சித்த நம்முடைய இரட்சகர் என்று அவரை ஏற்றுக்கொண்டு ஆவிக்குரிய உணவையும், அவர் நமக்காக விட்டுச்சென்ற அவருடைய மாதிரி மற்றும் அவருடைய உபதேசங்களினாலும் போஷிக்கப்படுவதற்குக் கடுமையாக முயற்சிக்கிறோம். அந்தப் பாத்திரத்தில் பானம்பண்ணும்போதெல்லாம் கீழ்க் காணபவற்றில் பங்கு கொள்கிறோம். நம்முடைய ஜீவனை ஆண்டவரோடுகூட மனப்பூர்வமாகப் பலி செலுத்தி, நெருக்கமான வழியில் நடக்கும்போது வரக்கூடிய சோதனைகளையும், துன்பங்களையும் நாம் ஏற்றுக்கொள்கிறோம். நாம் தேவனை அதிகமாக நேசித்து மனுக்குலத்தின் இரட்சிப்புக்காக அவருடைய ஒரே பேறான குமாரனை தந்ததினால் நாம் நம்முடைய ஆண்டவரின் அடிச்சுவடுகளைப் பின்பற்ற தீர்மானித்தோம். ஆகவே, நம்முடைய அன்பை வெளிப்படுத்த விரும்பியதால் தாமதமின்றி நமக்குள்ள அனைத்தையும் ஒப்புக்கொடுத்தோம்.

அப்போஸ்தலனாகிய பவுல், (1 கொரிந்தியர் 10:16-17) வசனங்களில் மற்றொரு காரியத்தைக் குறிப்பிடுகிறார். "நாம் ஆசீர்வதிக்கிற ஆசீர்வாதத்தின் பாத்திரம் கிறிஸ்துவினுடைய இரத்தத்தின் ஐக்கியமாயிருக்கிறதல்லவா? நாம் பிட்கிற அப்பம் கிறிஸ்துவினுடைய சரீரத்தின் ஐக்கியமாயிருக்கிறதல்லவா? அந்த ஒரே அப்பத்தில் நாமெல்லாரும் பங்குபெறுகிறபடியால், அநேகரான நாம் ஒரே அப்பமும் ஒரே சரீரமுமாயிருக்கிறோம்." நம்முடைய பங்கேற்றல் கிறிஸ்துவின் சரீர அங்கத்தினர்களை ஒருமித்துக் கட்டக்கூடியதாக உள்ளது என்று பவுல் குறிப்பிடுகிறார். "அந்த ஒரே அப்பத்தில் நாமெல்லாரும் பங்குபெறுகிறபடியால், அநேகரான நாம் ஒரே அப்பமும் ஒரே சரீரமுமாயிருக்கிறோம்." கிறிஸ்துவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி மரணபரியந்தம் விசுவாசத்தில் காத்துக்கொள்ளக்கூடிய பொதுவான இலக்கை நாம் அனைவரும் பெற்றுள்ளோம். இந்த நெருக்கமானப் பாதையில் செல்லும்போது, ஒருவருடைய உதவி மற்றொருவருக்கு தேவைப்படும் என்பதை நம்முடைய ஆண்டவராம் இயேசு அறிந்திருந்தார். அதற்காகவே ஒருவருடைய கால்களை ஒருவர் கழுவ வேண்டுமென்ற பாடத்தையும் ஒருவர்மேல் ஒருவர் அன்பு செலுத்த வேண்டும் என்ற பிரமாணத்தையும் இயேசு நமக்குக் கொடுத்தார் (யோவான் 13:14; யோவான் 15:17). நாம் நம்முடைய சொந்த சோதனைகள் மற்றும் அனுபவங்கள் வழியாகச் செல்லும்போது, நாம் ஒருவருக்கொருவர் உதவி செய்து, வெற்றிக்கொண்ட ஒவ்வொருவரையும் உற்சாகப்படுத்த வேண்டும். ஆண்டவரின் கற்பனைகளை நிறைவேற்றும்பொழுது, அவரோடும் நம்முடைய சக சரீர அங்கத்தினர்களோடும் அதிகமாக இருதயத்தில் ஐக்கியப்படுவோம்.

**நம்முடைய சோதனைகள்**

நம்முடைய சபைகளில் கடந்த வருடத்தை நாம் பின்னிட்டுப் பார்க்கும்பொழுது, நம் சகோதரர்கள் அனுபவித்த சில கடினமான சோதனைகளைக் காணலாம். சிலர் உடல் நல சோதனைகளின்

அனுபவங்களைப் பெற்றிருக்கலாம். இதை உறுதியில்லாத உருளும் சக்கரம்போல தென்படலாம். சிலர் மிகவும் நேசித்தவர்களையோ, குடும்பத்தின் உறுப்பினர்களையோ அல்லது நெருங்கிய நண்பர்களையோ இழந்திருக்கலாம். இவைகளெல்லாம் வெளிப்புறத்தில் காணக்கூடிய சில சோதனைகள். உறுதியாக சில சோதனைகள் கண்ணுக்குப் புலப்படாமலும் மறைவாய் சகிக்கும் தன்மை உடையதாய் இருக்கும். இப்படிப்பட்ட அனைத்துச் சோதனைகள் மற்றும் கஷ்டங்கள் மத்தியில் சோர்வுகளும் மனகசப்புகளும் நுழைவதற்கு வாய்ப்புண்டு. இந்தச் சோதனைகள் எளிதானதல்ல, இவைகள் கடினமானதும் பல நேரங்களில் இருதயத்தை நொறுக்கக்கூடியதுமாய் இருக்கிறது.

ஆனால் நாம் ஊக்குவிக்கப்படாமல் விடப்படுவதில்லை. நம்முடைய பரலோகப் பிதா நம்முடைய சோதனைகளில் நமக்குக் கவசம்போல் இருப்பதினால் அவர் அனைத்தையும் அறிந்திருக்கிறார். அவர் ஆச்சரியப்படுமளவுக்கு ஒன்றுமில்லை. நம்முடைய தலையின் ஒவ்வொரு மயிரையும் அவர் அறிந்திருக்கிறார் (மத்தேயு 10:29-31). அவரிடம் முழுமையாக நம்பிக்கைக்கொள்வதற்கும், கற்றுக்கொள்வதற்கும், நம்முடைய நற்குணங்கள் விருத்தியடைவதற்கும் இந்தச் சோதனைகளை நம்முடைய பிதா அனுமதிக்கிறார் (எபிரெயர் 12:5-11). நம் காலங்களில் நமக்குத் தேவை ஏற்படும்பொழுதெல்லாம் அவருடைய விலையேறப்பெற்ற வாக்குத்தத்தங்களை நமக்குக் கொடுத்து நமக்குத் துணையாக இருக்கிறார். இந்த விலையேறப்பெற்ற வாக்குத்தத்தங்களை நாம் நினைவில்கொண்டு, அதனை இறுகப்பற்றிக்கொண்டு அதைச் சார்ந்திருக்கவும் வேண்டும். முழு மனுக்குலத்தின் உயிர்த்தெழுதலின் வாக்குத்தத்தம், அவருடைய இராஜ்யம் வருவதற்கான வாக்குத்தத்தம், மனுஷனுடைய எதிராளியான மரணம் அழிக்கப்படும் என்ற வாக்குத்தத்தம், தந்தையோடு ஜெபத்தில் எப்பொழுதும் தரித்திருப்பதற்கான வாக்குத்தத்தம் மற்றும் என்ன நடந்தாலும் நம்முடைய பரலோக தந்தை நம்மோடிருந்து நம்மை தோல்வியடையச் செய்யாமல், நம்மை என்றும் கைவிடாமலும் இருக்கக்கூடிய வாக்குத்தத்தங்கள் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளது (உபாகமம் 31:6).

நினைவுகூருதலை அனுசரித்தல்

# விருந்தை ஆசாரிக்கக்கடவோம்


Ernie Kuenzli

"நீங்கள் மேன்மைபாராட்டுகிறது நல்லதல்ல; கொஞ்சம் புளித்தமா பிசைந்த மா முழுவதையும் புளிப்பாக்குமென்று அறியீர்களா? ஆகையால், நீங்கள் புளிப்பில்லாதவர்களாயிருக்கிறபடியே, புதிதாய்ப் பிசைந்த மாவாயிருக்கும்படிக்கு, பழைய புளித்த மாவைப் புறம்பே கழித்துப்போடுங்கள். ஏனெனில் நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காகப் பலியிடப்பட்டிருக்கிறாரே. ஆதலால் பழைய புளித்தமாவோடேஅல்ல, துர்க்குணம் பொல்லாப்பு என்னும் புளித்தமாவோடும் அல்ல, துப்புரவு உண்மை என்னும் புளிப்பில்லாத அப்பத்தோடே பண்டிகையை ஆசரிக்கக்கடவோம்" (1 கொரிந்தியர் 5:6-8).

புளிப்பை அகற்ற வேண்டுமென்று பவுல் கூறும்போது, பாவத்தின் இயல்புகளை வெளியே அகற்றும்படி அடையாளமாகக் கூறுகிறார். பஸ்காவுக்கு முன் தங்களுடைய வீடுகளிலிருக்கும் புளிப்பை அகற்றி சுத்திகரிக்க வேண்டுமென்று இஸ்ரயேலர்களுக்குக் கூறப்பட்டது. "புளிப்பில்லா அப்பத்தை ஏழுநாளளவும் புசிக்கக்கடவீர்கள்; முதலாம் நாளில்தானே புளித்தமாவை உங்கள் வீடுகளிலிருந்து நீக்கவேண்டும்; முதலாம் நாள் தொடங்கி ஏழாம் நாள்வரைக்கும் புளித்த அப்பம் புசிக்கிறவன் எவனோ அந்த ஆத்துமா இஸ்ரவேலரிலிருந்து அறுப்புண்டுபோவான்" (யாத்திராகமம் 12:15).

புளிப்புள்ள அப்பத்தைப் புசிக்கக்கூடிய எந்த நபரும் இஸ்ரயேலிலிருந்து அறுப்புண்டு போவார்கள். கிறிஸ்தவர்கள் தங்களுடைய இருதயத்தில் யாதொரு பாவத்தின் ஆதாரங்களைக் கண்டுபிடிக்கும்போது, உடனடியாக அவைகளை அகற்றக்கூடிய அவசியத்தை இது காட்டுகிறது. பாவங்களைப் பொறுத்துக்கொண்டால் அல்லது அதற்கு இசைந்துபோனால் மேலும் அதிகபட்சமான பாவங்களுக்கு அவைகள் வழிநடத்தி இறுதியாக புது சிருஷ்டியை அழித்துவிடும் என்று பவுல் கொரிந்து சபையிலுள்ள சகோதரர்களை எச்சரித்தார். நாம் பாவத்தோடு என்றும் சமரசமாக முடியாது. அப்படிச் செய்வோமேயானால் இறுதியில் நம்மை அழித்துவிடும்.

விழுந்துபோன மாம்சத்தின் இயல்பாகிய பாவத்தை நாம் சுத்திகரிக்க வேண்டும். 1 கொரிந்தியர் 5:11-ஆம் வசனத்தில் பவுல் சில பழைய புளிப்புகளை வரிசைப்படுத்துகிறார். (1) விபச்சாரம் (2) பொருளாசை (3) விக்கிரகாரதனை, (4) உதாசீனம் (5) வெறித்தனம் மற்றும் (6) கொள்ளையிடுதல். கொலோசெயர் 3:5-ஆம் வசனத்தில், (7) அசுத்தம் (8) மோகம் மற்றும் (9) துர் இச்சை இவைகளோடு பவுல் இணைத்தார். கொரிந்து சபையிலுள்ளவர்கள் இப்படிப்பட்ட ஒரு பிரச்சனையில் முன்னதாகவே ஈடுபட்டுக்கொண்டிருந்ததால். **எல்லா** பழக்கங்களையும் அந்தப் பழக்கங்களை ஊக்குவிக்கும் சகல **விருப்பங்களையும்** வெளியேற்றும்படி பவுல் வற்புறுத்தினார். பவுலின் நாட்களிலுள்ள சமுதாய பழக்க வழக்கங்கள் அல்லது நம்முடைய நாட்களில் சமுதாயத்தில் காணப்படும் பழக்கங்களைக் காட்டிலும் ஒரு கிறிஸ்தவர்களுடைய நிலை மிகவும் உயர்வாக உள்ளது.

### புதிய மாவு

நாம் புளிப்புள்ளவர்களாக இருந்தாலும், நாம் புளிப்பில்லாத புதிதாய் பிசைந்த மாவாய் இருக்கும்படிக்கு - நம்மிடத்திலுள்ள புளித்த மாவை வெளியே களைந்துவிடும்படி அப்போஸ்தலனாகிய பவுல் 1 கொரிந்தியர் 5:7-இல் கூறுகிறார். நமக்குள் காணப்படும் புளிப்பை நாம் வெளியே அகற்றுவதும், அதே நேரத்தில் நாம் புளிப்புள்ளவர்களாக இருப்பதும் எப்படி? புது சிருஷ்டியாகிய பொக்கிஷத்தை மண்பாண்டங்களில் பெற்றிருக்கிறோம் என்பதை பவுல் குறிப்பிடுகிறார். நமக்குள் வளரக்கூடிய புது சிருஷ்டி தேவனால் ஜெநிப்பிக்கப்பட்டதினிமித்தம் புளிப்பில்லாததும் பாவமற்றதுமாய் காணப்படுகிறது (1 யோவான் 3:9). ஆனால் புது சிருஷ்டியானது பாவத்தின் பாதிப்புகளினால் விழுந்துபோன மற்றும் அபூர்ணமான மாம்ச கூடாரத்தில் வாசம் செய்துகொண்டிருக்கிறது. புது சிருஷ்டிகளாக நம்முடைய பொறுப்புகள் - நம்முடைய விழுந்துபோன மாம்சத்தின் இயல்புகளையும், விருப்பங்களையும், வாஞ்சைகளையும் முழுமையாகக் களைந்து, கூடுமானளவுக்கு நம்முடைய மாம்சத்தை சுத்திகரித்து நம்முடைய சரீரத்தைப் புது சிருஷ்டியின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர வேண்டும்.

"அந்தப்படி, முந்தின நடக்கைக்குரிய மோசம்போக்கும் இச்சைகளாலே கெட்டுப்போகிற பழைய மனுஷனை நீங்கள் களைந்துபோட்டு,

உங்கள் உள்ளத்திலே புதிதான ஆவியுள்ளவர்களாகி, மெய்யான நீதியிலும் பரிசுத்தத்திலும் தேவனுடைய சாயலாகச் சிருஷ்டிக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக்கொள்ளுங்கள்" என்று எபேசியர் 4:22-24-இல் பவுல் எழுதுகிறார்.

நாம் நம்முடைய மாம்சத்தின் குணங்களையும், அவைகளில் விழுந்துபோன குணலட்சணங்களையும் முற்றிலுமாகக் களைந்துவிட்டு, அவைகள் இருந்த இடத்தில் புது சிருஷ்டியின் குணலட்சணங்களாகிய ஆவியின் கனிகளை வளர்க்க வேண்டும். இவைகள் நம்முடைய வாழ்க்கையை முழுமையாகக் கட்டுப்படுத்தி, நம்முடைய சிந்தனைகளையும், வார்த்தைகளையும், கிரியைகளையும், இயேசு கிறிஸ்து விட்டுச்சென்ற மாதிரிக்கு ஏற்றவாறு கீழ்ப்படுத்த வேண்டும். கிறிஸ்துவின் சிந்தை நம்முடைய வாழ்க்கை, கிரியை மற்றும் வார்த்தைகளைக் கட்டுப்பாட்டிற்குள் எடுத்துக்கொள்ளும்போது நாம் அபூர்ணராக இருந்தாலும்கூட கொஞ்சம் கொஞ்சமாகப் புளிப்பில்லாதவர்களாக மாற இயலும் (1 பேதுரு 1:14-16)

### கிறிஸ்து நமது பஸ்கா ஆடு

அடுத்ததாக கிறிஸ்து நமது பஸ்காவாக பலியிடப்பட்டார் என்று பவுல் கூறுகிறார். அவர் முதல் பஸ்கா மற்றும் எகிப்திலிருந்து இஸ்ரயேலர்களின் விடுதலையைக் குறிப்பிடுகிறார் (யாத்திராகமம் 12:3, 5-8, 10-13). இஸ்ரயேலர்களை விடுதலைச் செய்யும்படிக்கு, தேவன் பத்தாவது மற்றும் இறுதியான வாதையை எகிப்திற்கு எதிராக நடத்தினார். (தலைச்சன் பிள்ளைகளின் சங்காரம்) (யாத்திராகமம் 11:1, 5). இஸ்ரயேலரின் தலைச்சன் பிள்ளைகளைப் பாதுகாப்பதற்கு, ஒரு வயது பழுதற்ற ஆட்டுக்குட்டியைப் பதினான்காம் தேதி மாலை அன்று அடிக்கும்படி தேவன் இஸ்ரயேலர்களுக்குக் கட்டளையிட்டார். சங்காரத் தூதனிடமிருந்து தலைச்சன் பிள்ளைகள் பாதுகாக்கப்படுவதற்கு தங்களுடைய வீட்டின் நிலைக்கால்களிலும் மேற்சட்டத்திலும் அடையாளமாக அந்த ஆட்டுக்குட்டியின் இரத்தத்தைத் தெளிக்க வேண்டியதாய் இருந்தது. அந்த இராத்திரியில் அடிக்கப்பட்ட ஆட்டை முழுமையாகச் சுட்டுப் புளிப்பில்லா அப்பங்களோடும், கசப்பான கீரைகளோடும் இஸ்ரயேலர்கள் புசிக்க வேண்டியதாயிருந்தது. அந்த ஆடு முழுமையாகப் புசிக்கப்பட வேண்டும் - அதில் ஒன்றும் மீதி வைக்கக்கூடாது. அவர்கள் எகிப்தைவிட்டுச் செல்வதற்கான முழுமையான ஆயத்த நிலையில் அந்த ஆட்டைப் புசிக்க வேண்டும்,

பழுதற்ற அந்தப் பஸ்கா ஆடு இயேசுவை சித்தரித்தது. "பரிசுத்தரும், குற்றமற்றவரும், மாசில்லாதவரும், பாவிகளுக்கு விலகினவரும், வானங்களிலும் உயர்ந்தவருமாயிருக்கிற இவ்விதமான பிரதான ஆசாரியரே நமக்கு ஏற்றவராயிருக்கிறார்" (எபிரெயர் 7:26). பஸ்கா ஆட்டின் இரத்தம் வீட்டின் நிலைக்கால்களில் பூசப்பட்டதுபோல, இயேசுவின் இரத்தம் சுவிசேஷ யுகத்தில் ஆதாமின் மரணத் தீர்ப்பிலிருந்து இரட்சிக்கப்பட்டு, ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்ட சபையின் இருதயங்களில் பூசப்பட வேண்டும் (எபிரெயர் 11:28).

பஸ்கா இரவில் சுடப்பட்ட ஆட்டை இஸ்ரயேலர்கள் புசிப்பதுபோல, சுவிசேஷ யுகத்தின் இரா காலத்தின்போது, நம்முடைய ஆண்டவராகிய இயேசுவை சபை புசிக்க வேண்டும். அதாவது பலியின் நன்மைகளை நாம் உட்கொள்ளுவதை இது தெளிவாகப் பொருள்படுத்துகிறது. இதினிமித்தம் நாம் இயேசுவின் அடிச்சுவடுகளில் நடப்பதற்கு ஏதுவாக, நீதிமானாக்கப்பட்ட நிலையையும், சுத்திகரிப்பையும் கொடுக்கக்கூடியதாய் இருக்கிறது. மனுஷகுமாரனுடைய மாம்சத்தைப் புசித்து, அவருடைய இரத்தத்தைப் பானம் பண்ணாவிட்டால் நமக்குள் ஜீவன் இல்லை என்று யோவான் 6:53-இல் இயேசு சொன்னபோது இக்காரியத்திற்கு விளக்கமளித்தார்.

### விருந்தை ஆசாரிக்கக்கடவோம்

"ஆதலால் பழைய புளித்தமாவோடேஅல்ல, துர்க்குணம் பொல்லாப்பு என்னும் புளித்தமாவோடும் அல்ல, துப்புரவு உண்மை என்னும் புளிப்பில்லாத அப்பத்தோடே பண்டிகையை ஆசரிக்கக்கடவோம்" (1 கொரிந்தியர் 5:8) என்று பவுல் தன்னுடைய நீண்ட வாக்கியத்தை முடித்தார். நினைவுகூருதல் என்னும் அந்த ஒரே விருந்தை மட்டுமே கிறிஸ்தவர்கள் அனுசரிக்க ஊக்குவிக்கப்பட வேண்டும் என்பதையே பவுல் குறிப்பிடுகிறார். ஆனால் இதைச் சரியாக அனுசரிப்பதற்கு நாம் பழைய புளித்த மாவையும் (ஆதாமின் பாவம்) பொல்லாப்பு மற்றும் துர்குணமாகிய புளித்த மாவை (ஆவிக்குரிய பெருமை) நம்முடைய வாழ்க்கையிலிருந்து அகற்ற வேண்டும். மேலும் இந்தப் பண்டிகையை புளிப்பில்லா கோட்பாடுகளாகிய உண்மை மற்றும் சத்தியத்தோடு அனுசரிக்க வேண்டும்.

சகோதரர் ரசல் எழுதிய ஆறாம் தொகுப்பில் (புது சிருஷ்டி), நாம் இந்த நினைவுகூருதலை, நம்முடைய ஆண்டவரின் மரண நாளின்போது, அனுசரிக்க வேண்டுமென்று எழுதுகிறார். ஆயினும், விழாவின் அனுசரிப்பு என்பது, நினைவுகூருதலின் நாள் அனுசரிப்புகளோடு மட்டும் நிறுத்திவிடாமல் இன்னும் ஆழமாக அதற்குள் பங்குகொள்ளுதல் அவசியமாகிறது. நம்முடைய கிறிஸ்தவ வாழ்க்கையில் இந்த விருந்தை நித்தமும் அனுசரிக்க வேண்டும். அப்பம் மற்றும் பாத்திரத்தை அடையாளப்படுத்துவதில் பங்குகொண்டு அனுதினமும் நம் ஆண்டவரின் பிட்கப்பட்ட சரீரத்தை உண்டு அவர் சிந்திய இரத்தத்தைப் பானம்பண்ண வேண்டும்.

இந்த விருந்தைக்குறித்து நம்முடைய ஆண்டவர், "நீங்கள் மனுஷகுமாரனுடைய மாம்சத்தைப் புசியாமலும், அவருடைய இரத்தத்தைப் பானம்பண்ணாமலும் இருந்தால் உங்களுக்குள்ளே ஜீவனில்லை என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். என் மாம்சத்தைப் புசித்து, என் இரத்தத்தைப் பானம்பண்ணுகிறவனுக்கு நித்தியஜீவன் உண்டு; நான் அவனைக் கடைசிநாளில் எழுப்புவேன். என் மாம்சம் மெய்யான போஜனமாயிருக்கிறது, என் இரத்தம் மெய்யான பானமாயிருக்கிறது. என் மாம்சத்தைப் புசித்து, என் இரத்தத்தைப் பானம்பண்ணுகிறவன் என்னிலே நிலைத்திருக்கிறான், நானும் அவனிலே நிலைத்திருக்கிறேன்" என்று யோவான் 6:53-56 வசனங்களில் விவரிக்கிறார்.

நினைவுகூருதலின் அனுசரிப்பில் அப்பத்திலும், பாத்திரத்திலும் பங்கெடுக்கக்கூடிய காரியம், மனுஷகுமாரனுடைய மாம்சத்தைப் புசித்து அவருடைய இரத்தத்தைப் பானம் பண்ணுவதாகும். நாம் சத்தியத்தைப் புசித்து, அவருடைய வார்த்தைகளை, நம்முடைய இருதயங்கள் மற்றும் சிந்தைகளில் ஏற்றுக்கொண்டு, நம்முடைய பலியின் ஜீவியத்தை வழிநடத்த அனுமதிப்பதே நம்முடைய ஆண்டவரின் நொறுக்கப்பட்ட சரீரத்தைப் புசிக்கக்கூடியதாகும். யோவான் 6:63-ஆம் வசனத்தை இயேசு கூறும்போது, அவர் இக்காரியத்தையே பொருள்படுத்தினார். "ஆவியே உயிர்ப்பிக்கிறது, மாம்சமானது ஒன்றுக்கும் உதவாது; நான் உங்களுக்குச் சொல்லுகிற வசனங்கள் ஆவியாயும் ஜீவனாயும் இருக்கிறது." இயேசுவின் மூன்றரை வருட பூமிக்குரிய ஊழியத்தில், பலியாக இந்தச் சரீரம் நொறுக்கப்பட்டதினால், அவருடைய **வார்த்தைகள்**, நம்முடைய **ஆவிக்குரியதாகவும், ஜீவனைக்** கொடுக்கக்கூடியதாகவும் நம்மைச் சுத்திகரிப்பதற்காகவும் உள்ளது.

**சத்தியத்தை உட்கொள்ளக்கடவோம்**

சத்தியத்தை உட்கொள்வதற்கு நாம் வேத படிப்புகளின் வழியாகவும், தியானத்தின் வழியாகவும், சகோதரர்களின் ஐக்கியத்தினாலும் அதைக் கூட்டிச்சேர்க்க வேண்டும். ஓய்வு நாளை தவிர, இஸ்ரயேலர்கள் புசிப்பதற்காக மன்னாவை நித்தமும் கூட்டிச் சேர்த்தார்கள். அவர்களுடைய முயற்சிகள் தாமதித்தபோது, சூரியன் உதித்தப் பின் மன்னா உருகிப்போகும். அந்நாளில் அவர்கள் பசியோடு இருக்க வேண்டியதாய் இருந்தது (யாத்திராகமம் 16:14-21). "கேளுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்; தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்; தட்டுங்கள், அப்பொழுது உங்களுக்குத் திறக்கப்படும்" மத்தேயு 7:7 என்று நம்முடைய ஆண்டவர் சத்தியத்தைப்பற்றிக் குறிப்பிட்டதைப்போல நாமும் சத்தியத்தை தேடுவதற்குச் சரியான முயற்சிகளையும் அர்ப்பணிப்புகளையும் ஏறெடுக்க வேண்டும்.

ஆண்டவருடைய வார்த்தையை எவ்வாறு தேடவேண்டுமென்று தாவீது சங்கீதம் 119:14-16 வரை விவரிக்கிறார். "திரளான செல்வத்தில் களிகூருவதுபோல, நான் உமது சாட்சிகளின் வழியில் களிகூருகிறேன். உமது கட்டளைகளைத் தியானித்து, உமது வழிகளைக் கண்ணோக்குகிறேன். உமது பிரமாணங்களில் மனமகிழ்ச்சியாயிருக்கிறேன்; உமது வசனத்தை மறவேன்." தாவீதைப்போல அவருடைய சாட்சிகளிலும், தேவனுடைய கட்டளைகளின் தியானத்திலும், அவருடைய பிரமாணங்களிலும், வசனத்திலும் நாம் களிகூர வேண்டும். இவைகளை நாம் செய்யும்போது, நம்முடைய ஆண்டவரின் சரீரத்தை நாம் விருந்துண்பவர்களாய் இருப்போம்.

சத்தியம் நம்மைச் சுத்திகரிக்க வேண்டுமானால் அதை நாம் நம்முடைய இருதயங்களுக்குள்ளும், சிந்தனைகளுக்குள்ளும் எடுத்துச்செல்ல வேண்டும். "உம்முடைய வார்த்தைகள் கிடைத்தவுடனே அவைகளை உட்கொண்டேன்; உம்முடைய வார்த்தைகள் எனக்குச் சந்தோஷமும், என் இருதயத்துக்கு மகிழ்ச்சியுமாயிருந்தது; சேனைகளின் தேவனாகிய கர்த்தாவே, உம்முடைய நாமம் எனக்குத் தரிக்கப்பட்டிருக்கிறது" எரேமியா 15:16 என்று சொல்லப்படுகிறது. நம்முடைய அன்றாட வாழ்க்கையில் சத்தியத்தை நடைமுறைப்படுத்த வேண்டிய அவசியத்தை நம்முடைய ஆண்டவராம்

இயேசு மத்தேயு 7:24-25-ஆம் வசனங்களில் வலியுறுத்துகிறார். "ஆகையால், நான் சொல்லிய இந்த வார்த்தைகளைக் கேட்டு. இவைகளின்படி செய்கிறவன் எவனோ, அவனைக் கன்மலையின்மேல் தன் வீட்டைக் கட்டின புத்தியுள்ள மனுஷனுக்கு ஒப்பிடுவேன். பெருமழை சொரிந்து, பெருவெள்ளம் வந்து, காற்று அடித்து, அந்த வீட்டின்மேல் மோதியும், அது விழவில்லை; ஏன்னென்றால், அது கன்மலையின்மேல் அஸ்திபாரம் போடப்பட்டிருந்தது." இதுபோல, ஒரு எச்சரிப்பை யாக்கோபும் நமக்குக் கொடுத்திருக்கிறார். "அல்லாமலும், நீங்கள் உங்களை வஞ்சியாதபடிக்குத் திருவசனத்தைக் கேட்கிறவர்களாய் மாத்தரமல்ல, அதின்படி செய்கிறவர்களாயும் இருங்கள். சுயாதீனப்பிரமாணமாகிய பூரணப் பிரமாணத்தை உற்றுப்பார்த்து, அதிலே நிலைத்திருக்கிறவனே கேட்கிறதை மறக்கிறவனாயிராமல், அதற்கேற்ற கிரியை செய்கிறவனாயிருந்து, தன் செய்கையில் பாக்கியவானாயிருப்பான்" யாக்கோபு 1:22, 25.

நம்முடைய சொந்த அனுபவங்களில், வேதாகமத்தில் காணப்படும் மாதிரிகளையும், கற்பனைகளையும், கட்டளைகளையும் தனிப்பட்ட முறையில் செயல்படுத்துவதே, சத்தியத்தை உட்கொள்வதற்கானப் பொருளாகும். சத்தியம் நம் வாழ்வில் பரிசுத்தமாக்கும் விளைவுகளைக் கொண்டுவர வேண்டுமானால் - இந்த ஒரு வழிமட்டுமே உள்ளது. (யோவான் 17:17). இந்த வேலை நினைவுகூருதலின் காலங்களில் மட்டுமல்ல, நம்முடைய கிறிஸ்தவ வாழ்க்கை முழுவதிலும் காணப்பட வேண்டும். "கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே சகல ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருப்பதாக; சங்கீதங்களினாலும் கீர்த்தனைகளினாலும் ஞானப்பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் போதித்துப் புத்திசொல்லிக்கொண்டு, உங்கள் இருதயத்திலே கர்த்தரைப் பக்தியுடன் பாடி" என்று கொலோசெயர் 3:16-இல் அப்போஸ்தலனாகிய பவுல் நம்மை எச்சரிக்கிறார். கிறிஸ்துவின் வார்த்தை நமக்குள் ஜீவனோடு காணப்பட்டு, நம்முடைய வாழ்க்கையை கிறிஸ்துவின் சிந்தை ஆட்கொள்ளக்கூடிய பலனைக் கொடுக்க வேண்டும்.

**பாத்திரத்தில் பங்கேற்பு**

போஜனத்தை அனுசரித்தல் என்பதற்கு, பாத்திரத்திலும் பங்கெடுக்க வேண்டுமென்று பொருள்படுகிறது. தாவீது சங்கீதம் 116:13-இல் எழுதியபடி, "கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாமலிருக்கிறீர்களா?" நாம் நம்முடைய ஆண்டவரின் பாத்திரத்தில் பங்கேற்கிறோம். இயேசு கிறிஸ்துவின் பலியின் நன்மையின்மேல் விசுவாசம் கொண்டவர்களாக, உடன்படிக்கைச் செய்வதற்கு தேவனிடம் நாம் சென்றபோது, முதல் முதலாகப் பாத்திரத்தில் பங்கெடுத்தோம் (1 யோவான் 1:7). நம்முடைய கிறிஸ்தவ வாழ்க்கையில் கிறிஸ்துவின் இரத்தத்தின்மேல் விசுவாசமும், உறுதியும்கொண்டு, நிலைநிற்கும்போது நாம் தொடர்ந்து அவருடைய பாத்திரத்தில் பங்கு கொள்கிறோம். மேலும் கிறிஸ்துவின் இரத்தத்தைப் பயன்படுத்தி எல்லா பாவங்களிலிருந்தும் நம்மைச் சுத்திகரித்துக்கொள்கிறோம். (ஏசாயா 61:10; 1 யோவான்1:9).

இயேசுவின் இரத்தத்தினால் நிரப்பப்பட்ட அந்தப் பாத்திரம், நமக்கு நீதிமானாக்கப்பட்ட நிலமையைத் தருகிறது. இதைக்குறித்து பேதுரு, 1 பேதுரு 1:18-19-இல் விவரிக்கிறார். "உங்கள் முன்னோர்களால் பாரம்பரியமாய் நீங்கள் அநுசரித்துவந்த வீணான நடத்தையினின்று அழிவுள்ள வஸ்துக்களாகிய வெள்ளியினாலும் பொன்னினாலும் மீட்கப்படாமல் குற்றமில்லாத மாசற்ற ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தினாலே மீட்கப்பட்டீர்களென்று அறிந்திருக்கிறீர்களே."

இயேசுவின் இரத்தத்தினால் நாம் சுத்திகரிக்கப்பட்டு, மீட்கப்பட்டு, நீதிமானாக்கப்பட்டு தேவனோடு ஒப்புரவானோம் என்று அப்போஸ்தலனாகிய பவுல் எழுதுகிறார். "வெள்ளாட்டுக்கடா, இளங்காளை இவைகளுடைய இரத்தத்தினாலே அல்ல, தம்முடைய சொந்த இரத்தத்தினாலும் ஒரேதரம் மகா பரிசுத்த ஸ்தலத்திலே பிரவேசித்து, நித்திய மீட்பை உண்டுபண்ணினார்" (எபிரெயர் 9:12). "அவர் சிலுவையில் சிந்தின இரத்தத்தினாலே சமாதானத்தை உண்டாக்கியதால்" (கொலோசெயர் 1:20) தேவன் இயேசுவின் வழியாக சகல காரியங்களையும் அவருக்கள் ஒப்புரவாக்குவார். "முன்னே தூரமாயிருந்த நீங்கள் இப்பொழுது கிறிஸ்து இயேசுவுக்குள் கிறிஸ்துவின் இரத்தத்தினாலே சமீபமானீர்கள்" (எபேசியர் 2:13) என்று பவுலும் கூறுகிறார்.

இயேசுவின் இரத்தத்தினால் தேவன் நம்மை அவரோடு எவ்வாறு ஒப்புரவாக்கினார் என்பதை பவுல் விவரிக்கிறார். "இவ்விதமாக, நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்கிற படியால், நம்முடைய

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துமூலமாய் தேவனிடத்தில் சமாதானம் பெற்றிருக்கிறோம். அவர்மூலமாய் நாம் இந்தக் கிருபையில் பிரவேசிக்கும் சிலாக்கியத்தை விசுவாசத்தினால் பெற்று நிலைகொண்டிருந்து, தேவமகிமையை அடைவோமென்கிற நம்பிக்கையினாலே மேன்மைபாராட்டுகிறோம். இப்படி நாம் அவருடைய இரத்தத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்க, கோபாக்கினைக்கு நீங்கலாக அவராலே நாம் இரட்சிக்கப்படுவது அதிக நிச்சயமாமே" (ரோமர் 5:1, 2, 9).

நம்முடைய கிறிஸ்தவ வாழ்க்கையின் துவக்கத்திலேயே, விழுந்துபோன நம் சரீரத்திற்கு நீதிமானாக்கப்பட்ட நிலையைப் பெற்றுவிட்டோம். நாம் கிறிஸ்துவின் இரத்தத்தின்மேலுள்ள விசுவாசத்தினால் நம் பலிகளை தேவன் ஏற்புடையதாய் மாற்றினார்.

**இஸ்ரயேலர்களின் தலைச்சன் பிள்ளை களைப்போல நாமும் இரத்தத்தின் கீழ் இருக்க வேண்டும்**

இயேசுவின் இரத்தத்தினால் நாம் பெற்ற சுத்திகரிப்பு உடன்படிக்கையோடு முடிவடைவதில்லை. பஸ்காவின்போது தலைச்சன் பிள்ளைகள் பாதுகாக்கப்படுவதற்கு இராமுழுவதும் அந்த இரத்தத்தின் கீழ் இருந்ததுபோல (யாத்திராகமம் 12:22), நாமும் கிறிஸ்துவின் பலியின் இரத்தத்தின் கீழிருக்க வேண்டும் (எபிரெயர் 10:26, 29). பாத்திரத்தை அடையாளப்படுத்தும் இயேசுவின் பலி செலுத்தப்பட்ட வாழ்க்கையை, நம்முடைய கிறிஸ்தவ வாழ்க்கை முழுவதும் தொடர்ந்து விசுவாசித்துப் புரிந்துகொண்டு, பாராட்டி, நேசிக்க வேண்டும். நம்முடைய நீதிமானாக்கப்பட்ட நிலைக்கும், நம்முடைய இரட்சிப்புக்கும் சிந்தப்பட்ட அந்த இரத்தமே அடிப்படையானது. இயேசுவின் இரத்தம் இல்லாமல், தேவனுக்கு முன் நிற்கவும் வாய்ப்பில்லை, வருங்காலத்தைக்குறித்த நம்பிக்கையும் இல்லை. மற்றும் இக்காலத்திற்கான எந்த உதவியும் இல்லை.

தொடர்ந்து நடக்க வேண்டிய சுத்திகரிப்பைக்குறித்து அப்போஸ்தலனாகிய யோவான், 1 யோவான் 2:1-2-இல் விவரிக்கிறார் "என் பிள்ளைகளே, நீங்கள் பாவஞ்செய்யாதபடிக்கு இவைகளை உங்களுக்கு எழுதுகிறேன்; ஒருவன் பாவஞ்செய்வானானால் நீதிபரராயிருக்கிற இயேசு கிறிஸ்து நமக்காகப் பிதாவினிடத்தில் பரிந்து பேசுகிறவராயிருக்கிறார். நம்முடைய பாவங்களை நிவிர்த்தி செய்கிற கிருபாதாரபலி அவரே; நம்முடைய பாவங்களை மாத்திரம் அல்ல, சர்வலோகத்தின் பாவங்களையும் நிவிர்த்தி செய்கிற பலியாயிருக்கிறார்."

நாம் எப்பொழுதெல்லாம் தேவனுக்குப் பரிபூரணமாகப் பணி செய்வதில் விழுந்து போகிறோமோ, அப்பொழுதெல்லாம் நம்முடைய அநீதியைச் சுத்திகரிப்பதற்கு கிறிஸ்துவின் இரத்தம் நம்மில் உள்ளது. நம்முடைய அபூரணமான சரீரத்தில் தேவனுடைய பார்வையில் எந்த நன்மையான காரியமும் வாசம் செய்வதில்லை என்பதை தேவன் அறிந்திருக்கிறார் (ரோமர் 7:18). அதற்காகவே இயேசு நமக்காகப் பரிந்து பேசுகிறவராக தேவன் ஏற்படுத்தியிருக்கிறார். நாம் சகல பாவங்களிலிருந்து சுத்திகரிக்கப்படுவதற்கு கிறிஸ்துவின் பலியின் புண்ணியங்களை நாம் பயன்படுத்த வேண்டும்.

"ஆனாலும் தங்கள் வஸ்திரங்களை அசுசிப்படுத்தாத சிலபேர் சர்தையிலும் உனக்குண்டு; அவர்கள் பாத்திரவான்களானபடியால் வெண்வஸ்திரந்தரித்து என்னோடேகூட நடப்பார்கள்" என்று வெளிப்படுத்தல் 3:4-இல் கூறப்படுகிறது. சபையின் பல அங்கத்தினர்கள் தங்களுடைய கிறிஸ்துவின் நீதிமானாக்கப்பட்ட வஸ்திரத்தை அசுசிப்படுத்தி அதை கிறிஸ்துவின் இரத்தத்தினால் கழுவாமல் விடப்பட்டதை இந்தப் பகுதி நமக்குக் குறிப்பிடுகிறது. அவர்களுடைய பாவங்களை உணராமல் அல்லது அவர்கள் பாவம் செய்தபோது கிறிஸ்துவின் இரத்தத்தின் வழியாக மன்னிப்பைக் கேட்காமல் இப்படிப்பட்ட நிலமையை அடைந்தார்கள் (வெளிப்படுத்தல் 3:3).

இந்நிலையைத் தவிர்ப்பதற்கு நாம் தொடர்ந்து நம்முடைய நடத்தையைச் சத்தியத்தின் வார்த்தைகளால் வழிநடத்தி ஆண்டவரைச் சேவிக்கும்போது ஏற்படும் குறைகளை கிறிஸ்துவின் இரத்தத்தைப் பயன்படுத்தி நம்மை நாம் சுத்திகரிக்க வேண்டும். பாத்திரத்தில் சித்தரிக்கப்படும் இயேசுவின் பலியின் புண்ணியங்களைத் தொடர்ந்து பயன்படுத்தும்போது தேவனுடைய பார்வையில் அங்கீகரிக்கப்பட்டவர்களாக நிலைத்திருக்கலாம்.

**பழைய புளித்த மாவு**

பழைய புளித்த மாவோடு மற்றும் துர்க்குணம், பொல்லாப்பு என்கிற புளித்த மாவோடும் பண்டிகையை ஆசரிக்க வேண்டாமென்று பவுல் வலியுறுத்துகிறார். பழைய புளித்த மாவு நம்முடைய விழுந்துபோன மாம்சத்தின் பலவீனங்களை அடையாளப்ப டுத்துகிறது. பாவத்தினால் ஏற்பட்ட இந்த வடுக்கள்

நம்மால் சுதந்தரிக்கப்பட்டதும், கிறிஸ்துவினிடம் முதலில் வந்தபோது நமக்குள் காணப்பட்டதாயுமிருந்தது. நம்முடைய இருதயங்கள், சிந்தைகள் மற்றும் வாழ்க்கையிலிருந்தும் கூடுமானளவு அவைகளைச் சுத்திகரிக்க வேண்டும்.

"ஆகையால், நீங்கள் எல்லாவித அழுக்கையும் கொடிய துர்க்குணத்தையும் ஒழித்துவிட்டு, உங்கள் உள்ளத்தில் நாட்டப்பட்டதாயும் உங்கள் ஆத்துமாக்களை இரட்சிக்க வல்லமையுள்ளதாயுமிருக்கிற வசனத்தைச் சாந்தமாய் ஏற்றுக்கொள்ளுங்கள்" என்று யாக்கோபு 1:21-இல் கூறுகிறது. நம்முடைய இருதயங்கள், நம்முடைய சிந்தைகள், நம்முடைய வாழ்கைகளிலிருந்து சகலவிதமான பூமிக்குரிய அசுத்தங்களையும், ஒழுக்கக்கேடுகளையும் வெளியேற்றி சுத்திகரிக்க வேண்டும். இந்தப் பலவீனங்களில் சிறிதளவான பலவீனத்தைக்கூட வெளியே அகற்றும்படி பவுல் எச்சரிக்கிறார். "இப்பொழுதோ கோபமும் மூர்க்கமும் பொறாமையும், உங்கள் வாயில் பிறக்கலாகாத தூஷணமும் வம்பு வார்த்தைகளுமாகிய இவைகளையெல்லாம் விட்டுவிடுங்கள். ஒருவருக்கொருவர் பொய் சொல்லாதிருங்கள்; பழைய மனுஷனையும் அவன் செய்கைகளையும் களைந்துபோடுங்கள்" (கொலோசெயர் 3:8-9).

புதிய புளிப்பை நம் வாழ்க்கையிலிருந்து அகற்ற வேண்டும் என்று பவுல் தொடர்ந்து கூறுகிறார். நம் இருதயம், சிந்தனை, வாழ்க்கை தினமும் சுத்தகரிக்க வேண்டியவைகள். (1) ஒருவரையொருவர் காயப்படுத்துவதற்கான விருப்பமும் அதற்கான திட்டமும் மற்றும் (2) கூடுமானளவுக்குத் தீமையான வார்த்தைகள் மற்றும் கிரியைகள்.

### புளிப்பற்ற கோட்பாடுகள்

அதற்குப்பதிலாக, உண்மை, சத்தியம் என்ற புளிப்பில்லாத (கோட்பாடுகளோடு) விருந்தை ஆசரிக்கக்கடவோம். "அப்பம்" அல்லது "கோட்பாடு" என்ற இந்த வார்த்தைகள் மூல கிரேக்கப் பதிவுகளில் காணப்படுவதில்லை. ஆயினும் இந்தப் பாடம் இதன் அடிப்படையில் யூகிக்கப்படுகிறது. எம்பயாடிக் டைகிலாட் இப்பகுதியை, "கோட்பாடுகள்" என்று குறிப்பிடும் அந்தச் சிந்தையையே பவுலும் இங்கு விவாதிக்கிறார். இந்தப் புளிப்பற்ற கோட்பாடுகளாகிய பரிசுத்தம் மற்றும் சத்தியம் தேவனிடத்திலிருந்து மட்டுமே வரமுடியும். ஏனெனில் அவரே பரிசுத்தரும் சகல சத்தியத்திற்கும் ஊற்றுமானவர். நம்முடைய கிறிஸ்தவ வாழ்க்கை என்னும் விருந்தில் தேவனிடத்திலிருந்து வரும் புளிப்பில்லாத பரிசுத்தமான கோட்பாடுகள் மற்றும் சத்தியத்தையும் கைக்கொள்ள வேண்டும். "உங்களை அழைத்தவர் பரிசுத்தராகியிருக்கிறதுபோல, நீங்களும் உங்கள் நடக்கைகளெல்லாவற்றிலேயும் பரிசுத்தராயிருங்கள். நான் பரிசுத்தர், ஆகையால் நீங்களும் பரிசுத்தராயிருங்கள் என்று எழுதியிருக்கிறதே" (1 பேதுரு 1:15, 16).

பரிசுத்தமான கோட்பாடுகளுக்கும் சத்தியத்திற்கும் நாம் கீழ்ப்படிய வேண்டும். நாம் பரிசுத்தமும் புளிப்பற்றவர்களும் கூடுமானளவுக்கு தேவனுடைய குணலட்சணங்கள் மற்றும் கோட்பாடுகளுக்கு இசைந்திருக்க வேண்டும். பழுதற்ற தேவாட்டுக்குட்டி நம்முடைய ஆண்டவர். அவரே நம்முடைய மாதிரி. அவருடைய பலியினால் நாம் இரட்சிக்கப்பட்டதுமல்ல, அவருடைய மாதிரிக்கு ஏற்றவாறு நாம் மாற வேண்டும் (ரோமர் 8:29). சத்தியத்திற்குக் கீழ்ப்படியும்போது நமக்குள் இந்த மாற்றங்கள் ஏற்பட்டு, அவைகள் நம்மைச் சுத்திகரித்து, நம்முடைய இருதயங்களில் நம்முடைய சகோதரர்களுக்காக ஒரு உண்மையான அன்பு வளர்ச்சியடையும்.

புளிப்பற்ற கோட்பாடுகளாகிய பரிசுத்தம் மற்றும் சத்தியம், தேவனுடைய வாயிலிருந்து புறப்படக்கூடிய ஒவ்வொரு வார்த்தையிலிருந்தும் வெளிப்படும் (மத்தேயு 4:4). இந்தக் கோட்பாடுகள் தெய்வீக திட்டத்தின் அம்சங்களாக மட்டுமிராமல், இனி வரக்கூடிய தீர்க்கதரிசன சம்பவங்கள் மற்றும் கடந்த நாட்களில் நடந்த காரியங்களின் கால கணக்கையும் வெளிப்படுத்துகிறது. நாம் தேவனின் புத்திரர்களாக மாறுவதற்கு தேவையான எல்லாவற்றையும் பரிசுத்தம் மற்றும் சத்தியத்தின் கோட்பாடுகள் நமக்குக்கொடுக்கும். இந்த கோட்பாடுகளுக்கு நாம் கீழ்ப்படிந்தால் நாம் தேவன்மேலும், அவருடைய இரட்சிப்பின் திட்டத்தின்மேலும் வைத்திருக்கும் புரிந்துகொள்ளுதல் மாறி, நம்மை தேவனின் புத்திரர்களாக மாற்றும்.

நம்முடைய பஸ்கா ஆடாகிய கிறிஸ்து நம்மைப் பரிசுத்தமாக்கும்படி மரித்தார். ஆகவே புளிப்பற்ற கோட்பாடுகளாகிய பரிசுத்தம் மற்றும் சத்தியத்தோடு பண்டிகையை அனுசரித்து அவரைப்போல மாறக்கடவோம்.

**பத்து, ஏழு மற்றும் மூன்றின் மொத்த தொகை**

# நம்முடைய ஆண்டவரின் உயிர்த்தெழுதலின் காட்சிகள்



"ஆதிமுதல் இருந்ததும், நாங்கள் கேட்டதும், எங்கள் கண்களினாலே கண்டதும், நாங்கள் நோக்கிப்பார்த்ததும், எங்கள் கைகளினாலே தொட்டதுமாயிருக்கிற ஜீவவார்த்தையைக்குறித்து உங்களுக்கு அறிவிக்கிறோம்" (1 யோவான் 1:1).

Richard Doctor

இயேசுவின் உயிர்த்தெழுதலைத் தொடர்ந்து பத்து முறை அவர் காட்சியளித்ததாக வேதாகமம் பதிவு செய்துள்ளது. [ராபர்ட்சன் என்பவர் பத்து காட்சிகளைக் குறிப்பிடுகிறார். ஆயினும், மத்தேயு 28:16-20 மற்றும் 1 கொரிந்தியர் 15:6-ஆம் வசனத்தில் காண்பிக்கப்பட்ட காட்சிகளைப் பிரித்து எட்டு மற்றும் ஒன்பது முறை காட்சியளித்தார் என்று குறிப்பிட்டு, மொத்தத்தில் பதினோரு காட்சிகளைப் பற்றி R2809 கூறுகிறது.] வேதாகம நியூராலஜியில் பத்து என்ற எண் மனுஷரைப் பொறுத்தவரையில் முழுமை, பூரணம் மற்றும் நிறைவோடு சம்பந்தப்பட்டிருப்பதினால் இது ஒரு முக்கியமான எண்ணாகும். ஆகவே பத்து கை விரல்கள், பத்து கால் விரல்கள், பத்து கற்பனைகள், பத்து கன்னிகைகள் மற்றும் பத்து கொம்புகளுள்ள மிருகம். பத்து என்னும் எண் ஆசரிப்புக் கூடாரத்தின் பரிசுத்தமான எண்ணாகும். இங்கு முழுமை என்ற பாடத்தை இது கற்பித்தாலும் இயேசு பரமேறியதைத் தொடர்ந்து இரண்டு கூடுதலான காட்சிகளைக்குறித்து வசனங்கள் பேசுகிறது. பதினோராவது காட்சியை தரிசு பட்டணத்து சவுல் கண்டார் - ஒரு அபூரணமான எண் - "எல்லாருக்கும் பின்பு, அகாலப்பிறவிபோன்ற எனக்கும் தரிசனமானார்" (1 கொரிந்தியர் 15:8). இந்தக் காட்சி பவுலின் பார்வையைச் சேதப்படுத்தியது. பன்னிரண்டாவது நம்முடைய ஆண்டவரின் "காட்சியை" இனிவரும் காலத்தில் மனுக்குலம் காண்பார்கள். ஆண்டவரின் விசேஷித்த ஆசீர்வாதங்களோடு தொடர்பு கொண்டிருக்கும் ஒரு பரிபூரண எண் - கடைசி நாட்களில் உபத்திரவம் என்னும் மேகங்களின் வழியாக மனுக்குலம் அவரை அறிந்துகொள்ளும்போது உணரக்கூடிய, "ஒவ்வொரு கண்ணும்" அவரைக் காணும் (வெளிப்படுத்தல் 1:7).

பத்து முறைகள் அவர் காட்சியளித்தபோது, சீஷர்கள் மட்டுமே காண்பதற்கான சிறப்புரிமையைப் பெற்றிருந்தார்கள். "மூன்றாம் நாளிலே தேவன் அவரை எழுப்பிப் பிரத்தியட்சமாய்க் காணும்படி செய்தார். ஆயினும் எல்லா ஜனங்களுக்கும் பிரத்தியட்சமாகும்படி செய்யாமல், அவர் மரித்தோரிலிருந்து எழுந்தபின்பு அவரோடே புசித்துக் குடித்தவர்களும் தேவனால் முன்பு நியமிக்கப்பட்ட சாட்சிகளுமாகிய எங்களுக்கே பிரத்தியட்சமாகும்படி செய்தார்." (அப்போஸ்தலர் 10:40-41). பத்து முறைகள் காட்சியளிக்கப் பட்டதற்கான காலளவு அந்த நாற்பது நாட்களில் கிட்டதட்ட 1% ஆக இருந்தது. [40 நாள் x 24 மணி நேரம்/நாள் = 960 மணி நேரங்கள். ஆகவே உயிர்த்தெழுதலின் பத்து காட்சிகள் ஒவ்வொரு மணி நேரத்திற்கு 1% ஆக இருந்திருக்க வேண்டும். கல்லறையில் சில நிமிடங்கள் மட்டுமே காட்சியளித்திருக்க வேண்டுமென்று பதிவு செய்யப்பட்ட வார்த்தைகளிலிருந்து நாம் கணக்கிடலாம். இரண்டு சீஷர்களோடுகூட ஏழு மைல் தூரம் நடந்துச் சென்றதே நீண்ட காலமாக இருந்திருக்க வேண்டும். சீஷர்களோடு கடற்கரையில் அவர் நீண்ட நேரம் காட்சியளிக்காவிட்டாலும் சிறிது நேரம் காட்சியளித்திருக்கலாம்].

இந்தப் பத்து காட்சிகளின்போதும் அதில் 7:3 என்ற ஒரு அமைப்பு முறையைக் காணலாம். ஏழு மற்றும் மூன்றின் மொத்தத் தொகை பத்தாகும். இதிலுள்ள பாடத்தை முதலாவது யோபின் பிள்ளைகளைக்குறித்து பதிவுகளில் காணலாம். முற்பிதாக்களின் சமுதாயம், யோபுவின் வலிமைக்கும் மறபுரிமை பண்புகளுக்குமான காரணம் அவருடைய ஏழு குமாரர்கள் என்று இயல்பான முறையில் கவனம் செலுத்தினாலும், அவருடைய மூன்று குமாரத்திகளின் அழகு (நற்குணம்) அவருடைய மற்றும் நம்முடைய கவனத்தைச் சிறப்பான முறையில் ஈர்க்கிறது.

மற்ற சகோதரர்களைப்போல யோபுவின் குமாரத்திகளும் பத்து மடங்கு சுதந்தரத்தைப் பெற்றார்கள். எமீமாள், கெத்சீயாள் மற்றும் கேரேனாப்புக் என்ற யோபுவின் குமாரத்திகளின் நாமங்கள் அவர்களுடைய சகோதரர்களைப்போல இராமல், இவர்கள் பெயர்கள் வேதாகமத்தில் ஒருமுறை மட்டுமே காணப்படுகிறது. சிறப்பான நோக்கம் மற்றும் நேர்த்தி உடையதாகிய ஏழு என்ற எண்ணை முக்கியமான பாடமாகவும், மூன்று என்ற எண்ணை அதற்குச் சரிநிகர் பாடமாகவும், நாம் கருத்தில் கொண்டு உயிர்த்தெழுந்த பின் தோன்றிய

7:3 என்ற அமைப்பில், நாம் என்ன கற்றுக்கொள்ள வேண்டுமென்று நம் ஆண்டவர் விரும்புகிறார்?

**அப்போஸ்தலர்கள் - சாட்சிகளைக் கண்ட பாக்கியசாலிகள்**

அப்போஸ்தலர்கள் அல்லது "அனுப்பப்பட்டவர்கள்" இயேசு காட்சியளித்த ஏழு சந்தர்ப்பங்களில் ஒருமித்திருந்து விசேஷித்த பாக்கியத்தைப் பெற்றார்கள். உண்மையில் இவர்கள் புதிய எருசலேமின் அஸ்திபாரங்களாக இருப்பார்கள். மற்றொரு புறத்தில் பார்க்கும்பொழுது, விசேஷமாக, "அனுப்பப்பட்டவர்கள்" அல்லாத மற்ற விசுவாசிகளுக்கும் நம்முடைய ஆண்டவர் மூன்றுமுறை காட்சியளிப்பதில் பிரியமாய் இருந்தார். இந்த மூன்று தருணங்களிலும் இயேசு காண்பித்தப்படியே, அவருடைய ஐக்கியத்தில் தனிப்பட்ட விதத்திலும் நெருங்கிய வழியிலும் நம் ஒவ்வொருவருடைய வாழ்க்கையிலும் நாம் தொடப்படலாம்.

**சபைக்குண்டான ஊழியம் மற்றும் மிகப்பெரிய பொறுப்பு**

இயேசு தம்முடைய சீஷர்களைப் பெலப்படுத்தக்கூடிய நோக்கத்தில் மட்டுமே ஏழு தருணங்கள் காட்சியளித்தார். தேவனுடைய புத்திரர்களாக கிறிஸ்துவின் சாயலில் வளர்ச்சியடைவதற்கு இந்தச் சுவிசேஷ யுகத்தில் இது ஒரு மிகப்பெரிய வேலையாக நமக்கு முன் நிறுத்தப்படுகிறது. இதற்கு சரிநிகராக மூன்று நிகழ்வுகளில், நம் ஆண்டவர், அவர் சகோதரர்கள் இவ்வுலகத்திற்கு ஊழியம் செய்யவும், சாட்சிகளாய் இருக்கவும் தங்கள் ஆற்றலை இயக்க வேண்டிய மிகப்பெரிய பொறுப்பான பணியைக் கொடுத்தார். "அப்பொழுது வேதவாக்கியங்களை அறிந்துகொள்ளும்படி அவர்களுடைய மனதை அவர் திறந்து அவர்களை நோக்கி: எழுதியிருக்கிறபடி, கிறிஸ்து பாடுபடவும், மூன்றாம்நாளில் மரித்தோரிலிருந்தெழுந்திருக்கவும் வேண்டியதாயிருந்தது; அன்றியும் மனந்திரும்புதலும் பாவமன்னிப்பும் எருசலேம் தொடங்கிச் சகல தேசத்தாருக்கும் அவருடைய நாமத்தினாலே பிரசங்கிக்கப்படவும் வேண்டியது. நீங்கள் இவைகளுக்குச் சாட்சிகளாயிருக்கிறீர்கள். என் பிதா வாக்குத்தத்தம்பண்ணினதை, இதோ, நான் உங்களுக்கு அனுப்புகிறேன். நீங்களோ உன்னதத்திலிருந்து வரும் பெலனால் தரிப்பிக்கப்படும்வரைக்கும் எருசலேம் நகரத்தில் இருங்கள் என்றார்." (லூக்கா 24:45-49).

**சபையோடு இயேசுவின் ஐக்கியம்**

அந்த ஏழு தருணங்களில், ஆண்டவர் தம்முடைய ஜனத்தின் கூடுகைக்கு மத்தியில் வெளிப்படுவதில் பிரியமாயிருந்தார். "ஏனெனில், இரண்டுபேராவது மூன்றுபேராவது என் நாமத்தினாலே எங்கே கூடியிருக்கிறார்களோ, அங்கே அவர்கள் நடுவிலே இருக்கிறேன் என்றார்" (மத்தேயு 18:20). அதே நேரத்தில் மூன்று தருணங்களில் தனிப்பட்ட விதத்தில் காட்சியளித்தபோது - மகதலேனா மரியாள், அப்போஸ்தலனாகிய பேதுரு மற்றும் யாக்கோபு - ஆண்டவர் உண்மையில் ஸ்திரீ அல்லது புருஷர்கள் போன்ற சீஷர்களுக்குத் தனிப்பட்ட முறையில் வெளிப்படுவார் என்ற சாட்சியை நிரூபிப்பதற்காக இவைகள் நடந்தது (யோவான் 8:17). [லூக்கா 24:33-35 வசனங்களில் எம்மா ஊரிலிருந்து திரும்பின இரண்டு சீஷர்கள் மற்ற "பதினோரு" சீஷர்களையும் கண்டபோது {உண்மையில் அங்கு பத்து அப்போஸ்தலர்கள் மட்டுமே காணப்பட்டார்கள், தோமா அங்கு இருக்கவில்லை - யோவான் 20:24} சீமோன் பேதுருவுக்கு முன்னதாகவே இயேசு காட்சிக் கொடுத்ததைக்குறித்து பரபரப்பாக சம்பாஷித்துக்கொண்டிருந்தார்கள் (34 வசனம;). எம்மா ஊரிலிருந்து வந்த அந்த இரண்டு சீஷர்கள் பதற்றத்தோடு அவர்கள் எம்மா ஊருக்குச் செல்லும்போது வழியில் நடந்த சம்பவங்களை விவரமாக எடுத்துரைத்தார்கள் வசனம் 35].

பேதுரு மற்றும் யாக்கோபு ஆண்டவரோடு எப்பொழுதும் நெருக்கமாக இருந்தவர்கள் அங்கு யோவான் விடுபட்டதை எண்ணும்பொழுது, முதலில் நமக்கு ஆச்சரியமாகத் தோன்றலாம். சகோதரிகளும் இப்படிப்பட்ட விசேஷித்த பாக்கியத்தைப் பெறுவதற்குத் தகுதியுள்ளவர்கள் என்பதை முக்கியத்துவப்படுத்துவதற்காக தனிப்பட்ட முறையில் யோவான் காட்சி பெறாமல் இருந்திருக்க வேண்டும். மகதலேனா மரியாளுக்கோ அல்லது அவளுக்கு மிகவும் நெருங்கிய மூன்று அப்போஸ்தலர்களுக்கோ, அவர் தனித்தனியே காட்சி கொடுத்திருந்தால் அவருடைய பத்து காட்சிகளுக்கான 7:3 எனற அமைப்பு இல்லாமல் போயிருக்கும்.

**மாம்சமும் இரத்தமும் தேவனுடைய இராஜியத்தைச் சுதந்தரிக்கமாட்டாது**

ஏழு முறைகள் இயேசு காட்சியளித்தபோது, தம்மை வெளிப்படுத்தின விதம் அபாயகரமாக உணரப்படவில்லை. ஆயினும் அதே நேரத்தில் அவர்

சரீரம் காணக்கூடிய வகையில் எடுத்துக்கொள்ளவும் அல்லது அதிலிருந்து மறைந்துச் செல்லக்கூடிய வல்லமையைப் பெற்றிருந்தார் என்பதை மூன்று தருணங்களில் வெளிப்படுத்தினார். [இயேசு இறுதியாக சீஷர்களைவிட்டுப் பிரிந்தபோது, "அவரை அவர்களுடைய பார்வையிலிருந்து எடுத்துச்சென்றபோது" (அப்போஸ்தலர் 1:9) கண்ணுக்குப் புலப்படாமல் அவர் எடுத்துக்கொள்ள வேண்டிய அவசியம் அவருக்கு இருக்கவில்லை. மேகங்களினால் சூழப்பட்டு, முழுவதும் மறைக்கப்பட்ட நிலையில் காணக்கூடிய சரீரத்தில் அவர்கள் கண்முன்னே அவர் மறைந்துபோனார். இயேசுவை இனி ஒருபோதும் மாம்ச சரீரம் கட்டுப்படுத்தாது என்பது தெளிவாகிறது].

### அறியப்பட்ட இயேசு மறுஜென்மம் எடுக்கவில்லை

இயேசு ஏழு முறைகள் காட்சியளித்தப்போது, மாம்ச சரீரத்தில் பழக்கமுள்ள முகத்தோற்றத்தில் அடையாளம் கண்டுபிடிக்கப்பட்டார். இயேசுவின் உயிர்த்தெழுதலுக்கு நிச்சயமான சாட்சிகளாக இருக்கும்படிக்கு அவருடைய பழக்கமான அம்சங்களோடு அவர் அடையாளம் கண்டுகொள்ளப்பட்டார். "சகோதரரே, நான் சொல்லுகிறதென்னவெனில், மாம்சமும் இரத்தமும் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிக்கமாட்டாது; அழிவுள்ளது அழியாமையைச் சுதந்தரிப்பதுமில்லை" (1 கொரிந்தியர் 15:50) என்பதினால் இனி ஒருபோதும் மாம்சத்தில் அவர் காணமாட்டார் என்று மற்ற மூன்று காட்சிகளும் வெளிப்படுத்தியது.

ஒவ்வொரு தருணத்திலும், தெய்வீக சுபாவத்தின் வல்லமையில் இயேசு காட்சி அளித்திருந்தால் என்ன நேர்ந்திருக்கும்? ஏன் அப்படி நடைபெறவில்லை?

கிரேக்கர்கள் மத்தியில் பிளேட்டோ கோட்பாட்டிலுள்ள பாடத்திட்டத்தில், இயல்பு கடந்த ஆராய்ச்சியில், மறுபிறப்பு என்று யூகிக்கக்கூடிய கற்பனைகள் காணப்படுகிறது. ["The immortality of the Soul and the rewards of goodness,"] ஒவ்வொரு தருணத்திலும் வெவ்வேறு உருவங்களில் காட்சியளித்ததினிமித்தம் ஆத்துமா கூடுவிட்டு கூடு செல்வது மற்றும் மறுபிறப்பு போன்ற குழப்பமான மந்தமுள்ள உபதேசங்களை ஏற்றுக்கொள்வதற்கு சந்தேகத்திற்கிடமின்றி விசுவாசிகள் வழிநடத்தப்பட்டிருக்க வேண்டும்.

இயேசு ஆவியில் வெவ்வேறு விதங்களில் வெளிப்படுவார் என்பதை விசுவாசிகள் எதிர்பார்த்திருந்தார்கள். ஆனால் அது இன்னும் அதிகமான தீங்குக்கு வழிநடத்தியிருக்கும். வழக்கமாக இயேசுதாமே தம்மை வெளிப்படுத்தியது தீர்வுக்குரியதாக இருப்பினும், அதே நேரத்தில் அந்தச் சரீரத்தில் இனி அவர் தரித்திருப்பதில்லை என்பதற்கான ஆதாரமும் அங்கு காண்பிக்கப்பட்டது.

### எங்கள் கைகளினால் தொட்டதும்... ஜீவ வார்த்தைகள் (1 யோவான் 1:1)

ஏழு நிகழ்வுகளில், இயேசு தொடப்பட்டதாக உறுதியான சான்றுகள் இல்லை. உயிர்த்தெழுதலினால் ஏற்படும் மாற்றத்திற்கு என்று அவருடைய சாட்சிகள் ஆளாவார்களோ அந்த நாள்வரையில் இயேசுவுக்கும் அவருடைய சீஷர்களுக்கும் இருக்கும் நெருக்கமான ஐக்கியம் முன்போல் இராது. ஆயினும் மற்ற மூன்று தருணங்களில் இயேசு விசேஷமாக அவரைத் தொட்டுப்பார்க்கும்படி பல சாட்சிகளை அழைத்தார். அதில் ஸ்திரீகளும் புருஷர்களும் அடங்குவார்கள். [(யோவான் 20:17) "என்னைத் தொடாதே" என்று நம்முடைய ஆண்டவர் மகதலேனா மரியாளிடம் கூறிய காரியம் குழப்பமாகவே தோன்றுகிறது. மற்ற சீஷர்களிடம் இந்தச் செய்தியை உடனடியாக பரப்புவதற்கே மரியாளிடம் நேரடியாக இவ்வார்த்தைகள் சொல்லப்பட்டது என்ற காரணம் திருப்தியாகத் தோன்றுகிறது. ஆனால் உண்மையில் இதற்கு இயேசு வேறுவிதமான விளக்கமளித்தார். அவரைத் தொடுவது தவறான காரியமென்று பொருள்படுத்தவில்லை - அவர் பிதாவினிடத்திற்கு இன்னும் செல்லவில்லை - என்ற விளக்கத்தை அவர் கொடுத்தார். ஒருவேளை மரியாள் இயேசுவை தொட்டிருந்தால் 7:3 என்ற அமைப்புமுறை குழப்பமாகத் தோன்றியிருக்கலாம் - நாம் காண்கிறபடியே, முழு சாட்சிகளின் முன்னிலையில் மட்டுமே அவரை அனைவரும் தொட்டனர்].

### அவருடைய திரும்புதலைக்குறித்த ஒரு வாக்குத்தத்தம் - உயிர்த்தெழுந்த கிறிஸ்து புசித்தார்

ஒரு தெய்வீக ஜீவி தம்முடைய ஜீவனைக் காத்துக்கொள்வதற்கு புசிக்கவும் குடிக்கவும் எந்த அவசியமுமில்லை. ஆயினும் இயேசு காட்சியளித்தபோது, "ஆயினும் எல்லா ஜனங்களுக்கும் பிரத்தியட்சமாகும்படி செய்யாமல், அவர் மரித்தோரிலிருந்து எழுந்தபின்பு அவரோடே புசித்துக் குடித்தவர்களும் தேவனால் முன்பு நியமிக்கப்பட்ட சாட்சிகளுமாகிய எங்களுக்கே

பிரத்தியட்சமாகும்படி செய்தார்" அப்போஸ்தலர் 10:41 என்று கூறப்பட்டுள்ளது.

பத்துமுறை இயேசு காட்சியளித்தபோதும் இயேசு திராட்சரசத்தைக் குடித்ததாக எங்கும் குறிப்பிடப்படவில்லை. இப்படியாக, அவருடைய நேசிக்கப்பட்ட பரிசுத்தவான்கள் முழுமையாக மீட்கப்படும்வரையில் திராட்சப்பழரசத்தைப் புசிக்கமாட்டேன் என்று இயேசு சொல்லிய வாக்குத்தத்தத்தை நிறைவேற்றினார் (மத்தேயு 26:9; மாற்கு 14:25; லூக்கா 22:18). தனிப்பட்ட முறையில் மற்றும் மீண்டும் மகிழ்ச்சியோடு ஒருமனப்பட்டிருக்கும் பரிசுத்தவான்கள், நம்முடைய ஆண்டவரோடு ஐக்கியப்படுவதை அடையாளமாகப் புசிப்பதும் குடிப்பதற்குமான காரியங்களில் நிச்சயமாக ஒரு மகிழ்ச்சி உண்டு. ஆட்டுக்குட்டியானவரின் திருமண விழாவில் இரவு உணவு என்பது ஒரு முக்கிய பங்கு வகிக்கிறது. ஏனெனில் சபை வகுப்பு அல்லாதவர்களுக்கும் ஆசீர்வாதங்கள் வாக்களிக்கப்படுகிறது (வெளிப்படுத்தல் 19:9).

மூன்று தருணங்களில் (மீண்டும் பல பேருக்குக் காட்சியளித்தபோது) இயேசு புசித்ததாக நேரடி சாட்சிகள் காணப்படுகிறது. இயேசு காணக்கூடியவிதத்தில் ஒரு ஆவி என்றோ அல்லது மற்ற வார்த்தைகளில் சொல்லப்போனால் ஒரு மாயமான உருவம் இல்லை என்பதை சீஷர்கள் புரிந்துகொள்ள வேண்டியதாக இருந்தது.

இந்தத் தலைப்பை நாம் விட்டுச்செல்வதற்கு முன், மற்ற மூன்று அப்சர்வேஷன்களும் வரிசையில் உள்ளது, முதலாவது நம்முடைய ஆண்டவர் நம்மோடு போஜனம் பண்ணும் காரியமானது, இந்தக் காட்சிகள் அப்பங்களுக்கும் சுடப்பட்ட மீன்களுக்கும் அடையாளமாகப் பொருந்துகிறது (லூக்கா 24:30, 42; யோவான் 21:9). ஆண்டவர் சீஷர்களோடு போஜனம் பண்ணக்கூடிய இந்த மாதிரிகள், ஒரு நெருக்கமான ஐக்கியத்தை ஆண்டவர் நம்மோடு வைத்துக்கொள்ள விரும்புகிறார் என்பதைக் கூறுகிறது. அவர் எங்கேயோ (அவருடைய சிந்தை, அவருடைய வார்த்தைகள்) நமக்குள்ளும் மற்றும் நாம் (அவருடைய இருதயத்தின்மேல் விசுவாசம் கொண்டவர்களாக) அவருக்குள் இருக்கிறோம் (யோவான் 6:55; 15:4-7).

அடுத்ததாக நம்முடைய ஆண்டவரின் உயிர்த்தெழுதலைக் கவனமாகப் பார்க்கும்பொழுது, எம்மா ஊருக்குச் சென்றபோது கிலெயோப்பாவோடு சென்ற பெயர் சொல்லப்பட்டாத இரண்டாவது சீஷர் அவருடைய மனைவியாக இருக்க வேண்டும் (லூக்கா 24:13-32). சபையில் சகோதரிகள் புசிக்கக்கூடிய இயேசுவைப் பற்றியும், மறுரூபமாக்கப்பட்ட இயேசுவைப்பற்றியும் சாட்சிக் கொடுப்பதில் பங்கெடுத்துக்கொள்வதற்கான சிறப்புரிமையை இது கொடுக்கக்கூடியதாக இருக்கிறது, இப்படி இல்லாவிட்டால், சகோதரிகள் வெளிப்படுத்தல் 3:20-ஆம் வசனத்தில் சொல்லப்பட்ட ஆவிக்குரிய வாக்குத்தத்தத்தில் மகிழ்ந்திருந்தாலும் சாட்சிக் கொடுப்பதற்காக வாய்ப்புகளைப் பெற்றிருக்க மாட்டார்களே.

மூன்றாவதாக, பண்டைய கால புராணக் கதைகளைப்பற்றி நெருங்கிய பழக்கமுள்ள புறஜாதி கிறிஸ்தவர்கள் மற்றவர்களைப்போல இந்தப் போஜனம், இயேசு இந்தப் பூமிக்குத் திரும்பிவருவார் என்ற வல்லமையுள்ள சாட்சியைக் கொடுக்கக்கூடியதாக இருந்தது. முற்பிதாக்களின் காலத்திலுள்ள நம்பிக்கையை நோக்கினால், அவர்கள் உபசரிப்பதில் கட்டப்பட்டவர்களாயும், விருந்தளிப்பவர் நமக்கு உணவை பங்கிட்டால் மீண்டும் அவர்களுக்கு அதைக்கொடுப்பது தார்மீக குறியீடாய் இருந்தது. [பெர்சப்போன் (Persephone) என்னும் தேவதை ஒரு வருடத்தில் குளிர்காலம் வரும் எந்த ஆறுமாத காலத்திலும், ஹேடஸ் என்னும் கீழ் உலகத்திற்குச் சென்று மீண்டும் திரும்புவாள். இதன்விளைவாகத்தான், வயல் வெளிகள் குளிர்காலங்களில் மடிவதாகவும், இதனைத் தொடர்ந்து இளவேனீர் காலத்தில் மீண்டும் பிறப்பதாகவும் கிரேக்கர்களும் ரோமர்களும் நம்பினார்கள். முற்பிதாக்களின் காலத்தில் திருப்பிப்பார்த்தோம் என்றால் அவர்கள் உபசரிப்பதில் கட்டப்பட்டவர்களாயும், விருந்தளிப்பவர் தன் உணவைப் பங்கிட்டால் மீண்டும் அவர்களுக்கு அதைத் திரும்பக்கொடுப்பது தார்மீக குறியீடாய் இருந்தது. தானியங்களின் தேவதையான டெமெட்டர் (Demeter) மற்றும் சியூஸ் (Zues)-இன் அழகிய மகளான பெர்சப்போனை புளூட்டோ என்ற மரணத்தின் தெய்வம் கடத்திவைத்து கீழ் உலகிற்குக் கூட்டிச்சென்று அவருடைய மனைவயாகவும், இராணியாகவும் இருக்க கட்டாயப்படுத்தபட்டார். இந்தக் கட்டாய திருமணத்திலிருந்து அவளுக்கு முழு விடுதலை கிடைக்கவில்லை. ஏனெனில் அவள் பரலோகத்திற்கு எடுத்துச் செல்ல ஒரே ஒரு நிபந்தனைக் கொடுக்கப்பட்டது. "அவளுடைய உதடுகள் எந்த உணவையும் சுவைக்கக்கூடாது, ஆனால் கபடற்ற பெர்சப்போன் நிபந்தனையை அறியாமல் இரத்த நிற மாதுளை முத்துக்கள் ஏழினை விழுங்கிவிட்டாள். அதனால் அவள் வருடத்தின் பாதி நாட்கள் பூமியிலும், மீதி பாதி நாட்கள் அவள் கணவனுக்கு இராணியாகவும் இருக்க வேண்டிய

கட்டாயமாயிற்று. Ovid, The Metamorphoses, Book V, (translated by Horace Gregory), Mentor Books, New York (1958), pages 155-156].

### ஞாயிறு - உயிர்த்தெழுந்த ஆண்டவரின் நாள்

ஓய்வு நாளை அநுசரிக்க வேண்டுமென்பதே நான்காவது கற்பனையாக இருப்பதினால், பிரமாணத்தின் ஒரு புள்ளி அல்லது ஒரு எழுத்தாகிலும் குறைவுபடாதபடிக்கு, சபை பொருளான இந்த ஒவ்வொரு ஓய்வுநாளையும் தங்களுடைய வாழ்க்கையில் நித்தமும் அனுசரிக்கும்படி வேண்டிக்கொள்ளப்படுகிறார்கள். ஆயினும் நம்முடைய ஆண்டவர் ஞாயிறு அன்று காட்சியளித்தார் என்பதிலிருந்து நாம் இறுதியான பாடத்தைப் பெற்றுக்கொள்கிறவர்களாக இருக்கிறோம். இந்த நாள் பொதுவாக ரோமர்களினால் பன்னிரண்டு மணி இரவிலிருந்து அடுத்த பன்னிரண்டு மணி இரவு வரைக்கும் உயிர்த்தெழுந்த ஆண்டவரின் நாள் என்று கணிக்கப்படுகிறது.

உயிர்த்தெழுந்த அந்த ஞாயிறு அன்று கல்லறை காலியாக உள்ளது என்று கண்டுபிடித்த அந்த முதல் 18 மணி நேரத்திற்குள் அவர் ஐந்து முறை காட்சியளித்தார். ஏழு முறை அவர் வாரத்தில் எந்த நாளில் தோன்றினார் என்று உறுதி செய்ய இயலும். ஞாயிறு அன்று ஆறு முறை, ஏழாவது காட்சி வியாழன் அன்று நடந்தது. நாற்பது என்ற வேதாகமத்தின் குறிப்பிடத்தக்க காலத்தை நிறைவு செய்வதுடன் வியாழன் அன்று நம்முடைய ஆண்டவர் காட்சி கொடுக்கப்பட்டு கைது செய்யப்பட்ட அந்த நிகழ்வையும் சரிநிகர் படுத்துகிறது.

மற்ற மூன்று நாட்களும் அவர் எந்த வார நாட்களில் தோன்றினார் என்பதை நம்மால் உறுதி செய்யமுடியவில்லை என்றாலும் பொதுவாக எல்லாம் ஞாயிறாக இருக்கலாம் என்று கணிக்கப்படுகிறது. அன்று ஞாயிறு அவருடைய காட்சி மற்றும் அதனைத் தொடர்ந்து பெந்தெகொஸ்தே ஞாயிறின் அனுபவங்களும் ஒட்டுமொத்தமாக இணைக்கப்பட்டு சபையின் மனதில் இந்த நாள் உறுதி செய்யப்பட்டது. இது முதற்கொண்டு வாரத்தின் கடைசி நாளாக இருந்த ஓய்வு நாளை பின்னும் தள்ளி, உயிர்த்தெழுந்த ஆண்டவரின் நாளாகிய ஞாயிற்றுக்கிழமையை வாரத்தின் முதல் நாளாகக் கருதப்பட்டது. ஞாயிற்றுக்கிழமை ஆராதனை நாளாக கிறிஸ்துவின் ஜனங்கள் ஒன்று சேர்வதற்கு இந்தக் காட்சிகள் உதவியாய் இருந்தது.

### இறுதியான சிந்தனைகள்

இயேசு உயிர்த்தெழுந்தப் பின் பத்து முறைகள் காட்சியளித்தாலும், அப்போஸ்தல பணியின் முக்கியத்துவம் சபையைப் போஷிப்பதாகும். சபையின் ஐக்கியம் மாம்சத்தில் அறிந்த இயேசுவை உயிர்த்தெழுந்த இயேசுவாக சீஷர்கள் சாட்சிக் கொடுக்க வேண்டும் என்பதே அடிப்படை பாடங்களாகும்.

சரீரத்தின் தனிப்பட்ட அங்கத்தினர் மேலுள்ள கவனம், உலகத்திற்குப் போதிக்க வேண்டிய பொறுப்புகள், உயிர்த்தெழுந்த உடலில் வேறு உருவங்களை எடுக்க இயலும் நம் ஆண்டவரின் புதிய செயல்கள், இதினிமித்தம் ருசிபார்த்தல் மற்றும் தொடுதல் போன்றவற்றைச் செய்ய இயலும் ஆற்றல் போன்ற பல பாடங்கள் இதற்குச் சரிநிகராய் உள்ளது. அவருடைய எல்லா செயல்பாடுகளைப்போல இதிலும் நம் ஆண்டவரின் கரங்கள் ஒரு நோக்கத்துடனும் ஒரு அமைப்புடனும் ஒரு நிறைவு கோலாயும் திகழ்கிறது.

# இயேசுவின் உயிர்த்தெழுதல் மற்றும் ஈடுபலி

# அவர் எழுந்தார்



Robert Goodman

"கிறிஸ்துவோ மரித்தோரிலிருந்தெழுந்து, நித்திரையடைந்தவர்களில் முதற்பலனானார்." (1 கொரிந்தியர் 15:20).

"அவர் (கிறிஸ்து) உயிர்த்தெழுந்தார்" என்று தூதன் மரியாளுக்கு அறிவித்ததாக மத்தேயு 28:6-ஆம் வசனம் கூறுகிறது. சீஷர்களுக்கு அறிவிக்கும்படி இது ஒரு நற்செய்தியாக இருந்தது. இதன் விளைவாக, ஈஸ்டர் காலங்களின்போது, "அவர் உயிர்த்தெழுந்தார்" என்ற வார்த்தைகளை கிறிஸ்தவர்கள் எல்லா இடங்களிலும் கூறுவது உண்டு. ஆனால் இதற்குப் பொருள் என்ன? தேவனுடைய மாட்சிமிக்க திட்டத்தைப் பொறுத்தவரையில் பொருள் நோக்கு என்ன?

தேவனுடைய திட்டத்தில், இயேசுவின் உயிர்த்தெழுதல் ஒரு முக்கிய பகுதியாகும். தங்களுடைய வாழ்க்கையை அர்ப்பணிப்பதின் வழியாக தேவனிடம் அணுகக்கூடிய ஒரு விசேஷித்த வகுப்பாருக்குப் புதிதான ஜீவனுமான ஒரு வழியை ஏற்படுத்துவது ஒரு கடினமான காரியமாகும். ஆனால் இந்த சம்பவத்தின் பொருளைப் புரிந்துகொள்வதற்கு தேவனுடைய ஞானம், அன்பு, வல்லமை மற்றும் நீதியின் முறமையின்படி இவைகளை காண வேண்டும். கிறிஸ்துவைப்பற்றிய இரகசியத்தை திறக்கும் திறவுகோல் - "அனைவருக்கும் கொடுக்கப்படும் மீட்கும்பொருள்." ஆனால் இயேசுவின் உயிர்த்தெழுதலோடு மீட்கும் பொருளுக்கு என்ன சம்பந்தம் உண்டு?

மீட்கும் பொருளின் செயல்முறையைப்பற்றி நாம் அனைவரும் பரிச்சயமுள்ளவர்களாக இருக்கிறோம். (எடுத்துக்காட்டாக, ஒருவரை கடத்திச் செல்லுதல்). மேலோட்டமாகப் பார்க்கும்பொழுது அதற்கு மூன்று படிகள் இருப்பதாகத் தோன்றுகிறது. விலையை நிர்ணயிப்பது பணம் பெற்றுக்கொள்ளுதல், பணத்திற்காகச் சரிநிகர் சமான விலையைக்கொடுத்து மீட்டுக்கொள்ளுதல். ஆயினும் மீட்கும் பொருளின் செயல்முறை உண்மையில் நான்கு தெளிவான படிகளில் காணப்படுகிறது; (1) விலையை நிர்ணயிப்பது, (2) கிரயத்தைப் பெற்றுக்கொள்வது, (3) கிரயத்தைச் செலுத்துவது மற்றும் (4) மீட்கப்பட்டவர்களை விடுதலைச் செய்வது.

**மீட்கும் பொருள், லூட்ரான் (சரிநிகர் சமமான விலை)**

விலையை நிர்ணயம் செய்தல், என்பதற்கான வேதாகம வார்த்தை கிரேக்க பதத்தில் லூட்ரான் ஆகும் S3083. இதற்கு, "மீட்பு கிரயம் (உருவகமாக, ஈடுகொடு என்று பொருள;) - மீட்கும் பொருள்" இழக்கக்கூடிய ஒரு கிரயமாக அதைக்குறித்து நாம் சிந்திக்கலாம். இந்தக் கருத்தை முழுமையாகப் புரிந்துகொள்வதற்கு, பழைய ஏற்பாட்டிலுள்ள தேவன் கொடுத்த சமநிலைப் பிரமாணம் என்ற கோட்பாட்டைத் திருப்பிப்பார்ப்போம். "ஜீவனுக்கு ஜீவன், கண்ணுக்குக் கண், பல்லுக்குப் பல், கைக்குக் கை, காலுக்குக் கால்" (யாத்திராகமம் 21:23-24) என்ற இக்காரியம் லேவியராகமம் 24:20-ஆம் வசனத்திலும், உபாகமம் 19:21-ஆம் வசனத்திலும் மீண்டும் சொல்லப்பட்டுள்ளது. இந்தக் கோட்பாட்டை ஆண்டவராம் இயேசு மத்தேயு 5:38-ஆம் வசனத்தில் குறிப்பிடுகிறார். "கண்ணுக்குக் கண், பல்லுக்குப் பல் என்று, உரைக்கப்பட்டதைக் கேள்விப்பட்டிருக்கிறீர்கள்." ஒருவர் மற்றவரை பழிவாங்குதலைக்குறித்து இயேசு இந்தச் சமநிலைக் கோட்பாட்டைச் சம்பந்தப்படுத்திக் காட்டுகிறார். "அன்பின் பிரமாணம்" என்றப் பாடத்தை நமக்குக் கற்பிப்பதற்கு அவர் இந்த எடுத்துக்காட்டைப் பயன்படுத்தினார். இது சமநிலைப் பிரமாணத்தைக் காட்டிலும் அதிகபட்சமாக எதிர்பார்க்கப்படுகிறது - சத்துருக்களையும் சிநேகிக்கக்கூடிய அன்பு. கண்ணுக்குக் கண், பல்லுக்குப் பல் என்ற சமநிலைப் பிரமாணத்தோடு அன்பின் பிரமாணத்தின் கோட்பாட்டை வேறுபடுத்தி காண்பித்து, உன் சத்துரு எதிர்பார்ப்பதைக் காட்டிலும் அதிகமாக நீங்கள் கொடுக்க வேண்டும் என்று கூறினார்.

ஒரு ஜீவனைப் பொறுத்தவரையில் சமவிலைக் கோட்பாட்டை யாத்திராகமம் 21:30-ஆம் வசனத்தில் காணப்படுகிறது. "அபராதம் கொடுக்கும்படி தீர்க்கப்பட்டதானால், அவன் தன் ஜீவனை மீட்கும் பொருளாக விதிக்கப்பட்ட அபராதத்தைக் கொடுக்கக்கடவன்." ஜீவனுக்காக ஒரு

சமவிலை இருக்கும் கோட்பாட்டை இது ஸ்தாபிக்கிறது, "ஜீவனுக்கு ஜீவன்."

"அல்லாமலும், காளை வெள்ளாட்டுக்கடா இவைகளுடைய இரத்தம் பாவங்களை நிவிர்த்திசெய்யமாட்டாதே" என்று அப்போஸ்தலனாகிய பவுல் எபிரெயர்10:4-இல் கூறுகிறார். பழைய ஏற்பாட்டின் பலிகள் மனுஷனை மீட்காது என்று இவைகள் எடுத்துக்காட்டுகிறது. எதிலிருந்து அவர்களை மீட்க வேண்டும்? நாம் இதற்கானப் பதிலைப் பெறுவதற்கு, ஆதியாகமத்தில் குறிப்பிடப்படும் முதன்மையான பாவத்திடம் போக வேண்டும். "தேவனாகிய கர்த்தர் மனுஷனை நோக்கி: நீ தோட்டத்திலுள்ள சகல விருட்சத்தின் கனியையும் புசிக்கவே புசிக்கலாம். ஆனாலும் நன்மைதீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் புசிக்கவேண்டாம். அதை நீ புசிக்கும் நாளில் சாகவே சாவாய் என்று கட்டளையிட்டார்" ஆதியாகமம் 2:16,17.

ஏவாள் வஞ்சிக்கப்பட்டாள்; ஆதாம் மனப்பூர்வமாய்ப் பாவம் செய்தான். அந்த நாள் துவங்கி அனைவரும் மரணத் தீர்ப்புக்குள்ளானார்கள் (1 தீமோத்தேயு 2:12). இந்த மரணதீர்ப்பு அப்போஸ்தலனாகிய பவுலினால் ரோமர் 6:23-ஆம் வசனத்தில் உறுதிபடுத்தப்படுகிறது. "பாவத்தின் சம்பளம் மரணம்." ஆயினும் ஒரு நம்பிக்கையின் சுடர் கொடுக்கப்பட்டது. "தேவனுடைய கிருபைவரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினால் உண்டான நித்தியஜீவன்." கிறிஸ்துவோடு இந்தத் தொடர்பை 1 கொரிந்தியர் 15:22-ஆம் வசனத்தில் மேலும் அப்போஸ்தலனாகிய பவுல் தெளிவுபடுத்துகிறார். "ஆதாமுக்குள் எல்லாரும் மரிக்கிறதுபோல, கிறிஸ்துவுக்குள் எல்லாரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள்."

**ஒருவராகிலும் இல்லை**

இந்தக் கிரயத்தை மற்ற எந்த மனிதராலும் ஏன் செலுத்த முடியவில்லை? இதைப் புரிந்துகொள்வதற்கு இன்னும் சில வசனங்களை ஆராய வேண்டும். "ஒருவனாவது, தன் சகோதரன் அழிவைக் காணாமல் இனி என்றைக்கும் உயிரோடிருக்கும்படி" என்று சங்கீதம் 49:7-ஆம் வசனம் கூறுகிறது. கிறிஸ்து தந்தையாம் ஆதாமுக்கு ஈடுகிரயத்தை எவ்வாறு செலுத்த முடியும்? மேலும் அந்த மீட்புக் கிரயம் கல்லறையிலுள்ள அனைத்து மனுஷரையும் எவ்வாறு மீட்கும்? பாவத்தின் கோட்பாடு வம்ச வழியாகக் கடந்து வருவதை பழைய ஏற்பாட்டில் காணலாம். "பிதாக்கள் திராட்சக்காய்களைத் தின்றார்கள், பிள்ளைகளின் பற்கள் கூசிப்போயின என்னும் பழமொழியை நீங்கள் இஸ்ரவேல் தேசத்தைக்குறித்தச் சொல்லுகிறது என்ன?" என்று எசேக்கியேல் 18:2-ஆம் வசனத்தில் வாசிக்கிறோம்.

அப்போஸ்தலனாகிய பவுல் இந்தக் கோட்பாட்டை ஆதாமின் மரண தீர்ப்புக்கு ஒப்பிட்டு ரோமர் 5:12-ஆம் வசனத்தில் பேசுகிறார். "இப்படியாக, ஒரே மனுஷனாலே பாவமும் பாவத்தினாலே மரணமும் உலகத்திலே பிரவேசித்ததுபோலவும், எல்லா மனுஷரும் பாவஞ்செய்தபடியால், மரணம் எல்லாருக்கும் வந்ததுபோலவும் இதுவுமாயிற்று." ஒரு மனுஷன் (ஆதாம்) மரணத்திலிருந்து மீட்கப்பட்டால், ஆதாம் பெற்ற சாபம் ஆதாமின் முழு சந்ததிகளிடமிருந்து மீட்கப்படும் என்று இது பொருள்படுத்துகிறது. இந்தக் கோட்பாட்டை அப்போஸ்தலனாகிய பவுல் 1 தீமோத்தேயு 2:5-6 வசனங்களில் அவர் பொருத்திக்காட்டுகிறார். எந்த மனுஷனும் தன்னுடைய சகோதரனுக்காக அபூரணமான, விழுந்துபோன மாம்சத்தில் பரிபூரண மனுஷனாகிய ஆதாமுக்கு சமவிலைக் கிரயத்தை தேவனிடம் செலுத்த இயலாது என்பதே காரணமாகும். ஆகவே கிறிஸ்து இயேசு மனுஷனாவதற்கு, தேவனால் ஜெநிப்பிக்கப்பட்ட ஆவிக்குரிய லோகோஸ் பரலோக தந்தையினால் மாம்சமாக மாற்றப்பட்டு ஒரு ஸ்திரீயினிடத்தில் பிறந்தார்.

"அப்படியே, மனுஷகுமாரனும் ஊழியங்கொள்ளும்படி வராமல், ஊழியஞ்செய்யவும், அநேகரை மீட்கும்பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்கவும் வந்தார்" என்று மாற்கு 10:45-ஆம் வசனம் கூறுகிறது. ஒரு பரிபூரண மனுஷனை (ஆதாம்) மீட்பதற்கு ஒரு பரிபூரண மனுஷன் (மனுஷனாகிய கிறிஸ்து இயேசு) தேவைப்பட்டார். இந்த சிந்தனை 1 கொரிந்தியர் 15:21-ஆம் வசனத்தில் உறுதிபடுத்தப்படுகிறது. "மனுஷனால் மரணம் உண்டானபடியால், மனுஷனால் மரித்தோரின் உயிர்த்தெழுதலும் உண்டாயிற்று." ஒரு பரிபூரண மனுஷனுக்கு ஒரு பரிபூரண மனுஷனே ஈடுகிரயம். இந்தக் கிரயத்தைச் செலுத்துவதற்கு இயேசு தம்முடைய ஜீவனை மனப்பூர்வமாக சிலுவையில் கொடுத்தார். மீட்கும் பொருளின் செயல்முறையில் நாம் பார்க்கும்போது, விலையை நிர்ணயிப்பது, ஆதாமின் பரிபூரண ஜீவனுக்காக ஒரு பரிபூரண மனுஷ ஜீவன் தேவைப்பட்டது என்பதே முதல் படியாகும் (ரோமர் 5:18, 19).

விலையைப் பெற்றுக்கொள்வதற்கான செயலே இரண்டாம் படியாகும். இதற்கான கிரேக்க பதம் ஆன்டிலூட்ரான் (S0487). இதற்கு, "மீட்பு கிரயம் - மீட்கும் பொருள். மீட்கக்கூடிய பொருளுக்குக் கொடுக்கப்படும் பரிமாற்றம் - மீட்கும் பொருள்."

"தேவன் ஒருவரே, தேவனுக்கும் மனுஷருக்கும் மத்தியஸ்தரும் ஒருவரே. எல்லாரையும் மீட்கும்பொருளாகத் தம்மை ஒப்புக்கொடுத்த மனுஷனாகிய கிறிஸ்து இயேசு அவரே; இதற்குரிய சாட்சி ஏற்ற காலங்களில் விளங்கிவருகிறது" என்று நாம் 1 தீமோத்தேயு 2:5, 6-ஆம் வசனத்தில் வாசிக்கிறோம். தேவனுடைய நீதியைத் திருப்திபடுத்தும்படியாக ஏற்படுத்தப்பட்ட இந்த மீட்கும் பொருளாகிய மனுஷனாகிய கிறிஸ்து இயேசு பரிபூரணமாக நியாயப்பிரமாணத்தை நிறைவேற்ற வேண்டியவராக இருந்தார். "குற்றமில்லாத மாசற்ற ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தினாலே மீட்கப்பட்டீர்களென்று அறிந்திருக்கிறீர்களே" என்று 1 பேதுரு 1:19-ஆம் வசனத்தில் வாசிக்கிறோம். இயேசு பரிசுத்தராக, பாவமற்ற ஆட்டுக்குட்டியைப் போலிருந்தார் என்று இது குறிப்பிடுகிறது. "பரிசுத்தரும், குற்றமற்றவரும், மாசில்லாதவரும், பாவிகளுக்கு விலகினவரும், வானங்களிலும் உயர்ந்தவருமாயிருக்கிற இவ்விதமான பிரதான ஆசாரியரே நமக்கு ஏற்றவராயிருக்கிறார். அவர் பிரதான ஆசாரியர்களைப்போல முன்பு சொந்தப் பாவங்களுக்காகவும், பின்பு ஜனங்களுடைய பாவங்களுக்காகவும் நாடோறும் பலியிடவேண்டுவதில்லை; ஏனெனில் தம்மைத்தாமே பலியிட்டதினாலே இதை ஒரேதரம் செய்துமுடித்தார்" என்று இயேசுவைக்குறித்து அப்போஸ்தலனாகிய பவுல் எபிரெயர் 7:26-27-இல் குறிப்பிடுகிறார். இந்த வாக்கியத்தினாலும், வசனங்களில் பதிவு செய்யப்பட்ட இயேசுவின் வாழ்க்கையின் மாதிரியாகவும் இயேசு பரிபூரணமாக நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றினார் என்பதை நாம் அறிந்துகொள்கிறோம்.

நியாயப்பிரமாணத்தைப் பரிபூரணமாக நிறைவேற்றக்கூடியவர்களுக்கு என்ன வாக்குத்தத்தம் செய்யப்பட்டிருந்தது? இந்தப் பூமியின்மேல் நித்தியமாக வாழ்வதற்கான வாக்குத்தத்தமாக இருந்தது. ஆனால் இயேசு இதைச் செய்தாரா? இல்லை. அதற்குப் பதிலாக அவருடைய பரிபூரண ஜீவனை இந்த முழு மனுக்குலத்தை மீட்பதற்காக கல்வாரியில் கொடுத்தார். மனுக்குலத்தை மீட்பதற்காக அவர் கொடுத்த இந்த மீட்கும் பொருளுக்காக நியாயப்பிரமாணத்தைப் பரிபூரணமாக இயேசு நிறைவேற்ற வேண்டியதாயிருந்தது. (லேவியராகமம் 18:5-ஆம் வசனம் காண்க).

ஆனாலும் இயேசுவின் பலி அங்கீகரிக்கப்பட்டதை நாம் எவ்வாறு அறிந்துகொள்வது? இயேசுவின் பலியை அங்கீகரிப்பதற்கான முத்திரையே மரித்தோரிலிருந்து அவரை உயிர்த்தெழுப்பினதேயாகும். இயேசுவின் பலி ஏதோ ஒருவகையில் குறைவுபட்டிருந்தாலும் அவர் உயிர்த்தெழுந்திருக்க மாட்டார். அவருடைய பலி பரிபூரணமாகவும் அங்கீகரிக்கப்பட்டதாக இருந்ததினாலும் தேவன் அவரை எழுப்பினார். இதுவே இயேசுவின் உயிர்த்தெழுதலில் காணப்படும் முக்கியத்துவம். இதுவே தேவனுடைய அங்கீகரிப்பின் முத்திரையாக இருந்தது. ஆகவே தளர்த்தப்படுவதற்கான சரிநிகர் சமான விலையை இயேசு செலுத்தினார் (1 கொரிந்தியர் 15:17).

ஆனால் மூன்றாவது படியில் விலையைச் செலுத்துவதற்காக என்ன வார்த்தைக் குறிப்பிடப்படுகிறது? இதைக் கண்டுபிடிப்பதற்கு நாம் ஆராய வேண்டும். அவருடைய மரணம் வரைக்கும் இயேசுவின் பலி நிறைவடையவில்லை. இயேசுவின் மரணத்தின்போது மீட்கும் பொருள் செலுத்தப்பட்டதாக நமக்கு ஏதாகிலும் அறிகுறி காணப்பட்டதா? "இயேசு: பிதாவே, உம்முடைய கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன் என்று மகா சத்தமாய்க் கூப்பிட்டுச் சொன்னார்; இப்படிச் சொல்லி, ஜீவனை விட்டார்" என்று லூக்கா 23:46-ஆம் வசனம் கூறுகிறது. அவர் இறுதியாகச் சொன்ன "ஒப்புக்கொடுத்தேன்" என்ற வார்த்தைக்கு பாராலித்திமா (paralithemi) என்ற கிரேக்க வார்த்தைக் கொடுக்கப்பட்டுள்ளது (S3908). இதற்கு நம்பிக்கைக்குரியவர்களிடத்தில் பொறுப்புகளை ஒப்புக்கொடுத்தல் என்று பொருளாகும். இதைக்குறித்து நாம் இன்றைக்குரிய நிபந்தனைகளுக்கு உட்படுத்திச் சிந்திக்கலாம். கிறிஸ்துவின் பலியின் புண்ணியங்கள் நிபந்தனைக்கு உட்பட்டது. அதிலிருந்து ஒன்றும் எடுத்துக்கொள்ளவும் முடியாது, அதோடு எதையும் கூட்டிக்கொள்ளவும் முடியாது. தந்தையாகிய ஆதாம் மற்றும் அவருடை சந்ததி அனைவருக்கும் மீட்கும் பொருளைக்கொடுக்கும் ஒரு உன்னதமான நோக்கத்திற்காக இது சேமிப்பில் வைக்கப்பட்டது.

வசனங்களிலுள்ள கடைசி வார்த்தையில், மீட்கும் பொருளைக்குறித்து ஆராயும்போது, அது நான்காவது படிக்கு ஒப்பாய் உள்ளது. இது (Luo) என்ற கிரேக்க வார்த்தையாகும். S3089, இதற்கு "தளர்த்தப்படுதல்" என்று பொருள். "கட்டப்பட்ட ஒருவரை அவிழ்ப்பது, அதாவது கட்டவிழ்ப்பது, கட்டுதலிலிருந்து விடுதலையாக்குவது, விடுவிப்பது" என்று ஸ்ட்ராங்ஸ் கன்காடன்ஸ் கூறுகிறது. இந்த மீட்கும்பொருள் உடனடியாகச் செலுத்தப்பட்டுவிட்டதா? இல்லை, இனிவரக்கூடிய காலங்களில் நிச்சயமாக வாழக்கூடிய ஒவ்வொரு தனி நபருக்கும் இது சேமிப்பில் வைக்கப்பட்டுள்ளது.

இதைக்குறித்து இயேசு, யோவான் 10:17-18 வசனங்களில் விவரிக்கிறார். "நான் என் ஜீவனை மறுபடியும் அடைந்துகொள்ளும்படிக்கு அதைக் கொடுக்கிறபடியினால் பிதா என்னில் அன்பாயிருக்கிறார். ஒருவனும் அதை என்னிடத்திலிருந்து எடுத்துக்கொள்ளமாட்டான்; நானே அதைக் கொடுக்கிறேன், அதைக் கொடுக்கவும் எனக்கு அதிகாரம் உண்டு, அதை மறுபடியும் எடுத்துக்கொள்ளவும் எனக்கு அதிகாரம் உண்டு. இந்தக் கட்டளையை என் பிதாவினிடத்தில் பெற்றுக்கொண்டேன் என்றார்." இப்படியாக இயேசு மனப்பூர்வமாக தம்முடைய பலியின் புண்ணியத்தை சேமிப்பில் வைத்தபோது, மீட்கும் பொருளின் கிரயம் முழுமையாகச் செலுத்தப்பட்டது. கடத்தப்படும் சம்பவங்களில் பொதுவாக மீட்கும் பொருளுக்கான கிரயம் செலுத்தப்பட்டவுடன் அங்கு விடுதலை ஏற்பட வேண்டும். ஏனெனில் ஒருவரையொருவர் அவர்கள் நம்புவதில்லை. ஆனால் இந்த விஷயத்தில் இருதரப்பினரும் நம்பிக்கை உடையவர்களாக இருப்பதினால் மீட்கும் பொருளைச் செலுத்துவதும், கட்டவிழ்க்கப்படுவதும் வெவ்வேறு நேரத்தில் நடைபெறுகிறது.

இயேசு அவருடைய பலியின் புண்ணியங்களைத் தனிப்பட்ட நபருக்கு எப்பொழுது பயன்படுத்தினார்? ஒவ்வொரு தனிப்பட்ட நபர்களின் அர்ப்பணிப்பை தேவன் அங்கீகரிக்கும்படியாக இயேசு தம்முடைய பலியின் புண்ணியத்தினால் ஒவ்வொருவரையும் நீதிமானாக்கினார். இது நடைபெறும்பொழுது, அவர்கள் பரிசுத்த ஆவி மற்றும் ஜெபத்தின் வல்லமையைப் பெற்று தேவனோடு சமாதானமாகி தேவனுடைய புத்திரர்களாக மாறுவதற்கு கிறிஸ்துவுக்குள் புது சிருஷ்டிகளாக ஜெநிப்பிக்கப்படுகிறார்கள் (2 கொரிந்தியர் 5:17; யோவான் 3:1-2). இயேசு கிறிஸ்துவின் சீஷர்கள் முதன்முதலில் பரிசுத்த ஆவியைப் பெற்றபோது இந்தச் செயல் முறைகள் துவங்கியது என்று அப்போஸ்தலர் 2:1-4 வசனங்களில் கூறுகிறது. "பெந்தெகொஸ்தே என்னும் நாள் வந்தபோது, அவர்களெல்லாரும் ஒருமனப்பட்டு ஓரிடத்திலே வந்திருந்தார்கள். அப்பொழுது பலத்த காற்று அடிக்கிற முழக்கம்போல, வானத்திலிருந்து சடிதியாய் ஒரு முழக்கமுண்டாகி, அவர்கள் உட்கார்ந்திருந்த வீடு முழுவதையும் நிரப்பிற்று. அல்லாமலும் அக்கினிமயமான நாவுகள்போலப் பிரிந்திருக்கும் நாவுகள் அவர்களுக்குக் காணப்பட்டு, அவர்கள் ஒவ்வொருவர் மேலும் வந்து அமர்ந்தது. அவர்களெல்லாரும் பரிசுத்தஆவியினாலே நிரப்பப்பட்டு, ஆவியானவர் தங்களுக்குத் தந்தருளின வரத்தின்படியே வெவ்வேறு பாஷைகளிலே பேசத்தொடங்கினார்கள்." பெந்தெகொஸ்தே நாள் துவங்கி, கிறிஸ்துவைப் பின்பற்றும் சீஷர்களின் அர்ப்பணிப்புகள் அங்கீகரிக்கப்படும்போது, கிறிஸ்து தம்முடைய பலியின் புண்ணியங்களை அப்பொழுது பயன்படுத்துகிறார் (எபிரெயர் 9:24).

மீட்கும்பொருளும் மற்றும் உயிர்த்தெழுதலும் தேவனுடைய குணலட்சணத்தின் கைரேகையைப்போல வெளிப்படுத்துகிறது. தேவனுடைய ஞானம் முடிவைக்குறித்து துவக்கத்திலிருந்தே அறிந்திருந்தது. ஆதாம் பாவம் செய்வார் என்றும் தேவனுடைய நீதிக்குச் சரிசமமான ஒரு விலைக்கிரயம் தேவைப்படும் என்றும் அறிந்திருந்தது. மாம்சமாகி தம்முடைய ஜீவனை இந்த உலகத்திற்காகக் கொடுக்க மனப்பூர்வமாய் முன் வந்த லோகோசை, தேவனுடைய அன்பு மீட்கும் பொருளாக இந்த உலகத்திற்குக் கொடுத்தது.

இயேசுவை உயிர்த்தெழுப்புவதற்கு தேவனுடைய வல்லமை தேவைப்பட்டது. அதுபோல, இந்த உலகத்தில் வாழ்ந்த ஒவ்வொரு நபரையும் ஒருநாளில் தேவன் எழுப்புவார். கிறிஸ்துவின் பூமிக்குரிய இராஜ்யத்தில் தேவன் அவர்களின் சிந்தைகளை தமக்கு விருப்பமான ஒரு புதிய சரீரத்தில் வைப்பார். ஆகவே, "அவர் எழுந்தார்" என்ற வாக்கியம் தேவனுடைய மாட்சிமை மிக்க திட்டத்தில் வாழ்வுக்கு ஒரு முக்கிய படியாகும்.

## இன்றைய தீர்க்கதரிசனம்

# நகரமயமாக்கப்பட்ட உலகம்

"அப்படியே கர்த்தர் அவர்களை அவ்விடத்திலிருந்து பூமியின்மீதெங்கும் சிதறிப்போகப் பண்ணினார்; அப்பொழுது நகரம் கட்டுகிறதை விட்டுவிட்டார்கள்" (ஆதியாகமம் 11:8).

வரலாற்றின் பெரும் பகுதியில் மக்கள் கிராமப்புற வாழ்க்கை முறையில் வாழ்ந்தார்கள். எனினும் இன்று மக்கள் நகரங்களில் குடியேறுவதால் உலக மக்கள் தொகை நகர்மயமாக்கப்பட்டுள்ளது. நகர்புற பகுதிகள் என்பதின் வரைமுறை நாடுக்கு நாடு வேறுப்படும். ஐக்கிய நாடுகள் 20,000-க்கும் மேலானோர் குடியேறினால் நகர்புறம் என்றும் 1,00,000-க்கும் மேலானோர் குடியேறினால் நகரம் என்றும் வரையறுக்கிறார்கள். ஐக்கிய நாடுகளில் (United Nations) நகர்புற பகுதிகள் என்பது ஒரு நகரம் மற்றும் 50,000 குடிகளைக்கொண்ட புறநகர் ஆகும். இந்தப் பெருநகர்கள் சமூக மற்றும் பொருளாதார ரீதியில் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது.

இந்தப் போக்கு, மிக்சிகன் (Michigan) பல்கலைக்கழகத்தின் ஆய்வின்படி, 1950-2000, 50 ஆண்டு காலபகுதியில் தொடங்கியது. மக்கள் தொகை இயற்கையாகவே அதிகரித்ததும் (மரணத்தைக் காட்டிலும் அதிகப் பிறப்பு) தனிமைப்படுத்தப்பட்ட கிராமப்புற பகுதிகளிலிருந்து இடம்பெயர்தல் இந்தப் போக்கின் உந்துதல் ஆகும். பொதுவாகவே, கிராமப்புற பகுதிகளிலிருந்து வரும் ஏழை மக்களுக்குச் சிறந்த வாழ்க்கை, சிறந்த வாய்ப்புகள், அதிகச் சம்பளம், சிறந்த சேவைகள் நகரங்களில் கிடைக்கும் என்று கருதப்படுகிறது. இந்தக் கருத்து, ஆசியா மற்றும் ஆப்ரிக்காவிலுள்ள வளரும் நாடுகளின் உண்மையாகும்.

உலகின் மொத்த மக்கள் தொகையாகிய ஏழு மில்லியனில் பாதிக்கும் மேலான மக்கள் நகர்புறங்களில் வசிக்கிறார்கள். இது 2030-க்குள் ஐந்து மில்லியனாக உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. சீனா போன்ற வளரும் நாடுகளில்தான் அதிகமான உயர்வை நாம் காணமுடியும். இப்போது இங்கு இரண்டு பில்லியன் மக்கள் நடுத்தர வர்க்கமாகக் கருதப்படுகிறார்கள். U.S. $50,000-லிருந்து U.S. $5,00,000 இடையே செல்வம் 109 மில்லியன் சீனர்கள் (சீனர்களின் மொத்த மக்கள் தொகை 1.5 பில்லியன்) வைத்துள்ளனர் என்பது, அக்டோபர் 2015-இல் வெளியிடப்பட்ட Credit Suisse-இன் ஆய்வில் தகவல் ஆகும். (வேலையின்மை போன்றவற்றால் ஏற்படும் தற்காலிக மாற்றத்தைத் தவிர்க்க, வருமானத்தை அல்லாமல் Credit Suisse செல்வத்தை அளவிட்டார்). McKinsey ஆலோசனைக் குழுவின் ஆய்வின்படி, 2022-குள் 75 சதவீதத்திற்கும் மேலான சீன நகர்புற நுகர்வோர், ஓர் ஆண்டிற்கு 60,000 முதல் 229,000 ரென்மின்பி (renminbi) வரை ($9,000 முதல் $34,000 வரை) சம்பாதிப்பர்.

{ஆதாரங்கள்: U of M, United Nations Population Fund, McKinsey Consulting, Zurich Insurance Group-ஆல் வெளியிடப்பட்ட நகர்மயமாக்கல் மற்றும் சமூக மாற்றம் - Urbanization and SocialChange}.

### உருவாக்கப்பட்ட புதிய பிரச்சனைகள்

நகர்புற மக்கள் தொகை அதிகரிப்பு பலருக்குச் சிறந்த பொருளாதார வாழ்வைக் கொடுத்திருந்தாலும், சமூகத்தில் புதிய பிரச்சனைகளைக்கொண்டுவந்துள்ளது. இனங்களுக்கு இடையே பதற்றம் உருவாவதால், பல நாடுகளில் அதிகார மாற்றம் தோன்றுகிறது. மக்கள் தொகை செறிவில் ஏற்படும் மாற்றங்களால், சமூகங்களில் மற்றும் தொழிலாளர் தொகுப்புகளில் அவர்கள் இடையே இருக்கும் வேறுபட்ட மதிப்புகள், நடத்தைகள், அணுகுமுறைகள் மற்றும் பிரச்சனைகளைக் கையாளும் வழிகளினால் பல மோதல்கள் உண்டாயிருக்கின்றன. நீண்ட காலமாக இருந்த நடைமுறைகள் அல்லது நம்பிக்கைகளைத் தாக்கி, சிறப்பு ஆர்வம் கொண்ட குழுக்கள் உண்டாகும்.

இந்தியா போன்ற நாடுகளில் தீவிரமான நெருக்கடி பெருகுகின்றன. இங்கு, 285 மில்லியன் மக்கள் நகர்புற அமைப்புகளில் வாழ்கின்றார்கள் (இது 28 சதம் மக்கள் தொகையே ஆகும்). மக்கள் தொகையின் அளவு, ஏடாகூடம், நுகர்ப்புற பகுதிகளின் திட்டமிடப்படாத வளர்ச்சி மற்றும் உள்கட்டமைப்பின் பற்றாக்குறை, குடியிருத்தல், துப்புரவு, போக்குவரத்து, குடிநீர், மின்சாரம், சுகாதாரம் மற்றும் கல்வி போன்ற பொது பயன்பாடுகள் மீது ஒரு கடும் அழுத்தத்தை ஏற்படுத்தியுள்ளது. வறுமை கிராமத்தில் குடியிருப்போர் இடையில் காணப்படும் வேலையின்மை மற்றும் குறைந்த ஊதியத்தில் வேலை, பிச்சை, திருட்டு மற்றும் வேறு சமூக நோய்கள் வெறியாட்டம் ஆடுகிறது.

2030-க்குள், பாதிக்கு மேலான இந்திய மக்கள் தொகை அதாவது 400 மில்லியன் மக்கள், நகர்புற பகுதிகளில் வசிப்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**தேவனின் இராஜியம் ஒரு பதில்**

சமீப நூற்றாண்டுகளில், நகரமயமாக்கலின் விளைவாகப் பொருளாதார வாழ்க்கை தரங்களில் படிப்படியான உயர்வு காணப்படுகிறது. இருப்பினும், 1.3 பில்லியன் மக்கள் இன்னும் தீவிர வறுமையில் வாழ்கிறார்கள் (ஒரு நாளைக்கு < $1.25). ஒரு ஆண்டிற்கு 13 மில்லியன் மக்களுக்குமேல் தொற்று நோயால் இறக்கிறார்கள். மற்றும் அரை மில்லியன் மக்கள் ஒரு வருடத்தில் கொல்லப்படுகிறார்கள். பாபெல்லின் (Babel) நாட்கள் சிதறடிக்கப்பட்ட மக்கள் அதன்பின் தெய்வீக வழிகாட்டுதல் இல்லாமல் வளர்ந்தார்கள். தீமை இன்னும் பெரிய அளவில் நிலவுகிறது. தங்கள் சொந்த மூளையை உபயோகப்படுத்தி, மனிதகுலம் பெரிய கலாச்சார அராஜகமாக உருவாகியுள்ளது.

கிறிஸ்துவால் ஆட்சி செய்யப்படும் தெய்வீக அரசாங்கம் நிறுவப்பட்டபின் இந்த நிலைமை ஒழிக்கப்படும் என்று வேதம் உறுதி கூறுகிறது (மத்தேயு 6:10). இந்த அரசாங்கம், சமூகத்தை சீரமைத்து உலகில் வாழ்பவர் மற்றும் வாழ்ந்தவர் அனைவருக்கும் சம வாழ்க்கை தரத்தை உண்டுபண்ணும். "இதைக்குறித்து நீங்கள் ஆச்சரியப்படவேண்டாம்; ஏனென்றால் பிரேதக்குழிகளிலுள்ள அனைவரும் அவருடைய சத்தத்தைக் கேட்குங்காலம் வரும்; அப்பொழுது, நன்மைசெய்தவர்கள் ஜீவனை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும், தீமைசெய்தவர்கள் ஆக்கினையை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும் புறப்படுவார்கள்" (யோவான் 5:28-29). அந்த இராஜ்யத்திற்கும் இந்த உலகின் இராஜ்யங்களுக்கும் மகத்தான வேறுபாடு இருக்கும்.

கிறிஸ்துவின் இராஜ்யம் நீதியின் அடிப்படையில் இருக்கும் (ஏசாயா 9:7, 11:4). இராஜ்யத்தின் தலைவர்களாகிய கிறிஸ்து மற்றும் சபையின் (1 பேதுரு 2:9; வெளிப்படுத்தல் 20:6) மூலம் அனைவரும் நீதியைக் கற்று பரிசுத்தத்திற்குக்கொண்டுவரப்படுவார்கள். "என் ஆத்துமா இரவிலே உம்மை வாஞ்சிக்கிறது; எனக்குள் இருக்கிற என் ஆவியால் அதிகாலையிலும் உம்மைத் தேடுகிறேன்; உம்முடைய நியாயத்தீர்ப்புகள் பூமியிலே நடக்கும் போது பூச்சக்கரத்துக்குடிகள் நீதியைக் கற்றுக்கொள்வார்கள்" (ஏசாயா 26:9).

தாம் எங்கிருந்தோம் என்று அறியாமலும், அவர்கள் சென்ற பிறகு உலகில் என்ன நடந்தது என்று அறியாமலும் பூமியின் மக்கள் உயிர்த்தெழுவார்கள். முற்பிதாக்களின் வழிகாட்டுதலோடும், கிறிஸ்து மற்றும் சபையின் மேற்பார்வையில், எல்லா ஜனத்திற்கும் தேவனின் வழிகள் கற்றுத்தரப்படும் (ஏசாயா 35:8-10).

குடிகள் ஜீவியத்தைத் தக்கவைத்துக்கொள்ள தேவையான எல்லா வளங்களையும் ஏதேன் தோட்டம் வழங்கியது (ஆதியாகமம் 1:29). அதுபோல, மாற்றியமைக்கப்பட்ட பூமி தம் குடிகளின் சமத்துவமான பங்குடன் அனைவருக்கும் ஏராளமாக வளங்களை வழங்கும். இந்த இராஜ்யத்தின் வேலைகள், சுமாதானம், நல்லிணக்கம், சமூகம் மற்றும் பொருளாதார சமத்துவத்தைக்கொண்டுவரும் (ஓசியா 13:14; ஏசாயா 65:21-23; மீகா 4:4).

சீர்திருத்தம், மனிதனுக்கு நித்திய ஜீவன், பரிபூரண ஆரோக்கியம் பூமியின்மேல் ஆட்சி மற்றும் தேவனின் மகன் என்ற நிலையைக்கொண்டுவரும் - இந்தக் காரியங்கள் ஆதாம் ஏதேன் தோட்டத்தில் கீழ்ப்படியாமையின் காரணத்தால் தொலைத்தவை. சீர்திருத்தம் பூமியின் மேலுள்ள சாபத்தை அகற்றிவிடும். தேவனுக்கு எதிரான எல்லா ஆவிக்குரிய மற்றும் உலகப்பிரகாரமான கிளர்ச்சிகளை இந்த இராஜ்யம் முடிவுக்குக்கொண்டுவரும். மரணத்தையும் சேர்த்து தேவனின் எல்லா எதிரிகளும் அழிக்கப்படும். அதனால் தேவனே, "சகலத்திலும் சகலமுமாயிருப்பார்" (1 கொரிந்தியர் 15:28).

கிறிஸ்துவின் இராஜ்யத்தின் பயன் உலகம் முழுவதற்கும் இருக்கும். ஆதாமின் மரணமாகிய சிறையிலிருந்து மனுக்குலத்தை விடுவிக்கும் (ஏசாயா 42:7, 49:9, 61:1). இந்த இராஜ்யம் தற்போதைய உலக இராஜ்யங்களைக் கலைத்து, சகல ஜனத்தையும் ஒரே பரிசுத்த தேசமாக மாற்றிவிடும் (சங்கீதம் 2:9; தானியேல் 2:44; வெளிப்படுத்தல் 2:27). இன்றைய பாவம் மற்றும் சுயநலத்தின் சூழலை மாற்றி அனைவரும் எதிர்பார்க்கும் சொர்க்கத்தை உண்டுபண்ணும் (ரோமர் 8:19; வெளிப்படுத்தல் 21:1-4).

இந்த இராஜ்யத்தில், சமுத்திரம் ஜலத்தினால் நிறைந்திருக்கிறதுபோல் (ஏசாயா 11:9), தேவனைப்பற்றிய அறிவு உலகத்தில் நிறைந்திருக்கும். "இனி ஒருவன் தன் அயலானையும், ஒருவன் தன் சகோதரனையும் நோக்கி: கர்த்தரை அறிந்துகொள் என்று போதிப்பதில்லை; அவர்களில் சிறியவன்முதல் பெரியவன்மட்டும், எல்லாரும் என்னை அறிந்துகொள்வார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்; நான் அவர்கள் அக்கிரமத்தை மன்னித்து, அவர்கள் பாவங்களை இனி நினையாதிருப்பேன்" (எரேமியா 31:34). "அப்பொழுது ஜனங்களெல்லாரும்

கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொண்டு, ஒருமனப்பட்டு அவருக்கு ஆராதனை செய்யும்படிக்கு, நான் அவர்கள் பாஷையைச் சுத்தமான பாஷையாக மாறப்பண்ணுவேன்" (செப்பனியா 3:9). தேவனின் வார்த்தை எருசலேமிலிருந்து புறப்பட்டு, யேகோவா தேவனைப்பற்றி அறிய உலகமெங்கும் பரவும் (ஏசாயா 2:3; எரேமியா 31:34).

தேசங்கள், ஜனங்கள், இனங்கள் மற்றும் ஜாதிகளுக்கு இடையே இருக்கும் வன்முறை மற்றும் விரோதம் முடிவுக்கு வரும். இராஜ்யத்தின் அதிகாரத்தால், "என் பரிசுத்த பர்வதமெங்கும் தீங்குசெய்வாருமில்லை; கேடுசெய்வாருமில்லை; சமுத்திரம் ஜலத்தினால் நிறைந்திருக்கிறதுபோல், பூமி கர்த்தரை அறிகிற அறிவினால் நிறைந்திருக்கும்" (ஏசாயா 11:9). மனிதகுலம், கிறிஸ்துவின் இராஜ்யத்தின் வழிகாட்டுதலால், "அவர் ஜாதிகளுக்குள் நியாயந்தீர்த்து, திரளான ஜனங்களைக் கடிந்துகொள்வார்; அப்பொழுது அவர்கள் தங்கள் பட்டயங்களை மண்வெட்டிகளாகவும், தங்கள் ஈட்டிகளை அரிவாள்களாகவும் அடிப்பார்கள்; ஜாதிக்கு விரோதமாய் ஜாதி பட்டயம் எடுப்பதில்லை, இனி அவர்கள் யுத்தத்தைக் கற்பதுமில்லை" (ஏசாயா 2:4). தங்களுக்கும் மற்றவர்களுக்கும் ஆசீர்வாதங்களை வருவிக்கும்படிக்கு அழிவுக்குரிய தங்களுடைய போராயுதங்களைச் சமாதானத்தின் போராயுதங்களாக மாற்றிக்கொள்வார்கள். தேவன் மற்றும் முழு அன்பின் அடிப்படையில் அனைவரும் மனித இனத்தின்மேல் செலுத்தும் சமாதானத்தைக் கற்றுக்கொள்வார்கள். அக்காலத்தை ஆர்வத்தோடு எதிர்நோக்குவோமாக!

**சங்கிலியாண்டபுரம் வேதமாணவர்கள்**, **திருச்சி.**

**கைப்பேசி : 9244611241, 8122224919**